கல்கி




ALKI ஜன் 10, 1951 4 அணா


"லக்ஸ் டாய்லட் சோப்பிற்கு
நான்
மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்"
என்று கூறுகிறார் கண்ணாம்பா
இனிய மணத்துடன் கூடிய இந்த வெண்மையானதும் சுத்தமானதுமான சோப் உங்கள் சருமத்தை வசீகரமாகச் செய்யும்!
LUX
சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்
LTS. 286-172 TM



கணபதி பிக்சர்ஸ்
தேவகி
தெவிட்டாத நகைச்சுவை!
தேம்பவைக்கும் சோகச் சுரங்கம்!
கதை, வசனம்:
மு. கருணாநிதி
டைரக்ஷன்: R.S. மணி
ஸ்டுடியோ: மாடர்ன் தியேட்டர்ஸ்
விரைவில் வருகிறது





KANTI


பொருள் அடக்கம்

கல்கி

மலர் 10 இதழ் 45 | 1951 ஜூன் 10 | கர ௵ வைகாசி 27உ.

போட்டி போட வேண்டாம்!	...	... 9
பொதுஜனம் சொல்லுகிறார்!	சாஸ்திரி	... 10
"நான் படித்தது பச்சைப் புத்தகம்!"	...	... 13
"புதுமைப் பித்தன்" தினம்	...	... 14
"பத்திரிகைச் சுதந்திரம் பறி போகிறது!"	...	... 15
அட்டைப்பட விளக்கம்	...	... 16
பொன்னியின் செல்வன்	கல்கி	... 17
அக்கப்போர்	...	... 26
எத்தனை நிலம் வேண்டும்?	...	... 27
ஆரோக்கிய ரகசியம்	வி. என். குமாரசாமி	... 30
நால்வர்	...	... 31
தோன்றில் புகழொடு தோன்றுக!	அ. கேசவமூர்த்தி	... 32
கருதி சேருமா?	கி. ரா. கோபாலன்	... 33
கமலாவின் அண்ணா!	என். கே. பத்மநாபன்	... 38
பூதம் காத்த சுரங்கம் (பாப்பா மலர்)	மாலு	... 41
நல்ல அநுபவம்	சங்கர சுப்பு	... 46
படித்துப் பாருங்கள்!	...	... 51
நிழலும் வெய்யிலும்	ரா. வீ.	... 53
மத்திய கேந்திரம்	ஜெயமணி	... 57
மன்னி நல்லவள்	புஷ்யன்	... 59
கணித மேதைகள்	...	... 62

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



மெஸர்ஸ் டி. ஏ. டேய்லர் & கம்பெனி (மதராஸ்) லிமிடெட் டைரக்டரும், தென்னிந்திய சேம்பர் ஆப் காமர்ஸ் வைஸ் பிரஸிடெண்டுமான ஸ்ரீ R. K. மூர்த்தி, இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் இதர ஐரோப்பிய நாடுகளுக்கு வியாபார நுணுக்கங்களை அறிய சென்ற மே மாதம் 25-ம் தேதி புறப்பட்டுச் சென்றுள்ளார். ஜூன் மாதம் 11 முதல் 16-ம் தேதி வரை லிஸ்பனில் (போர்ச்சுகல்) நடக்க இருக்கும் இன்டர் நேஷனல் சேம்பர் ஆப் காமர்ஸ் வருஷாந்திரக் கூட்டத்தில் இந்திய நேஷனல் கமிட்டியின் பிரதிநிதியாக பங்கெடுத்துக் கொள்வார். நான்கு மாத காலம் வெளிநாட்டுச் சுற்றுப் பிரயாணத்திற்குப் பிறகு செப்டம்பர் இறுதியில் அவர் இந்தியா திரும்பி வருவார்.

திருநெல்வேலி நகர சபையின்
தேசீயப் பொருட்காட்சி & சுகாதார விழா - 1951

10 - 6 - 51 முதல் 1 - 7 - 51 முடிய

22 நாட்களிலும் இனிய இசைக் கச்சேரிகள், நடனங்கள்
நாடகங்கள், முதலிய நிகழ்ச்சிகளின் விவரம்

தினசரி இரவு 9 மணிக்கு

10-6-51	ஞாயிறு	திரு எம். கே. தியாகராஜ பாகவதர் —	இசை
11-6-51	திங்கள்	திருமதி எம். எல். வஸந்தகுமாரி —	இசை
12-6-51	செவ்வாய்	குமாரி பாரதி —	நடனம்
13-6-51 முதல் 19-6-51 முடிய		டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகங்கள்	
20-6-51	புதன்	திருமதி கே. பி. சுந்தராம்பாள் —	இசை
21-6-51	வியாழன்	திருமதி வைஜயந்திமாலா —	நடனம்
22-6-51 முதல் 24-6-51 முடிய		தேவி நாடக சபையாரின் நாடகங்கள்	
25-6-51	திங்கள்	நடராஜ் - சகுந்தலா கோஷ்டியார் —	நடனம்
26-6-51	செவ்வாய்	சூலமங்கலம் சகோதரிகள் —	இசை
27-6-51 முதல் 29-6-51 முடிய		சக்தி நாடக சபையாரின் நாடகங்கள்	
30-6-51	சனி	பி. எல். சரஸ்வதி சகோதரிகள் —	இசை
1-7-51	ஞாயிறு	லலிதா - பத்மினி —	நடனம்

மலையாளத்துக் கத்திச் சண்டை, சர்க்கஸ் விளையாட்டுகள்,
தீயில் பாய்தல், அற்புதமான சைக்கிள் விளையாட்டுக்கள்,
கும்பகோணம் பொம்மலாட்டம், சினிமாக் காட்சிகள் முதலிய
பல நிகழ்ச்சிகள் தினந்தோறும் நடைபெறும்

●

22 நாட்களும் சேர்த்து சீசன் டிக்கட் வாங்குவது மிகவும் லாபகரமானது !

சீசன் டிக்கட் கட்டணம்		தினசரிக் கட்டணம்	
புரவலர்	ரூ. 100/-		
முதல் வகுப்பு	ரூ. 60/-	முதல் வகுப்பு	ரூ. 5/-
இரண்டாவது வகுப்பு	ரூ. 35/-	இரண்டாவது வகுப்பு	ரூ. 3/-
மூன்றாவது வகுப்பு	ரூ. 25/-	மூன்றாவது வகுப்பு	ரூ. 2/-
நான்காவது வகுப்பு	ரூ. 15/-	நான்காவது வகுப்பு	ரூ. 1/-

குறிப்பு :—பொருட்காட்சியின் லாபம் முழுவதும் முனிசிபல் "பெண்கள் குழந்தைகள் வைத்தியசாலை" கட்டுவதற்கு உபயோகிக்கப்படும்.

பொருட்காட்சிக் கமிட்டியார்

கல்கி

மலர் 10 | தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார் | இதழ் 45

போட்டி போட வேண்டாம்!

சென்ற வருஷத்தில் இந்த நாளில் ஸ்ரீ துரைராஜன் என்னும் மருந்துக் கடைக்காரர் ஒருவருடைய மூளை கொஞ்சம் வேலை செய்தது. சுதந்திர இந்தியாவின் அரசியல் சாஸனத்தை அவர் படித்தார். சென்னை அரசாங்கம் அமுல் நடத்தும் கம்யூனல் ஜி. ஓ. என்னும் வகுப்புவாரி உத்தரவு அந்த சாஸனத்துக்கு விரோதமானது என்று அவருக்குத் தோன்றியது. உடனே பிரபல வக்கீல்களைக் கலந்து ஆலோசித்தார். ஹைக்கோர்ட்டில் வழக்கு தாக்கலாயிற்று.

வழக்கு விசாரணை நடந்து முடிந்தது. அரசியல் சாஸனத்துக்குச் சென்னை வகுப்புவாரி உத்தரவு முரணானதுதான் என்று மூன்று நீதிபதிகள் சேர்ந்து தீர்ப்பளித்தார்கள்.

சென்னை சர்க்கார் இந்தத் தீர்ப்பின் பேரில் பெடரல் கோர்ட்டில் அப்பீல் செய்தார்கள். பெடரல் கோர்ட்டின் ஐந்து நீதிபதிகள் சேர்ந்து ஏகமனதாக சென்னை வகுப்புவாரி உத்தரவு அரசியல் சாஸனத்துக்கு முரணானதுதான் என்று தீர்ப்பு அளித்தார்கள்.

ஆகவே, சுதந்திர இந்தியாவில் பின் தங்கிய வகுப்பினருக்கு விசேஷ கல்வி வசதிகள் செய்து கொடுக்க அரசியல் சாஸனத்தின்படி இடமில்லை என்று ஏற்பட்டது.

இந்த நிலையைக் குறித்து அரசியல் சாஸனத்தை நிர்மாணித்த தலைவர்கள் யோசித்துப் பார்த்தார்கள். பின் தங்கியவர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் விசேஷ வசதி தர வேண்டியது அவசியம் என்பது அவர்கள் கருத்து. இல்லாவிட்டால் அரசியல் சுதந்திரம் அர்த்தமற்றதாகி விடும். ஆகவே, அரசியல் சாஸனத்தையே திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. பார்லிமெண்டில் ஜவாஹர்லால் நேருவே மேற்படி திருத்தத்தைக் கொண்டு வந்தார்: நிறைவேற்றினார்.

திருத்தப்பட்ட சாஸன விதிகளின்படி உசிதமான ஏற்பாடுகளைச் சென்னை அரசாங்கத்தார் செய்வார்கள் என்று எதிர்பார்க்கலாம். துஷ்பிரயோகம் ஒன்றும் நடைபெறாது என்று ஜவாஹர்லால்ஜி தமது நம்பிக்கையைத் தெரிவித்திருக்கிறார். அவருடைய நம்பிக்கையைச் சென்னை சர்க்கார் நிறைவேற்றி வைப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

சென்ற ஒரு வருஷமாக மக்களின் மனதைக் குழப்பி வந்த இந்த விவகாரம் எவ்வளவு சின்ன விஷயத்திலிருந்து எழுந்தது என்பதை இச்சமயத்தில் ஞாபகப்படுத்திக் கொள்வது நலம்.

சர்க்கார் பொறி இயல் (என்ஜினியரிங்) கலாசாலையிலும் வைத்திய கலாசாலையிலும் படிக்க இடம் பெறுவது பற்றி எழுந்த விவகாரந்தான்.

மற்றக் கலாசாலைகளில் சேர்வதுபற்றி இப்போது கஷ்டம் எதுவும் இல்லை. சென்ற இரண்டு ஆண்டுகளில் ஏராளமான புதிய கலாசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகையால் படிக்க விரும்பும் எல்லா மாணவர்களுக்கும் இடம் கிடைக்கும். ஆகையால் வகுப்புவாரித் தொல்லையே கிடையாது.

பொறி இயல்—வைத்திய கலாசாலைகள் சம்பந்தமாகவே வழக்கு எழுந்தது. இரண்டு கோர்ட்டுகளில் விசாரணை நடந்து தீர்ப்பு ஆயிற்று. அரசியல் சாஸன விதிகளும் மாற்றப் பட்டன.

காரியம் எவ்வளவு சிறியது, அதனால் விளைந்த ஆர்ப்பாட்டம் எவ்வளவு பெரியது என்பதை அனைவரும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். முக்கியமாக,

பொதுஜனம் சொல்லுகிறார்! - சாஸ்திரி





⑤... "பேஷ்! பேஷ்! என் நலன்களைப் பாதுகாக்க எத்தனைக் கட்சிகள் கச்சை கட்டுகின்றன?"..
⑥... "என்னை உய்விக்கத்தான் இந்த மகாநாடு நடக்கிறது, தெரியுமா?."
⑦.. "பலே! கமிட்டிகளும் கமிஷன்களும் என் அதிர்ஷ்டம் எங்கே ஒளிந்து கொண்டிருக்கிறது என்று தேடுகின்றன!".
⑧ "ஆனால் இது என்ன மாயம்?.. எனக்காக இத்தனை பேர்கள் தொண்டும் தியாகமும் செய்து கூட எனக்கு உணவு இல்லை, உடை இல்லை, ஒன்றும் இல்லையே!"

பிராம்மணர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதிலும் முக்கியமாக, பிராம்மண வாலிபர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

"பிராம்மணர்கள்" என்று நாம் குறிப்பிடும்போது, "பிராம்மணர் யார்!" என்ற கேள்வி ஒன்று எழுகிறது. நல்ல வேளையாக இதைத் தீர்த்துக் கொள்ள ஹைக்கோர்ட்டுக்கோ சமஷ்டி கோர்ட்டுக்கோ போக வேண்டியதில்லை. "பிரம்மத்தை அறிந்தவன் பிராம்மணன்" என்று வேதங்கள் கோஷிக்கின்றன. அந்த நிபந்தனைப்படி இப்போது பிராம்மணர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று கண்டு தெளிவது எளிதன்று. ரமண ரிஷியும் அரவிந்த முனிவரும் அனைவரும் அறிந்த பிராம்மணர்கள்; பிரம்மத்தை அறிந்தவர்கள். அவர்கள் பிரம்மத்துடனே இரண்டறக் கலந்து விட்டார்கள்.

பரம்பரையாகப் பிராம்மண சாதியில் பிறந்திருப்பதால் 'பிராம்மணர்கள்' என்று வழங்கப்படுவோரையே நாம் இங்கே குறிப்பிடுகிறோம். இந்த சாதியில் அறிவாளிகளும் இராஜ தந்திரிகளும் மகா கவிகளும் மகா வித்வான்களும் தியாகிகளும் தர்மவான்களும் பலர் பிறந்திருக்கிறார்கள். தேசப் பொது நலத்துக்காகத் தியாகம் செய்வது என்பது இந்த நாட்டில் பிறந்தவர்களுக்குப் புதிய காரியம் அல்ல.

இதையெல்லாம் மனதில் வைத்துக் கொண்டு பிராம்மண வாலிபர்கள் நாம் செய்யும் இந்த விண்ணப்பத்தைக் கவனிப்பார்களாக.

* * *

வகுப்புவாரி உத்தரவின் பேரில் போட்ட வழக்குகளினாலோ தீர்ப்புகளினாலோ பிராம்மண சாதிக்கு ஏதாவது நன்மை உண்டு என்று உங்களில் யாராவது எண்ணினால் அது பெருந்தவறாகும். நன்மை கிடையாது; ஆனால் தீமை ஒன்று நிச்சயமாக உண்டு.

அந்தத் தீமை, படித்த பிராம்மணரல்லாதாரிடமும் அரசியல் பிராம்மணரல்லாதாரிடமும் முன்னைக் காட்டிலும் அதிகமாகத் துவேஷம் வளர்ந்திருப்பதுதான்.

"ஓ! அந்தத் துவேஷம் நம்மை என்ன செய்துவிடும்!" என்று நீங்கள் நினைக்கலாகாது. துவேஷம் மொத்தத்தில் பொல்லாதது. துவேஷிக்கிறவனும் தீங்கு அடைவான்; துவேஷிக்கப்படுகிறவனும் தீங்கு அடைவான். சமூகத்துக்கும் தேசத்துக்கும் துவேஷம் வளர்வதினால் தீமைதான். ஆகையால் துவேஷத்தை வளர்ப்பதற்கு யாரும் காரணமாயிருக்கக் கூடாது.

கூடுமான வரையில் வகுப்புத் துவேஷம் வளராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். துவேஷம் எதனால் ஏற்படுகிறதோ அந்தக் காரணத்தைப் போக்க வேண்டும்.

பிரஸ்தாப விஷயத்தில் துவேஷ காரணத்தை நீக்குவதற்கு என்ன வழி!

பொறி இயல்—வைத்திய கல்லூரிகளில் இடம் பிடிப்பதற்குப் பிராம்மண வாலிபர்கள் போட்டி போடாமலிருப்பதுதான்.

எது வந்தாலும் வரட்டும் என்று போட்டி போடுவதற்கு அவ்வளவு முக்கிய காரியந்தானா என்பதையும் யோசித்துப் பார்க்க வேண்டும்.

ஒரு பொருள் கிட்டுவது அரிதாயிருந்தால் இவ்வுலகில் அதற்குக் கிராக்கியும் அதிகமாகி விடுகிறது. அந்தப் பொருளினால் ஏதேனும் பயன் உண்டா என்று கூடப் பலர் சிந்தித்துப் பார்ப்பதில்லை. தீவிரமாகப் போட்டியில் இறங்குகிறார்கள்; அதனால் பொருளின் கிராக்கி இன்னும் அதிகமாகிறது.

என்ஜினியரிங் கலாசாலையில் சேர்ந்து விட்டால் புருஷார்த்தம் நான்கும் சித்தியாகி விடும் என்ற நம்பிக்கை நம்மவர்களிடையே சில காலமாகப் பரவி யிருக்கிறது. இது குருட்டு நம்பிக்கையே தவிர வேறில்லை.

பொறி இயல் அல்லது வைத்தியக் கல்லூரியில் படித்துத் தேறி வெளி வர ஒரு வாலிபன் எவ்வளவு காலமும் பொருளும் செலவு செய்கிறான்;—வெளி வந்த பிறகு அவனுக்குக் கிடைப்பது என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இப்போதுள்ள நிலைமையோடு ஐந்து வருஷத்துக்குப் பிற்பாடு ஏற்படக் கூடிய நிலைமையையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

ஐந்து வருஷத்துக்குப் பிறகு நாடெங்கும் பொறி இயல் தேறிய இளைஞர் மயமாயிருக்கும். இப்போது கிடைக்கும் ஓவர்ஸியர் வேலையாவது அப்போது அவர்களுக்குக் கிடைக்குமா என்பது சந்தேகந்தான்.

ஐந்து வருஷத்திற்குப் பிறகு என்ஜினியர்கள்—டாக்டர்கள் அந்தஸ்தைக் காட்டிலும் கலாசாலை ஆசிரியர்களின் அந்தஸ்து உயர்வாக இருந்தால், அதில் சிறிதும் ஆச்சரியமிராது.

சுதந்திர இந்தியாவில் படித்த வாலிபர்களுக்குப் பல துறைகளும் சந்தர்ப்பங்களும் காத்திருக்கின்றன. உங்களைச் சுற்றிலும் கூர்ந்து பாருங்கள்; நாலா திசைகளிலும் நன்றாகப் பாருங்கள்! போட்டியில்லாத துறைகளில் புகுந்து எவ்வளவு பேர் எவ்வளவு உன்னதமான பதவிகளை அடைந்திருக்கிறார்கள்!

இப்போது கடினமாகத் தோன்றும் துறைகள் பிற்காலத்தில் மிக்க பயனை அளிக்கும்; இப்போது பிரமாதமாகத் தோன்றும் காரியங்கள் வருங்காலத்தில் வெறும் ஏமாற்றமாக முடியும்.

இதை யெல்லாம் பிராம்மண வாலிபர்கள் சிந்தித்துப் பார்ப்பார்களாக. சிந்தித்துப் பார்த்து, சில காலத்துக்குப் போட்டியுள்ள காரியம் எதையும் நாடாமல் வேறு துறைகளில் தங்கள் அறிவையும் காலத்தையும் செலவிடுவார்களாக.

இரண்டு மூன்று வருஷ காலம் பிராம்மண வாலிபர்கள் பொறி இயல் — வைத்தியக் கல்லூரிகளில் சேர விண்ணப்பம் போடாமலிருந்தால், பிரமாத நஷ்டம் ஒன்றும் வந்துவிடாது. அவர்களுக்கும் சமூகத்துக்கும் நன்மையே விளையும் என்பதில் சந்தேகமில்லை.

அவ்விதமே போட்டிக்குக் காரணமாயுள்ள காங்கிரஸ் ஸ்தாபனங்கள்—சட்ட சபை ஸ்தானங்கள் முதலியவற்றிலிருந்தும் பிராம்மணர்கள் சில காலத்துக்கு ஒதுங்கி நிற்பது க்ஷேமம் என்று கருதுகிறோம்.

இதற்கு வேண்டிய தைரியமும் மனோ திடமும் தியாக புத்தியும் பிராம்மண சமூகத்துக்கு உண்டு என்று நம்புகிறோம்.

"நான் படித்தது பச்சைப் புத்தகம்!"

பட்டிக்காட்டு மாப்பிள்ளை ஒருவன் மாமனார் வீட்டுக்குப் போனான். 'மாப்பிள்ளை படித்தவர்' என்பதாக மாமனாருடைய ஊரில் ஒரு வதந்தி பரவி யிருந்தது. மாப்பிள்ளைக்கு முதல் மரியாதைகள் நடந்த பிறகு மாமனார் வீட்டு ஜனங்கள் அவரைப் படிக்கச் செய்து பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்கள். மைத்துனன் ஒரு புத்தகத்தைக் கொண்டு வந்து அவர் கையில் கொடுத்தான். "மாப்பிள்ளை! உங்களுக்குப் படிக்கத் தெரியுமாமே! இந்தப் புத்தகத்தைக் கொஞ்சம் படித்துக் காட்டுங்கள்! எல்லாரும் கேட்க ஆசைப்படுகிறார்கள்!" என்றான். "எல்லாரும்" என்பதில் முக்கியமாக மாப்பிள்ளையின் மனைவியும் சேர்ந்தவள்தான்!

மாப்பிள்ளை ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் படித்து எத்தனையோ நாள் ஆயிற்று. எழுத்துக்கள் ஏதோ பூர்வ ஜன்ம வாசனை மாதிரி பூச்சி படர்ந்ததுபோல் தோன்றின. "என்னடா இது தர்ம சங்கடம்!" என்று யோசித்தான். ஒரு யுக்தி கண்டு பிடித்தான். புத்தகத்தை வாங்கி முன்னும் பின்னும் திருப்பிப் பார்த்தான். "நான் எங்களூரில் படித்தது பச்சை அட்டை போட்ட புத்தகம்! இது நீல அட்டைப் புத்தகமா யிருக்கிறதே! இதைப் படிக்க இயலாது!" என்று திருப்பிக் கொடுத்து விட்டான்.

இந்தப் பட்டிக்காட்டு மாப்பிள்ளையின் நிலைமைக்குத்தான் நமது ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் லட்சக் கணக்கான சிறுவர்—சிறுமிகள் சில வருஷ காலத்தில் வந்து விடுகிறார்கள்!

*　　　*　　　*

கல்விக்கு வருஷத்தில் 11 கோடி ரூபாய் செலவு செய்வதாகவும், அதில் ஏழு கோடி ரூபாய் ஆரம்பக் கல்விக்காகச் செலவு செய்வதாகவும் நம் மாகாண சர்க்காரின் மந்திரிகள் அடிக்கடி பெருமை யடித்துக் கொள்வதைக் கேட்கிறோம். 'பிறந்தகத்துப் பெருமையைப் புக்ககத்தில் சொல்லிப் பீற்றிக் கொள்ளும்' மருமகளைப் போலவே அவர்கள் பேசுகிறார்கள்.

ஆரம்பக் கல்விக்குச் சர்க்கார் செலவழிக்கும் பொதுப் பணம் ஏழு கோடி ரூபாயில் பாதிக்கு மேலே படு தண்டமாகப் போகிறது என்று சர்க்கார் இலாகா அறிக்கைகளே ஒப்புக் கொள்கின்றன.

ஆரம்பப் பள்ளிகளில் சேரும் குழந்தைகளில் பாதிப்பேருக்கு மேலே மூன்றாவது வகுப்போடு நின்று விடுகிறார்கள். இவர்கள் தாங்கள் கற்ற எழுத்தறிவை அடுத்த இரண்டு மூன்று வருஷத்தில் அடியோடு இழந்து விடுகிறார்கள். நிரட்சர குட்சிகளாகவே ஆகி விடுகிறார்கள். இது சர்க்கார் நிபுணர்களே கூறும் உண்மை. ஆகவே, ஏழு கோடி ரூபாயில் பாதிபான மூன்றரைக் கோடி ரூபாய், விழலுக்கு இறைக்கும் நீராக வீணில் படு தண்டமாகப் போகிறது என்று ஏற்படுகிறது அல்லவா!

பாக்கிக் குழந்தைகளில் முக்கால்வாசிப் பேர் ஐந்தாவது வகுப்போடு நின்று விடுகிறார்கள். இவர்கள் தங்கள் எழுத்தறிவை அவ்வளவு சீக்கிரம் மறப்பதில்லை. கையெழுத்துப் போடவும் புகை வண்டி நிலையங்களின் பெயர்களைப் படிக்கவும் சக்தி உள்ளவர்களா யிருக்கிறார்கள். மற்றப்படி இவர்களும் ஐந்தாறு வருஷத்தில் படிக்கும் திறமையை இழந்து விடுகிறார்கள்.

ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலிருந்து உயர்நிலைப் பள்ளிகளுக்குப் போகும் சிறுவர்—சிறுமிகளுக்குத்தான் மேற் கற்ற கல்வி பயன்படுகிறது.

ஆகவே ஏழு கோடி ரூபாயில் ஐந்து கோடி ரூபா[illegible] வீண் தண்டமாகிறது என்று சொல்வது பிழையாகாது.

*　　　*　　　*

சென்னை சர்க்கார் ஆரம்பக் கல்விக்குச் செலவு செய்யும் ஏழு கோடி ரூபாயும் உண்மையில் பயன் உள்ளதாவதற்குச் சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தார் ஒரு யோசனை சொல்லியிருக்கின்றனர்.

புதுமையான விஷயம் ஒன்றுமில்லை; ஆனால் வற்புறுத்தி எடுத்துக் காட்டியிருப்பதிலே தான் விசேஷம்.

ஆரம்பப் பாடசாலை உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு புத்தகசாலை நிறுவப்பட வேண்டும். அப்படி நிறுவிய புத்தக சாலைகளுக்குச் சர்க்காரே ஒவ்வொரு ஆண்டிலும் வெளியாகும் நல்ல தமிழ்ப் புத்தகங்களை வாங்கி அனுப்பி வைக்க வேண்டும்.

இதனால் இரண்டு விதமான பயன்கள் விளையும் என்று உறுதியாகக் கூறலாம்.

முதலாவது பயன், ஆரம்பப் பாடசாலைகளில் படித்த கிராமத்துச் சிறுவர் — சிறுமியர்கள் தாங்கள் அரிதில் பெற்ற எழுத்தறிவை மறவாமல் இருப்பார்கள்.

ஊரில் ஒரு புத்தகசாலை இருந்தால் அங்கே போய்ப் படிக்க வேண்டும் என்ற ஆசை குழந்தைகளுக்கு அவசியம் ஏற்படும். ஆகையால், புத்தகசாலைக்குப் போவார்கள். தட்டுத் தடுமாறியாவது படிக்க முயலுவார்கள். நாலு பேர் சேரும்போது படிப்பைப் பற்றியும் புத்தகத்தைப் பற்றியும் பேசுவார்கள். ஏதாவது கொஞ்சம் படிப்பார்கள்.

அவர்களில் ஒருவர் அமெரிக்காவின் புகழ் பெற்ற ஜனாதிபதி ஆப்ரஹாம் லிங்கனைப் போல் நல்ல படிப்பாளிகளாகவும் அறிவாளிகளாகவும் ஆகி உன்னத பதவிகளுக்கு வரக் கூடும்! உலகத்துக்கே உதாரண புருஷர்களாக விளங்கக் கூடும்! யார் கண்டது!

இரண்டாவது பயன், தமிழ் முதலிய மாகாணத் தாய்மொழிகளில் நவீன இலக்கிய வளர்ச்சி துரிதமாக நடைபெறும்.

தமிழ் நாட்டில் மற்றத் துறைகளில் எவ்வளவோ முன்னேற்றம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், நூலாசிரியர்களின் நிலைமட்டும் என்றும் ஒரேபடியான மாறுதலில்லாத வறுமை நிலைமையாகவே இருந்து வருகிறது.

பள்ளிக்கூட பாடப் புத்தகங்களையும் பஞ்சாங்கப் புத்தகங்களையும் காமாதுர மேந்தரக் குப்பைகளையும் தவிர நல்ல புத்தகங்கள் சாதாரணமாக ஆயிரம் - அல்லது இரண்டாயிரத்துக்கு மேல் விற்பதில்லை.

ஒரு நல்ல புத்தகம் இரண்டு மூன்று பதிப்புகளில் ஐயாயிரம் பிரதிகள் விற்றால் அசுவமேதயாகம் பூர்த்தியானது போலத்தான்.

ஜனங்களுக்குப் படிப்பில் ஆசை இல்லாமலில்லை. ஆனால், புத்தகம் வாங்கப் பண சௌகரியமில்லை. வாழ்க்கைச் செலவுகள் அபரிமிதமாய் மற்றத் துறைகளில் உயர்ந்துவிட்டன. புத்தகம் வாங்க, அதிலும் புதிய தமிழ்ப் புத்தகம் வாங்க ஜனங்கள் பணத்துக்கு எங்கே போவது!

இலக்கிய வளர்ச்சியில் அக்கறை கொண்ட ஜனநாயக சர்க்கார் இதிலேதான் தலையிட்டு உதவி செய்ய வேண்டும்.

ஒவ்வொரு மாகாணத்திலும் குறைந்த பட்சம் பதினாயிரம் புத்தகசாலைகளைத் தங்களுடைய சொந்த மேற்பார்வையில் ஸ்தாபித்து நடத்த வேண்டும்.

வருஷந்தோறும் வெளியாகும் நல்ல புத்தகங்களில் பதினாயிரம் பிரதிகள் மாகாண சர்க்காரே வாங்கி மேற்படி புத்தகசாலைகளுக்கு விநியோகிக்க வேண்டும்.

இவ்விதம் சென்னை மாகாண சர்க்கார் செய்வதற்கு முன் வந்தால், ஆரம்பக் கல்விக்கு அவர்கள் செலவு செய்யும் ஏழு கோடி ரூபாய் உண்மையில் பயன் பட்டதாகும்.

பேராசிரியர் வ.ரா., ஆசிரியர் வெங்கட்ரமணி போன்ற அறிஞர்களுக்கு நிதி வசூலித்துக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படாது. புதுமைப் பித்தனுடைய குடும்பத்தார் போன்றவர்கள் திக்கதியான நிலைமையை அடைய மாட்டார்கள். அவர்களுக்காகப் பொது மக்களிடம் உதவி கேட்க வேண்டி நேராது.

சென்னை எழுத்தாளர் சங்கத்தின் யோசனைக்குச் சென்னை சர்க்கார் செவி சாய்த்து அதைப் பற்றிச் சிந்திப்பார்கள் என்று நம்புகிறோம்.

"புதுமைப் பித்தன்" தினம்

"புதுமைப் பித்தன்" என்று ஒருவர் இருந்தார். — அவர் தமது அழியாத இலக்கிய சிருஷ்டிகளின் மூலம் இன்றைக்கும் இருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். — ஆயினும் இப்படிச் சிலர் சொல்லிக் கொண்டிருக்கலாமே தவிர, பெரும்பாலான மக்களுக்கு அப்படி ஒருவர் "இருந்தார்" என்பதே மறந்து போய்விட்டது. அவருடைய குடும்பத்தார் இன்று திக்கதியான நிலைமையில் இருக்கிறார்கள் என்றால் வேறு என்ன சொல்ல வேண்டும்! இலக்கிய உலகம் அத்தகையது! அதில் வரும் புகழும் பெயரும் அப்படிப்பட்டவை!

ஸ்ரீ சொ. விருத்தாசலம் என்பது அவருடைய இயற் பெயர். "சொ. வி." என்று பழைய நண்பர்கள் அழைப்பார்கள். "புதுமைப் பித்தன்" என்று புனை பெயர் வைத்துக் கொண்டு கதைகளும் கவிதைகளும் எழுதினார். படித்துவிட்டுப் பலரும் அப்போது களிக் கூத்தாடினார்கள். "ஆகா! இதுவல்லவா அமர சிருஷ்டி!" என்றார்கள். ஆனால் இன்று அவருடைய புத்தகம் எங்கேயாவது கிடைக்கிறதா என்றால், இல்லை! கிடைத்தாலும் யாராவது வாங்குகிறார்களா என்றால், அதுவும் இல்லை!

"புதுமைப் பித்தன் என்று ஒருவர் இருந்தாராம்; அவர் ஏதோ நல்ல நல்ல சிறு கதைகள் எழுதினாராம்!" என்று பராபரியாகக் கேள்விப்படும் செய்தி ஆகி விட்டது!

• • •

வாழ்க்கையின் துன்பம் நிறைந்த அம்சங்களைப் பற்றியே புதுமைப் பித்தன் விசேஷமாக எழுதினார். சமூகத்தில் எங்கே புண் இருக்கிறது, எங்கே புரையோடியிருக்கிறது என்று ஆராய்ந்து பார்த்து எழுதினார்! ஆகையால் அவருடைய கதைகள் சோகம் ததும்பியிருக்கும்; படிக்கும்போது மனம் வேதனை அடையும். இதையெல்லாம் எதற்காக இவர் கவனிக்கிறார், எதற்காக எழுதுகிறார், நம்மையும் படிக்கச் செய்கிறார், — என்று கோபமே உண்டாகும். ஆனால் இப்படிச் சோகம் நிறைந்து வேதனை தரும் அவர் எழுத்தில் ஒரு பக்கத்தில் ஹாஸ்ய நரம்பு ஓடிக் கொண்டிருக்கும்! "அட பித்துக்குளி உலகமே!" என்று நம்மை அடிக்கடி சொல்லச் செய்யும்.

புதுமைப் பித்தன் எழுதிய பல கதைகளைப் போலவே அவருடைய வாழ்க்கையும் இருந்தது. சோகத்துடன் வேடிக்கை கலந்திருந்தது. (சிலர் 'பித்துக்குளித்தனம்' என்றும் சொல்வார்கள்.) எழுதும் ஆசையினால் எழுதினார். அதனால் ஜீவனமும் நடத்தலாம் என்று எண்ணினார்! எண்ணியபடி நடக்கவில்லை. "எழுத்துத் தொழிலினால் தரித்திரம் தீராது" என்று கண்டு, பேசும்படத் துறையில் புகுந்தார். அதன் பயன், அவருடைய வாழ்க்கையே சோக முடிவை அடைந்தது. சினிமாத் துறையிலிருந்து வெளிவராமலே அகால மரணமடைந்தார்.

அவருடைய குடும்பத்தார் இன்று திக்கதியான நிலையில் இருக்கின்றனர். "குடும்பத்தார்" என்றால், எத்தனை பேரோ என்று பிரமிக்க வேண்டாம். மனைவியும் மகளும் ஆக இரண்டு ஆத்மாக்கள்தான்.

இத்தனை பெரிய தமிழ் நாட்டில், இவ்வளவு தமிழ் அன்பு வெள்ளமாகப் பெருக்கெடுத்தோடும் நிலையில், இந்த இரண்டு ஆத்மாக்களுக்கு ஜீவனத்தைப் பற்றிய கவலை இல்லாமல் செய்ய முடியாதா!

அற்புதமான சிறு கதை இலக்கியத்தைச் சிருஷ்டித்த புதுமைப் பித்தனின் சின்னஞ் சிறு புதல்விக்குக் கல்வி கற்க வசதி செய்து கொடுக்க முடியாதா!

ஜூன் மாதம் 30உ 'புதுமைப் பித்தன்' தினத்தன்று அவரைத் தமிழ் மக்களுக்கு நினைவூட்டச் சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கம்

நிர்மாணித்திருக்கிறது. தமிழ் நாடெங்கும் அன்று இலக்கிய அன்பர்கள் கூட்டங்கள் நடத்த வேண்டும். புதுமைப் பித்தனைத் தமிழ்ப் பெருமக்களுக்கு நினைவூட்ட வேண்டும்.

புதுமைப் பித்தனுடைய மனைவியும் மகளும் இன்று நிர்க்கதியான நிலைமையில் இருந்து வருகிறார்கள். அவர்களுக்கு ஜீவனக் கவலை இல்லாமல் செய்ய வேண்டுமென்று சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் தமிழ் மக்களை வேண்டிக் கொள்கிறது. இதற்காகத் தொடங்கும் முயற்சிக்குத் தமிழ் மக்கள் பூரண ஆதரவு அளிக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

“பத்திரிகைச் சுதந்திரம் பறிபோகிறது!”

அடாடா! நேருஜி ‘பொய்’ சொல்லலாமா? அதாவது ‘பொய்’ என்ற வார்த்தையைச் சொல்லலாமா! அதிலும் பார்லிமெண்டில் சொல்லலாமா! அதிலும் பத்திரிகைக்காரர்களைப் பற்றிச் சொல்லலாமா!

இத்தகைய பல கேள்விகள் சென்ற வாரத்தில் இந்தியப் பார்லிமெண்டில் எழுந்தன.

‘சொல்லக் கூடாது’ என்று நேருஜியும் ஒப்புக்கொண்டார். ஒப்புக்கொண்டு ‘பொய்’ என்பதற்குப் பதிலாக ‘அசத்தியம்’ என்ற வார்த்தையை உபயோகப்படுத்தினார்.

இந்தச் சம்பவம் “பத்திரிகைச் சுதந்திரம் பறி போகிறது” என்னும் விவாதம் சம்பந்தமாக எழுந்தது.

இந்திய அரசியல் சாஸனத்தில் நேருஜி சில திருத்தங்களைக் கொண்டு வந்தார். அவற்றில் ஒரு திருத்தம் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதிப்பதாகும் என்று பத்திரிகையாளர் பலர் கருதுகிறார்கள். எனவே, பார்லிமெண்டில் உள்ள பத்திரிகைப் பிரதிநிதிகள் ஆட்சேபம் கிளப்பினார்கள். “போச்சு! போச்சு! பத்திரிகைச் சுதந்திரம் போயே போச்சு!” என்று முறையிட்டார்கள்.

முன்கோபக்காரரான நேருஜி “அப்படிச் சொல்லுவது பொய்!” என்றார். பிறகு “பெரும் பொய்!” என்றார். “சுத்தப் பொய்!” என்றும் கூறினார். அந்த வார்த்தையைப் பார்லிமெண்டில் சொல்லலாமா என்று சிலர் எடுத்துக் காட்டிய பிறகு, “அப்படியானால் அது அசத்தியம்!” என்று திருத்திக் கொண்டார்.

இப்படியாக, பெரிய பெரிய பத்திரிகையாளருக்கும் பிரதம மந்திரி நேருஜிக்கும் விவாதம் ஏற்பட்டிருக்கிறது.

ஒருவருக்கொருவர் நேர்மாறான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். “பத்திரிகைச் சுதந்திரம் பறி போகிறது!” என்று பத்திரிகையாளர் அலறுகிறார்கள். “அப்படிச் சொல்வது பொய்; இல்லையேல், அசத்தியம்!” என்கிறார் நேருஜி.

இந்த விவாதம் எப்படித் தீரப் போகிறது என்று பார்க்க வேண்டும்.

* * *

பத்திரிகைச் சுதந்திரம் பறி போய்விடும் என்ற பயம் நமக்கு அவ்வளவாக இல்லை என்பதைச் சொல்லி வைக்க விரும்புகிறோம். பத்திரிகையாளரிடம் சத்தியம் இருந்தால், அவர்கள் எந்தச் சர்க்கார் சட்டத்துக்கும் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. இராவண ராஜ்யத்தைப்போல் நடந்த பிரிட்டிஷ் இராஜ்யத்திலேயே பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்க முடியவில்லை. பறிக்கப் பார்த்தார்கள்; பல சட்டங்களைப் போட்டார்கள்; ஆனால் பத்திரிகையாளரிடம் சத்தியம் இருந்தபடியால் பிரிட்டிஷ் சர்க்கார் முயற்சி பலிக்கவில்லை.

அப்படியிருக்க, சுதந்திர இந்தியாவில் பத்திரிகையாளரிடம் சத்தியம் இருந்தால், அவர்கள் எந்தச் சட்டத்துக்கும் அஞ்ச வேண்டியதில்லை. பத்திரிகைச் சுதந்திரத்தை யாராலும் பறிக்க முடியாது.

பத்திரிகைகளின் சுதந்திரம் மிக அவசியமானது; அதைப் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியம்.

ஆனால் அதைவிடத் தேசத்தின் சுதந்திரமும் தேசமக்களின் சுதந்திரமும் முக்கியமானவை.

பத்திரிகைகளின் சுதந்திரத்தைச் சர்க்கார் பறிக்கக் கூடாது. ஆனால் பத்திரிகைகளும் பொது ஜனங்களின் சுதந்திரத்தைப் பறிமுதல் செய்யக் கூடாது!

இரண்டாவது சொன்ன அபாயமும் நேரலாம் என்பதற்கான அறிகுறிகள் துரதிர்ஷ்டவசமாகச் சுதந்திர இந்தியாவில் காணப்பட்டு வருகின்றன.

பத்திரிகைகளினால் தேச சுதந்திரத்துக்கும் தேச மக்களின் சுதந்திரத்துக்கும் மூன்று விதங்களில் அபாயம் ஏற்படக் கூடும்:

1. வகுப்புவாதிகளும் சுதேச மன்னர்களும் பிறரும் நாட்டில் குழப்பத்தையும் பலாத்காரக் கலகத்தையும் உண்டு பண்ணுவதற்குப் பத்திரிகைகளை உபயோகப் படுத்தலாம்.

இத்தகைய துர்நோக்கம் உடையவர்கள் சிலர் நாட்டில் இருக்கிறார்கள் என்று தெரிய வந்திருக்கிறது. இவர்களுடைய தீய முயற்சியைத் தடை செய்ய வேண்டியது அவசியம் அல்லவா!

2. ஒரு சில முதலாளிகள் நாட்டிலுள்ள பெரும்பாலான பத்திரிகைகளைத் தங்கள் வசப்படுத்திக் கொள்ளலாம். பத்திரிகைகளைத் தங்களுடைய அபிப்பிராயத்தை ஒப்பிக்கும் ‘கிராமபோன் ரிகார்டு’கள் ஆக்கிக் கொள்ளலாம்.

இப்படிப்பட்ட சங்கிலித் தொடர் பத்திரிகைகளின் மூலம் பொதுமக்களின் சுதந்திரத்துக்குப் பெரும் அபாயம் நேரும். ஏனெனில், பொது மக்களின் உண்மைக் கருத்தை வெளியிடும் பத்திரிகைகளே இல்லாமல் போய் விடலாம்

இப்போது கூட அத்தகைய அபாயம் நாட்டில் ஏற்பட்டு வருகிறது.

நாலைந்து பத்திரிகைகள் ஒரு முதலாளியின் கையில் இருந்தால், மாகாண மந்திரிகளும்

காங்கிரஸ ஸ்தாபனங்களும் அந்த முதலாளி யின் அடிமைகள் தான் !

அந்த முதலாளி பத்திரிகைகளின் செல்வாக் கைக் கொண்டு முதலில் அரசாங்கத்தில் செல் வாக்குப் பெறுகிறார். அரசாங்கச் செல்வாக் கைக்கொண்டு பிறகு தம்முடைய பத்திரிகை களுக்குப் பலம் தேடுகிறார்.

வேறு சுதந்திர அபிப்பிராயமுள்ள பத்திரி கைகள் தலை எடுக்க முடியாமல் செய்யக் கூடியவராகிறார்.

இதற்குப் பெயர் பத்திரிகைச் சுதந்திரமா ! இதுவல்லவா உண்மையில் பத்திரிகைச் சுதந் திரத்தைப் பறிப்பது ! பொது மக்களின் சுதந் திரத்துக்கும் கேடு விளைப்பது !

3. ஆபாசங்களையும் அவதூறுகளையுமே அச் சடித்துப் பரப்புவதற்கென்று சில பத்திரிகை கள் தோன்றுகின்றன.

குடியாத்தத்தில் கௌரவமாகக் குடித்தனம் நடத்தும் ஒரு பெண்மணியைப் பற்றிக் கொச்சி யில் நடக்கும் ஒரு ஆபாசப் பத்திரிகை அவ தூறு பிரசுரிக்கிறது.

அந்தப் பெண்மணியின் காதில் அது விழு கிறது. உயிரைவிடக் கற்பும் மானமும் மேலா னவை என்று கருதும் அந்த மாதரசி தற் கொலை செய்து கொண்டு உயிரை விடுகிறாள்.

இதற்குப் பெயர் பத்திரிகை சுதந்திரமா ! நம் நாட்டுத் தாய்மார்களும் சகோதரிகளும் அவதூறு பயமின்றி வாழும் சுதந்திரத்தைப் பறிப்பதாகாதா !

இவ்விதம் ஜனங்களின் சுதந்திரத்தைப் பத்தி ரிகைகள் பறிமுதல் செய்வதைப் பொதுஜன சர்க்கார் தடைசெய்ய வேண்டாமா ! இது அவர்களுடைய கடமை இல்லையா !

இந்தக் கடமையைத்தான் நேருஜி இப்போது செய்ய முன்வந்திருக்கிறார். அன்றியும், "பத் திரிகையாளர் செய்யும் குற்றங்களில் ஜூரிக ளாக இருந்து தீர்ப்புச் சொல்லும் பொறுப் பையும் உங்களுக்கே தருகிறோம்" என்று வாக்களித்திருக்கிறார்.

ஒன்று, அந்தப் பொறுப்பைப் பிரபல பத்தி ரிகையாளர் ஏற்க முன்வர வேண்டும். இல்லா விடில், சர்க்காராவது தகுந்த நடவடிக்கை எடுக்கட்டும் என்று விட வேண்டும்.

"பத்திரிகைச் சுதந்திரம் பறி போகிறது" என்று கூச்சலிடுவதால் மட்டும் பயனில்லை.

பொது நன்மையை முன்னிட்டுச் சத்தியம் என்னும் அடிப்படையில் நடக்கும் பத் திரிகைகள் நேருஜியின் திருத்தம் பற்றிப் பயப்படவேண்டிய அவசியமே இல்லை.

உண்மையில் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்கும் முறையில் இந்திய சர்க்காராவது மாகாண சர்க்காராவது நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில், காந்தி காட்டிய சத்தியாக்கிரஹ முறை இருக்கவே இருக்கிறதே ! பயம் எதற்கு!

அட்டைப்பட விளக்கம்

மனிதர்க்கு மனிதர் உயர்வு தாழ்வு பேசி வேற்றுமை கற்பிப்பது போன்ற இழிகுணம் வேறொன்றும் இருக்க முடியாது. மனித இனத்தின் நல்லுணர்ச்சிகளையே அடியோடு அழித்துவிடக் கூடியது அது. பொறாமை, துவேஷ மனப்பான்மை, துரோகம் முதலிய பயங்கர குணங்களுக்கெல்லாம் தாயகம் இந்த வேற்றுமை உணர்ச்சிதான்.



கண்ணினும் இனிய சுதந்திரம் பெற்ற பின்பும் நாம் அல்லற் பட்டுக் கொண்டிருப்பதற்குக் காரணம் அந்த வேற்றுமை உணர்ச்சிதான்.

அந்த வேற்றுமை உணர்ச்சி எவ்வளவு அர்த்த மற்றது, எத்தனை மடமையானது என்பதை மகாகவி பாரதியார் அழகாக எடுத்துச் சொல்லி யிருக்கிறார்.

"வெள்ளை நிறத்தொரு பூனை—எங்கள்
வீட்டில் வளருது கண்டீர் ;
பிள்ளைகள் பெற்றதப் பூனை—அவை
பேருக்கொரு நிறமாகும் !

....

எந்த நிற மிருந்தாலும்—அவை
யாவும் ஓரே தரம் அன்றோ ?

....

வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்—அதில்
மானுடர் வேற்றுமை யில்லை
எண்ணங்கள் செய்கைகளெல்லாம்—இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர் !"

மானிட சாதியின் ஒற்றுமையைக் கூற வந்த மகாகவி பாரதியார், தங்கள் இனத்தை உதாரணமாகக் கூறியதில் இந்தப் பூனைக்குட்டிக்கு அளவு கடந்த சந்தோஷம்.

இந்த இதழ்க் கல்கியின் அட்டைப்பட விளக்கத்தில் தன்னைப் பற்றி என்ன எழுதி யிருக்கிறது என்று எவ்வளவு அக்கறையோடு பூனைக்குட்டி கவனிக்கிறது பாருங்கள் !



அத்தியாயம் 8

பூதத் தீவு

வானமா தேவி இருக்கிறாளே, அவள் புத்தி விசாலத்தில் மனித குலத்தை ஒத்தவள்தான் போலும்! பரஞ்சோதியாகிய இறைவனை மனிதர்கள் தங்கள் இதயஆகாசத்திலிருந்து நழுவிச் செல்ல விட்டு விடுகிறார்கள். பிறகு, இருண்ட ஆலயங்களின் பிராகாரங்களிலும் கர்ப்பக் கிருஹங்களிலும் லட்ச தீபம் ஏற்றி அந்தப் பரஞ்சோதியைத் தேடுகிறார்கள்!

வானமாதேவியும் அத்தகைய புத்திசாலித்தனமான காரியத்தைத் தினந்தோறும் செய்கிறாள்! ஜோதிமயமான சூரிய பகவானைத் தன் வசத்திலிருந்து கடலில் நழுவ விட்டு விடுகிறாள். பிறகு தன் நாதனைக் காணவில்லையே என்ற கவலை அவளுக்கு உண்டாகிவிடுகிறது. லட்ச தீபம் ஏற்றிச் சூரியனைத் தேடுகிறாள்! லட்ச தீபம் மட்டுமா ஏற்றுகிறாள்? கோடானு கோடி தூங்கா விளக்குகளை ஏற்றி இரவெல்லாம் அவளும் தூங்காமல் சூரியனைத் தேடிக் கொண்டிருக்கிறாள்!

வந்தியத்தேவனுக்கு உணர்வு வந்து கண்ணைத் திறந்து பார்த்தபோது, தன் கண் முன்னே பல்லாயிரம் தீபச் சுடர்கள் மின்னுவதைக் கண்டான். எந்தக் கோவிலிலே இவ்வளவு அலங்காரமாக லட்ச தீபம் ஏற்றியிருக்கிறார்கள் என்று வியந்தான். பின்னர், அவை தீபங்கள் அல்ல வென்றும் வானத்தில் சுடர் விடும் நட்சத்திரங்கள் என்றும் உணர்ந்தான். படகில் தான் அண்ணாந்து படுத்திருப்பதையும் தன் இடுப்பைச் சுற்றி ஈரத் துணியின் மீது கயிறு ஒன்று கட்டியிருப்பதையும் அறிந்தான்.

ஜிலு ஜிலு வென்று குளிர்ந்த காற்று அவன் உடல்மீது பட்டு அவனுக்கு எல்லையற்ற சுகத்தையும் அமைதியையும் அளித்தது.

அமைதியான கடலில் எழுந்த ஓங்கார நாதம் அவன் உள்ளத்தில் அபூர்வமான சாந்தியை உண்டாக்கியது.

அந்த நாதத்தினிடையே ஒரு கீதமும் கேட்டது. அது என்ன கீதம்? அதை அவன் இதற்கு முன் எங்கே எப்பொழுது கேட்டிருக்கிறான்?

"வாரிதியும் அடங்கி நிற்க
மாருதமும் தவழ்ந்து வர
காரிகையேன் உளந்தனிலே
காற்று சுழன்றடிப்பதுமேன்?
அலை கடலும் ஓய்ந்திருக்க
அகக்கடல் தான் பொங்குவதேன்?"

ஆகா! அந்த விசித்திரமான பெண்! பூங்குழலி! சற்று நிமிர்ந்து உட்கார்ந்து எதிரே பார்த்தான். ஆம், அவள்தான்! படகு தள்ளிக் கொண்டிருக்கிறாள்! அந்தச்

கல்கி

சோக கீதத்தைப் பாடிக் கொண்டு படகு வலிக்கிறாள்! காரிருளிலே ஒரு மின்னல் மின்னிப் பல பொருள்களை ஒரு நொடிப் பொழுதில் காட்டி விடுவது போல், முன்னிரவில் நடந்ததெல்லாம் வந்தியத் தேவனுக்குப் பளிச்சென்று ஞாபகம் வந்தது. அதாவது, அவன் கடலில் தத்தளித்தபோது பூங்குழலியும் கடலில் குதித்து அவனை நோக்கி வந்த வரையிலேதான். பிறகு நடந்தது ஒன்றும் அவனுக்கு நினைவில் இல்லை. தன்னை அந்தப் பெண் காப்பாற்றிப் படகில் ஏற்றியிருக்க வேண்டும். படகு அசையும்போது தான் மீண்டும் கடலில் விழுந்துவிடாமலிருப்பதற்காக இடுப்பில் கயிற்றைச் சுற்றிப் படகின் குறுக்குக் கட்டையில் சேர்த்துக் கட்டியிருக்கிறாள். கயிறு உடம்பின் தோலில் பட்டு வலிக்காதபடி அரை ஆடையின் மீது சுற்றிக் கட்டியிருக்கிறாள்.

இடுப்புத் துணியைச் சுற்றியிருந்த அரைச்சுருளை வந்தியத்தேவன் தொட்டுப் பார்த்துக் கொண்டான். பணமும் ஓலையும் பத்திரமாயிருக்கக் கண்டான். ஆகா! இந்தப் பெண்மீது தான் சந்தேகங் கொண்டது எவ்வளவு பெரிய தவறு? வேறு விதமான துர்நோக்கம் இவளுக்கு இருந்தால் தன்னைக் காப்பாற்றியிருக்க வேண்டிய அவசியமில்லையே? கை சளைத்து உணர்விழந்த தன்னைக் கடலிலிருந்து படகில் ஏற்றுவதற்கு இவள் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்க வேண்டும்? எப்படித்தான் தன்னந் தனியாகச் செய்தாளோ? அபூர்வமான நங்கை இவள்!

இதோ அவள் எழுந்திருக்கிறாளே, ஏன்? தான் விழித்து விட்டதைப் பார்த்துவிட்டுத்தான் தன்னை நெருங்கி வருகிறாளோ? வந்து என்ன செய்யப் போகிறாள்? இல்லை, இல்லை! வேறு ஏதோ செய்கிறாள். ஆகா! பாய் மரத்தில் பாயைக் கட்டப்போகிறாள்! எவ்வளவு கடினமான வேலை! அதுவும் தன்னந் தனியாகச் செய்வது?

“பூங்குழலி! பூங்குழலி!”

“ஓகோ! விழித்துக் கொண்டு விட்டாயா?”

“என் கட்டை அவிழ்த்து விடு! நானும் உனக்கு உதவி செய்கிறேன்.”

“நீ சும்மா இருந்தால் போதும்; அதுவே பெரிய உதவி. கயிற்றை அவிழ்க்க வேண்டுமென்றால் நீயே அவிழ்த்துக் கொள்ளலாம். ஆனால் மறுபடியும் கடலில் குதித்துவிடாதே!”

வந்தியத் தேவன் தன்னைக் கட்டியிருந்த கயிற்றை அவிழ்த்து விட்டுக் கொண்டான்.

பூங்குழலி பாய் மரத்தைத் தூக்கி நிறுத்தினாள்; அதில் பாயை விரித்துப் பறக்க விட்டாள். படகு இப்போது உல்லாசமாகச் சென்றது. விரைவாகவும் சென்றது.

“சமுத்திர குமாரி!”

“ஏன்?”

“தாகமாயிருக்கிறது!”

“உப்புத் தண்ணீர் குடித்திருக்கிறாய் அல்லவா? தாகமெடுக்காமல் என்ன செய்யும்?”

சுரைக் குடுக்கை ஒன்றை எடுத்துக் கொண்டு சமுத்திர குமாரி வந்தியத் தேவன் அருகில் வந்தாள்.

“உனக்குச் சாப்பாடு கூடக் கொண்டு வந்தேன். நீ கடலில் குதித்த போது அதுவும் விழுந்து விட்டது! நல்ல வேளையாக இந்தச் சுரைக் குடுக்கை தப்பிப் பிழைத்தது.”

இப்படிச் சொல்லிக் கொண்டே சுரைக் குடுக்கையை மூடியிருந்த தக்கையை எடுத்து விட்டுக் கொடுத்தாள். வந்தியத்தேவன் அதை வாங்கித் தண்ணீர் குடித்தான்.

தொண்டையைக் கனைத்துச் சரிப்படுத்திக் கொண்டு, “உன்னைப் பற்றித் தவறாக எண்ணிக் கொண்டு விட்டேன். அதற்காக வருத்தப்படுகிறேன்” என்றான்.

“அதனால் ஒன்றும் பாதகமில்லை. நீ யாரோ? நான் யாரோ? பொழுது விடிந்தால் பிரிந்துவிடப் போகிறோம்.”

“இப்போது நேரம் என்ன?”

“வானத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்: சப்த ரிஷி மண்டலத்தைப் பார்!” என்றாள் பூங்குழலி.

வந்தியத் தேவன் வட திசையில் அடிவானத்தைப் பார்த்தான். அவன் படகு ஏறும்போது பார்த்ததற்கு இப்போது சப்தரிஷிகள் இடம் மாறிப் பாதி வட்டம் வந்திருந்தார்கள். அந்த அருந்ததி நட்சத்திரம் வசிஷ்டருடன் எப்படி ஒட்டிக் கொண்டே வருகிறது! அதிசயந்தான்! துருவ நட்சத்திரம்

மட்டும் இருந்த இடம் விட்டு அசையவில்லை. வான வெளியும் மூலைக் கடலும் சேரும் அந்த இடத்தில் துருவ நட்சத்திரம் யுக யுகமாக நிலைத்து நின்று வருகிறது! எத்தனை எத்தனையோ கப்பல் மாலுமிகளுக்கு வழியும் திசையும் காட்டிக் கொண்டு வருகிறது. துருவ நட்சத்திரம்!— அதை யாருக்கோ உதாரணமாகச் சொன்னார்களே? யார் சொன்னது? யாரைச் சொன்னது? ஞாபகம் வருகிறது. குடந்தை ஜோசியர் சொன்னார். இளவரசர் அருள்மொழி வர்மருக்கு வடதுருவத்தை உதாரணமாகச் சொன்னார். இளவரசரைப் பார்க்கும் பேறு நமக்கு உண்மையிலேயே கிடைக்கப் போகிறதா? இந்தப் பெண்ணின் உதவியினால் கிடைக்கப் போகிறதா?

பூங்குழலி தன் இடத்தில் போய் உட்கார்ந்து கொண்டாள்.

"நேரம் என்ன வென்று தெரிந்ததா? மூன்றாம் ஜாமத்தில் பாதி நடக்கிறது. காற்றுத் திரும்பி விட்டது. பொழுது விடியநாகத் தீவுக்குப் போய் விடுவோம்" என்றாள்.

"நாகத் தீவா?" என்று வந்தியத்தேவன் திடுக்கிட்டுக் கேட்டான்.

"ஆமாம்; இலங்கையின் வடபகுதி ஓரத்தில் பல தீவுகள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று நாகத் தீவு. அதில் இறங்கினால் மறுபடியும் கடலைக் கடக்கும் அவசியமில்லாமல் கரை வழியாகவே இலங்கைத் தீவை அடைந்து விடலாம்......"

"என்னை இறக்கிவிட்ட பிறகு நீ என்ன செய்வாய்?"

"என்னைப் பற்றி உனக்கு என்ன கவலை?" என்றாள் பூங்குழலி.

"எனக்கு இவ்வளவு பெரிய உதவி செய்தாய் அல்லவா? உன்னிடம் நான் நன்றி செலுத்த வேண்டாமா? என்னிடம் ஏதோ பிரதி உபகாரம் கேட்கப் போவதாகச் சொன்னாயே, அது என்ன?" என்றான்.

"அந்த எண்ணத்தை நான் மாற்றிக்கொண்டு விட்டேன். உன்னிடம் ஒன்றும் நான் கேட்கப் போவதில்லை. நீ நன்றி இல்லாதவன்."

அவன் அவ்விதம் குற்றம் சாட்டுவதற்குக் காரணம் உண்டு என்பதை வந்தியத்தேவன் உணர்ந்தான். மீண்டும் ஒரு தடவை அரைச் சுருளைத் தடவிப் பார்த்துக்கொண்டு ஓலை இருக்கிறது என்று உறுதி பெற்றான்.

"சமுத்திர குமாரி! நேற்று முன்னிரவில் உன்னைச் சந்தேகித்து நடந்து கொண்டதை நினைத்தால் எனக்கு வெட்கமாயிருக்கிறது. அதற்காக என்னை மன்னித்து விடு!"

"ஆகட்டும்; நீயும் அதை மறந்து விடு! நடக்க வேண்டியதைப் பற்றி யோசி! இலங்கையில் உன்னை நான் இறக்கி விட்ட பிறகு என்ன செய்வாய்? இளவரசர் இருக்குமிடத்தை எப்படிக் கண்டு பிடிப்பாய்?"

"இந்தக் கடலைக் கடப்பதற்கு எனக்கு உதவி செய்த கடவுள் அதற்கும் உதவி செய்வார்!"

"கடவுளிடம் உனக்கு மிக்க நம்பிக்கை போலிருக்கிறது. நம்மைப் போன்ற அற்ப மனிதர்களின் காரியங்களில் கடவுள் சிரத்தை கொள்கிறார் என்று நினைக்கிறாயா?"

"அவ்வளவு தூரம் நான் தத்துவ விசாரணை செய்ததில்லை. ஏதாவது கஷ்டமோ, அபாயமோ நேர்ந்தால் கடவுளைப் பிரார்த்திப்பேன். கடவுளும் சமயத்தில் உதவி செய்வார். இந்தக் கடலில் எனக்குப் படகு தள்ளுவதற்காகக் கடவுள் உன்னை அனுப்பி வைத்தார் அல்லவா?"

"அவ்வளவு கர்வம் உனக்கு வேண்டாம். நான் உனக்காகப் படகு தள்ள வரவில்லை. என்னை உனக்கு உதவி செய்யும்படி கடவுள் கனவிலே சொல்லி அனுப்பவும் இல்லை......"

"பின் எதற்காக நேற்று என்னைத் தப்புவித்தாய்? எதற்காக இப்போது படகு தள்ளிக்கொண்டு வருகிறாய்?"

"அதைப்பற்றி நீ கேட்க வேண்டாம். அது என் சொந்த விஷயம்."

வந்தியத்தேவன் மௌன சிந்தனையில் ஆழ்ந்தான். அவனுடைய கர்வங் கொண்ட உள்ளத்தில் ஓர் எண்ணம் தோன்றியது. தன்னுடைய வீர சௌந்தரிய வடிவழகைக் கண்டு தன் பேரில் இப்பெண் மோகங் கொண்டு விட்டாளோ என்று நினைத்தான். உடனே அந்த எண்ணத்தை மாற்றிக் கொண்டான். இவளுடைய பேச்சும்

நடவடிக்கைகளும் அம்மாதிரி எண்ண இடந்தரவில்லை. வேறு ஏதோ மர்மமான காரணம் இருக்கிறது. இவளுடைய வாயைப் பிடுங்கி அதைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

"ஒரு விஷயத்தை நினைத்தால் கொஞ்சம் எனக்குக் கவலையாகத்தான் இருக்கிறது......" என்றான்.

"அது என்ன? உனக்குக் கூடவா கவலையாயிருக்கிறது?"

"இலங்கையில் காடும் மலையும் அதிகம் என்று சொல்லுகிறார்கள்."

"இலங்கையில் பாதிக்கு மேலே காடும் மலையுந்தான்."

"காட்டு மிருகங்கள் அங்கே அதிகம் என்று சொல்கிறார்கள்."

"காட்டு யானைகள் மந்தை மந்தையாகச் சஞ்சரித்துக் கொண்டிருக்கும். சில சமயம் காடுகளுக்கு வெளியிலும் யானைக் கூட்டம் வந்து விடும்."

"இலங்கையில் உள்ளவர்கள் காட்டுமிராண்டி மக்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன்."

"அது முழுப் பொய்."

"அப்படியானால் சரி; நீ சொன்னால் உண்மையாகத்தானிருக்கும். அப்படிப் பட்ட காட்டுப் பிரதேசத்தில் இளவரசர் அருள்மொழி வர்மர் எங்கே இருக்கிறார் என்று தேடிக் கண்டு பிடிக்க வேண்டும்."

"அது ஒன்றும் கஷ்டமில்லையென்று சற்று முன் சொன்னாயே?"

"ஆமாம்; சொன்னேன். சூரியன் இருக்குமிடத்தைக் கண்டு பிடிப்பதில் என்ன கஷ்டம் இருக்க முடியுமென்று முதலில் நினைத்தேன்."

"இப்போது ஏன் வேறு விதமாக நினைக்கிறாய்?"

"சூரியனை மேகங்கள் மறைத்திருக்கலாம்; அல்லது கடலுக் கடியில் சென்றிருக்கலாம்."

"இந்தச் சூரியனை எந்த மேகமும் கடலும் மறைத்துவிட முடியாது. பொன்னியின் செல்வரை மறைக்க முயலும் மேகமும் ஒளி பெறும்; கடலும் ஜொலிக்கும்!"

இளவரசரைப் பற்றிப் பேசும்போது இவளுடைய உற்சாகம் எப்படிப் பொங்குகிறது? சோழ நாட்டுப் பிரஜைகள் பலரையும் போல இந்தப் பெண்ணும் அவரைத் தெய்வமாகக் கருதுகிறாள்! அருள்மொழி வர்மரிடம் அப்படிப்பட்ட என்ன வசீகர சக்தி இருக்கும்?—இவ்விதம் மனதில் எண்ணிக் கொண்டு, "அப்படியானால் இலங்கையில் இளவரசரைக் கண்டு பிடிப்பது கஷ்டமில்லையென்று சொல்கிறாய்?" என்றான்.

"சோழ சைன்யம் எங்கே இருக்கிறது என்று விசாரித்துக் கொண்டு போனால், இளவரசர் இருக்கும் இடம் தானே தெரிகிறது."

"அது எப்படி? இலங்கையில் பாதி அளவு சோழ சைன்யம் பரவியிருக்கிறது என்று கேள்விப்பட்டேனே?"

"ஆமாம்; மாதோட்டத்திலிருந்து புலஸ்திய நகரம் வரையில் சோழர் படை பரவியிருக்கிறது என்றுதான் நானும் கேள்விப் பட்டேன்......"

"பின்னே? அவ்வளவு பெரிய பிரதேசத்தில் இளவரசர் எங்கே இருக்கிறாரோ? காட்டு வழிகளில் தேடிச் சென்று அவரைக் கண்டு பிடிக்க அதிக நாள் ஆகலாம். இந்த ஓலையை உடனே அவரிடம் நான் சேர்ப்பித்தாக வேண்டும். நீதான் ஓலையைப் பார்த்து விட்டாயே? எவ்வளவு அவசரம் என்று உனக்குத் தெரிந்திருக்குமே?"

சமுத்திர குமாரி இதற்கு மறுமொழி எதுவும் சொல்லாமல் மௌனமாயிருந்தாள்.

"இளவரசர் இருக்குமிடம் நிச்சயமாகத் தெரிந்தால் வீண் அலைச்சல் அலையாமல் அவர் இருக்குமிடத்துக்கு நேரே போய் விடலாம்" என்றான் வந்தியத்தேவன்.

"அதற்கு ஒரு வழி இருக்கிறது" என்றாள் பூங்குழலி.

"இருக்கும் என்று நம்பித்தான் உன்னைக் கேட்டேன்."

"காலையில் நாகத் தீவில் உன்னை இறக்கி விடுவதாகச் சொன்னேன் அல்லவா?"

"ஆமாம்!"

"நாகத் தீவுக்குப் பக்கத்தில் பூதத் தீவு என்று இருக்கிறது."

"தீவின் பெயரே கேட்கப் பயங்கரமாயிருக்கிறதே!"

"பயப்படாதே! ஆதியில் அந்தத் தீவின் பெயர் போதத் தீவு. புத்த பகவான் ஆகாச மார்க்கமாக இலங்

கைக்கு வந்தபோது முதன் முதலில் அந்தத் தீவிலேதான் அவர் இறங்கினாராம். அங்கிருந்த அரச மரத்தினடியில் வீற்றிருந்து புத்த தர்மத்தைப் போதித்தாராம். அதனால் போதத் தீவு என்று பெயர் வந்தது..."

"பின்னால் அது 'பூதத் தீவு' என்று ஆகி விட்டதாக்கும்."

"ஆமாம்! 'பூதத் தீவு' என்ற பெயரைக் கேட்டே உன்னைப் போல் பலர் பயங்கர மடைந்தார்கள். பிறகு அந்தத் தீவுக்குச் சாதாரணமாக யாரும் போவதில்லை. பூதத்துக்குப் பயப்படாதவர்கள் தான் போவார்கள்."

"அதாவது உன்னைப் போன்ற தைரிய சாலிகள். கொள்ளிவாய்ப் பிசாசுகளுக்குப் பயப்படாதவன் அல்லவா நீ? சரி; பூதத் தீவைப் பற்றி என்ன சொல்ல வந்தாய்?"

"பூதத் தீவின் கரையில் ஒரு நாழிகை நேரம் நீ தாமதித்தால் 'பொன்னியின் செல்வர்' இப்போது இலங்கையில் எங்கே இருக்கிறார் என்று விசாரித்துச் சொல்வேன்...."

"பூதத்தீவில் யாரை விசாரிப்பாய்?"

"பூதத்தீவில் ஒரு பூதம் இருக்கிறது. அதை விசாரிப்பேன்..."

"அந்தப் பூதத்தை எனக்கும் காட்டுவாயல்லவா?"

"அதுதான் முடியாது; நீ என்னைத் தொடர்ந்து தீவுக்குள் வரக்கூடாது. கரையில் படகைப் பார்த்துக் கொண்டு காத்திருப்பதாகச் சத்தியம் செய்து கொடுத்தால் நான் போய் விசாரித்துக் கொண்டு வந்து சொல்வேன்."

"சரி, அப்படியே ஆகட்டும்!" என்றான் வல்லவரையன்.

காற்று சுகமாக அடித்தது. பாய் மரத்தின் உதவியினால் படகு விர்ரென்று கடலைக் கிழித்துக் கொண்டு சென்றது. கடலின் ஓங்கார நாதம் கேட்டுக்கொண்டே இருந்தது.

வந்தியத் தேவனுடைய கண்களைச் சுழற்றிக் கொண்டு தூக்கம் வந்தது. விழிப்பு நிலையிலிருந்து உறக்க நிலைக்கு இலேசாக நழுவிச் சென்றான்.

அத்தியாயம் 9

"இது இலங்கை!"

மறுபடியும் வந்தியத்தேவன் கண் விழித்த போது, அவன் எதிரேயும் சுற்றிலும் தோன்றிய காட்சி அவனைப் பிரமிக்கச் செய்தது. கிழக்கே வான முகட்டில் சூரியன் உதயமாகிக்கொண்டிருந்தான். அங்கே கடல் உருக்கி விட்ட தங்கக் கடலாகித் தகதக வென்று திகழ்ந்தது. உதயகுமாரி தங்கப் பட்டாடை புனைந்து கொண்டு ஜொலித்தாள். அவனுக்கு எதிரே படகு போய்க்கொண்டிருந்த திசையில் ஒரு மரகதத் தீவு நீலக் கடலாடை போர்த்துக் கொண்டு விளங்கியது. வலப்புறத்தில் அதேமாதிரி இன்னொரு பச்சை வர்ண பூமிப் பிரதேசம் காணப் பட்டது. அது நாலு புறமும் கடல் சூழ்ந்த தீவா அல்லது நீண்டு பரந்து வியாபித்துள்ள பூமிப் பிரதேசமா என்று நன்றாகத் தெரியவில்லை. இரண்டு மரகதப் பிரதேசங்களுக்கும் ஊடே பார்த்தால் தூரத்தில் அத்தகைய இன்னும் பல தீவுகள் பச்சை நிறத்தின் பல்வேறு வகைக் கலவைகளுக்கு உதாரணமாகத் தோன்றிக் கொண்டிருந்தன. படகிலிருந்தபடியே நாலு புறமும் சுற்றிப் பார்த்தால், வான வில்லின் ஏழுவித வர்ணங்களும் அதன் ஏழாயிரம் வகைக் கலவை நிறங்களும் திகழ்ந்தன. மொத்தத்தில் அந்தக் காட்சி கண்ணெதிரே காணும் உண்மைக் காட்சியாகவே தோன்றவில்லை. ஓவியக் கலையில் தேர்ந்த அமர கலைஞன் ஒருவன் "இதோ சொர்க்க லோகம் எப்படியிருக்கும் என்று காட்டுகிறேன்!" என்று சபதம் பூண்டு தீட்டிய வர்ண சித்திர அற்புதம் போலவே தோன்றியது.

இந்தக் காட்சியைக் கண்டு மெய்ம் மறந்து நினைவிழந்திருந்த வந்தியத் தேவனுடைய செவியில், "இது சொர்க்கம் அல்ல; இது இலங்கை!" என்ற வார்த்தைகள் விழுந்து, அவனை விழிப்படையச் செய்தன.

"ஆம்; இது சொர்க்கமோ என்று நான் சந்தேகித்தது உண்மைதான்!" என்றான் வந்தியத் தேவன்.



கடல் அலைகள் கரையிலே மோதும் போது உண்டாகும் சல சலப்புச் சத்தம் கேட்கத் தொடங்கியது.

"என்ன சொல்கிறாய்? எதிரே தெரிகிறதே, அதுதான் பூதத் தீவு; வலப்புறத்தில் உள்ளது நாகத் தீவு. எங்கே போகட்டும்? நாகத்தீவிலேயே உன்னைக் கொண்டு போய் இறக்கி விட்டு விடட்டுமா? விசாரித்துக் கொண்டுபோகிறாயா?"

"இல்லை; பூதத் தீவுக்கே போகலாம். கொஞ்ச நேரம் தாமதமானாலும், இளவரசர் எங்கே இருக்கிறார் என்று தெரிந்து கொண்டு போவது தான் நல்லது."

"அப்படியானால் சரி; நீ எனக்குக் கொடுத்த வாக்குறுதி ஞாபகம் இருக்கட்டும்!"

"இது சொர்க்க பூமி அல்ல; ஆனால் சொர்க்கம் போன்ற பூமி. இந்த சொர்க்கத்தை நரகமாக்குவதற்கு மனித உருக் கொண்ட அசுரர்கள் வெகு காலமாகப் பிரயத்தனப்பட்டு வருகிறார்கள்" என்றாள் பூங்குழலி.

"யாரை அசுரர்கள் என்று சொல்கிறாய்?" என்றான்.

"உன்னைப்போல் யுத்தமே தொழிலாகக் கொண்டவர்களைத்தான்."

"பொன்னியின் செல்வர் கூடவா?"

"அவரைப் பற்றி என்னை எதற்காகக் கேட்கிறாய்?"


"இளவரசரைப் பற்றி விசாரித்துச் சொல்வதாகக் கூறினாயே?"

"அவர் இருக்கக்கூடிய இடத்தை விசாரித்துச் சொல்வதாகக்கூறினேன். அவர் மனிதரா, அசுரரா, தேவரா என்று கண்டு பிடித்துக் கூறுவதாகச் சொல்லவில்லையே?"

படகு தீவுகளை நெருங்கிக் கொண்டிருந்தது. கடல் நடுவே கேட்கும் ஓங்காரத் தொனிக்குப் பதிலாகச் சிறிய தீவின் கரையில் வந்து படகு நின்றது. படகைப் பார்த்துக் கொள்ளும்படி வந்தியத்தேவனிடம் சொல்லிவிட்டுப் பூங்குழலி அந்த மரகதத் தீவிற்குள்ளே சென்றாள். வந்தியத்தேவன் அவள் சென்ற திக்கைப் பார்த்தான். பச்சை மரங்களுக்கு இடையில் அவள் விரைவில் மறைந்து விட்டாள்.

போதத் தீவு மக்களின் வாக்கில் மருவிப் பூதத் தீவாக மாறியது பற்றி வந்தியத்தேவன் முதலில் சிந்தித்தான். பிறகு அத்தீவுக்குள்ளே இப்போது குடியிருக்கும் பூதம் எப்படிப்பட்ட பூதமாயிருக்கும் என்று எண்ணமிட்டான். பின்னர், இந்த அதிசயமான பெண்ணின் உள்ளத்தில் மறைந்திருக்கும் மர்மம் என்னவாயிருக்கும் என்று வியந்தான்.

பூங்குழலி கூறியபடி ஒரு நாழிகைக்குள் திரும்பி வந்தாள். படகில் ஏறிக் கொண்டு வந்தியத்தேவனையும் ஏறிக் கொள்ளச் சொன்னாள். நாகத் தீவை நோக்கிப் படகு சென்றது.



"விசாரித்த விஷயத்தைத் தெரிந்து கொள்ள முடிந்ததா?" என்று வல்லவரையன் கேட்டான்.

"முதன் மந்திரி அநிருத்தப் பிரமராயர் பொன்னியின் செல்வரைப் பார்ப்பதற்காக மாதோட்டத்துக்கு வந்திருக்கிறாராம். நேற்றைக்கு இளவரசரும் மாதோட்டத்துக்கு வந்திருக்க வேண்டும். எத்தனை நாள் மாதோட்டத்தில் இருப்பார் என்று தெரியாது. நீ அங்கே போய்த் தெரிந்து கொள்ளலாம்" என்றான் பூங்குழலி.

"மாதோட்டம் இங்கிருந்து எத்தனை தூரம் இருக்கும்?"

"ஐந்து, ஆறு காத தூரம் இருக்கும். வழியெல்லாம் ஒரே காடு. கோடிக்கரைக் காடு மாதிரி இருக்கும் என்று நினைக்காதே. வானை எட்டும் மரங்கள் அடர்ந்த காடு. பட்டப் பகலில் சில இடங்களில் இருட்டாக இருக்கும். யானைக் கூட்டங்களும் வேறு துஷ்ட மிருகங்களும் உண்டு. நீ ஜாக்கிரதையாகப் போய்ச் சேர வேண்டும்."

"காட்டில் வழிகாட்டுவதற்கு உன்னைப்போல் ஒரு கெட்டிக்காரப் பெண் மட்டுமிருந்தால்......?" என்று வல்லவரையன் பெருமூச்சு விட்டான்.

"அப்போது நீ ஒருவன் என்னத்திற்காக? ஓலையை என்னிடம் கொடுத்து விடு! நானே கொண்டு போய்க் கொடுக்கிறேன்......இல்லை, முடியாது! ஏதோ பைத்தியக்காரியைப் போலப் பேசுகிறேன். என்னால் முடியவே முடியாது. இளையபிராட்டியிடம் ஒப்புக்கொண்டு வந்தாயல்லவா? அதை நீதான் செய்து முடிக்க வேண்டும்!" என்றாள்.

"ஆகட்டும், பூங்குழலி! நானே செய்து முடிப்பேன். இன்னொருவர் கெஞ்சிக் கேட்டாலும் கொடுக்க மாட்டேன். நீ இவ்வளவு உதவி செய்தனையே? அதுவே போதும்!"

படகு நாகத்வீபத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. பூங்குழலியின் கைகள் துடுப்பை வழக்கம்போல வலித்துக் கொண்டிருந்தன. ஆனால் அவ

ளுடைய உள்ளம் வேறு எங்கேயோ கனவு லோகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தது என்பது முகத்தி லிருந்து தெரிந்தது.

"சமுத்திர குமாரி!" என்று வந்தியத் தேவன் அழைக்கவும், அவள் திடுக் கிட்டு இவ்வுலகத்துக்கு வந்தாள்.

"ஏன் கூப்பிட்டாய்?" என்று கேட்டாள்.

"ஏதோ என்னிடம் பிரதி உப காரத்தை எதிர்பார்ப்பதாகச் சொன் ஞயே? அதை இப்போது சொன்னுல் தான் சொன்னது. இதோ கரை நெருங்கி வருகிறது."

பூங்குழலி உடனே மறுதளிக்க வில்லை. சிந்திப்பதாகத் தோன்றியது. ஆகையால் வந்தியத்தேவன் தைரியம் கொண்டு மேலும் கூறினன்.

"நீ எனக்குச் செய்த உதவி மிகப் பெரியது. எனக்கு மட்டும் நீ உதவ வில்லை; சோழ சாம்ராஜ்யத்துக்கே உதவி புரிந்திருக்கிருய். சோழ சக்கர வர்த்தியின் குலத்துக்கு மாபெரும் உதவி புரிந்திருக்கிருய். இதற்குப் பிரதியாக நான் ஏதாவது செய்யா விட்டால் என் மனம் நிம்மதி யடை யாது" என்றான்.

"இதை யெல்லாம் நீ உண்மை யாகச் சொல்லுகிருயா? அல்லது உல கத்திலுள்ள மற்ற ஆண் மக்களைப் போல் வஞ்சகம் பேசுகிருயா?"

"சமுத்திர ராஜன் அறியச் சத்திய மாகச் சொல்கிறேன்."

"அதாவது தண்ணீரில் எழுதி வைக்கிறேன் என்கிருயா?"

"ஆகாசவாணியும் பூமாதேவியும் அஷ்ட திக்குப் பாலகர்களும் சூரிய சந்திரர்களும் அறிய ஆணையிட்டுச் சொல்லுகிறேன்."

"உன்னுடைய சத்தியத்தையும் ஆணையையும் நம்பி நான் சொல்ல வில்லை. பொய் சொல்லும் வஞ்சகர்கள் சத்தியத்துக்கும் ஆணைக்கும் மட்டும் பயந்து விடுவார்களா? உன்னை முதன் முதல் பார்த்தவுடனேயே நீ நல்லவன் என்று எனக்குத் தோன்றியது. ஆகை யினல், சொல்லுகிறேன்..."

"முதலில் தோன்றிய எண்ணந் தான் எப்போதும் மேலானது; அதை நீ மாற்றிக் கொள்ள வேண்டாம்."

"பொன்னியின் செல்வரைப் பார்த்து அவரிடம் ஓலையைக் கொடுத்த பிறகு, சொல்ல வேண்டியதை யெல்லாம் சொல்லிப் பேச வேண்டியதை யெல் லாம் பேசிய பிறகு, அவர் அவகாச மாக இருக்கும்போது 'சமுத்திர குமாரியை உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா?' என்று கேள். 'ஞாபகம் இருக்கிறது' என்று அவர் சொன்னுல், 'அவள் தான் எனக்குப் படகு வலித்துக் கொண்டு வந்து இலங்கையில் இறக்கி விட் டாள்' என்று கூறு!"

பூங்குழலி! அவ்வளவு உயரத்தி லேயா நீ பறக்கப் பார்க்கிருய்? சிட்டுக் குருவி ஒன்று ககன ராஜா வாகிய கருடன் பறக்குமிடத்துக்கு நானும் போவேன் என்று பறக்கத் தொடங்கலாமா? இது உனக்கு நல்ல தல்லவே? — இவ்வாறு வந்தியத் தேவன் மனதில் எண்ணிக் கொண் டான். வெளிப்படையாக, "இதைச் சொல்லத்தான இவ்வளவு தயங்கி ஞய்? என்னமோ பெரிதாகக் கேட்கப் போகிருய் என்று நினைத்தேன். இள வரசரிடம் கட்டாயம் நான் சொல்லு கிறேன்! அவர் கேட்காமற் போனு லும் நானே சொல்லுகிறேன்!......"

"ஐயையோ! அவர் கேட்கா விட்டால் நீயாக ஒன்றும் சொல்ல வேண்டாம்!"

"அதெல்லாம் முடியாது; சொல்லித் தான் தீருவேன்."

"என்ன சொல்லுவாய்?"

"நடந்தது நடந்தபடி தான் சொல்லு வேன். 'இளவரசே! பொன்னியின் செல்வரே! சமுத்திர குமாரியை உங்க ளுக்கு ஞாபகம் இருக்கிறதல்லவா? ஞாபகம் இல்லாவிட்டால், இப்போது ஞாபகப் படுத்திக் கொள்ளுங்கள்! அவள்தான் என்னைப் பழுவேட்டரை யரின் கொலைகார ஆட்களிடம் சிக்கா மல் காப்பாற்றினள். அவள்தான் தன்னந் தனியாகப் படகு தள்ளிக் கொண்டு வந்து என்னை இலங்கையில் சேர்த்தாள். கடலில் விழுந்து தத்த ளித்த என்னை அவள்தான் காப்பாற் றிப் படகில் ஏற்றி விட்டாள். சமுத் திர குமாரியின் உதவியிரா விட்டால் நான் உயிருடன் உங்களை வந்து பார்த் திருக்க முடியாது. இந்த ஓலையும் உங்க ளுக்குக் கிடைத்திராது!' என்று சொல்லுவேன். சரிதானே?"

"இதுவரை சொன்னது சரிதான். மேலும் ஏதாவது சேர்த்துக் கொண்டு

விடாதே! இதை யெல்லாம் நான் அவரிடம் சொல்லச் சொன்னதாகச் சொல்லி விடாதே!''

"சேச்சே! என்னை முழுப் பைத்தியம் என்று நினைத்தாயா?''

"இளவரசர் அதற்கு ஏதேனும் மறுமொழி சொன்னால், அதை உள்ளது உள்ளபடி என்னிடம் சொல்ல வேண்டும். கூட்டியோ, குறைத்தோ சொல்லக் கூடாது.''

"உன்னை மறுபடி நான் எங்கே பார்ப்பது?''

"என்னைப் பார்ப்பதில் என்ன கஷ்டம்? கோடிக் கரையிலோ, இந்தப் பூதத்தீவிலோ, அல்லது இரண்டுக்கும் மத்தியில் படகிலோ இருப்பேன்.''

"ஊருக்குத் திரும்பும்போது இந்த வழியாக வந்தால் பூதத்தீவில் நீ இருக்கிறாயா என்று பார்க்கட்டுமா?''

"தீவுக்குள்ளே எந்தக் காரணத்தைக் கொண்டும் நீ வரக்கூடாது; வந்தால் விபரீதமாகும். இந்தப் படகு கடலோரத்தில் இருக்கிறதா என்று பார்! இருந்தால், ஏதாவது ஓர் அடையாளம் வைத்துக் கொண்டு சத்தம் செய்! நான் நேற்றுக் குயில் மாதிரி கூவினேனே, அந்த மாதிரி நீ கூவ முடியுமா?......''

"குயில் மாதிரி கூவ முடியாது! ஆனால் மயில் மாதிரி சத்தம் செய்வேன். இதைக் கேள்!''

வந்தியத் தேவன் வாயைக் கையினால் மூடிக்கொண்டு மயில் கத்துவது போன்ற அகோரமான குரலில் கத்திக் காட்டினான்.

அதைக் கேட்டுப் பூங்குழலி கலகல வென்று சிரித்தாள்.

படகு நாகத்தீவின் கரையை அணுகியது. இருவரும் படகிலிருந்து இறங்கினார்கள். வந்தியத்தேவன் கரையில் ஏறி விடைபெற்றுக் கொண்டான். பூங்குழலி படகைத் திருப்பினாள். வந்தியத்தேவன் சபலத்துடன் திரும்பிப் பார்த்தான். "உன்னுடன் வருகிறேன்'' என்று சொல்லி அவளும் வரமாட்டாளா என்ற ஆசை அவன் மனதில் இன்னமும் கொஞ்சம் இருந்தது. ஆனால் பூங்குழலி அவனைக் கவனிக்கவே யில்லை. அதற்குள் அவள் கனவு லோகத்தில் சஞ்சரிக்கப் போய் விட்டாள் என்பதை அவள் முகம் எடுத்துக் காட்டியது. (தொடரும்)



அக்கப்போர்

"தஞ்சை ஹோட்டல் தொழிலாளர் போர்க்கோலம். போராட்டம் நடக்குமென எச்சரிக்கை." —செய்தித் தலைப்புகள்

போராட்டத்தின் போது ஸ்பூன்கள், கரண்டிகள், தட்டுகள், டம்ளர்கள் முதலியன உபயோகிக்கப்படலாம்.

★

"இவ்வாண்டு வன மகோத்ஸவத்தின் போது ஐம்பது லட்சம் மரங்கள் நட ஏற்பாடாகி இருக்கிறது." —ஒரு செய்தி

இந்த ஐம்பது லட்ச மரங்களுக்காக வென்று மறுபடியும் குழி தோண்ட வேண்டியதில்லை. சென்ற வருஷ வன மகோத்ஸவத்தின் போது பறித்த குழிகள் காலியாக இருக்கும் அல்லவா!

★

"சென்னை மெமோரியல் ஹாலில் நடந்த ஜஸ்டிஸ் கட்சியின் மகாநாட்டில் பொதுத் தேர்தலில் கலந்து கொள்ளுவது பற்றிப் பரிசீலனை செய்யப்பட்டது." —செய்தி

தேர்தல் முடிவுகள் வெளியானதும் ஜஸ்டிஸ் கட்சியின் ஞாபகார்த்தமாக ஒரு 'மெமோரியல் ஹால்' கட்டுவதைப் பற்றி ஏதாவது தீர்மானம் கொண்டு வரப்பட்டதா!

★

"பெட்ரோல் விற்பனை வரியை அதிகரிக்கப் போவதில்லை." —கனம் கோபால் ரெட்டி

"கல்லைத்தான் மண்ணைத்தான் பெட்ரோலைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான்" நமக்கு யாரும் கற்பிக்க வில்லையே என்கிறார் இலக்கிய ரஸிகர் ஒருவர்.

★

"விக்ரமாதித்தனைப் போல் நமது ஆட்சியாளர்கள் சேவை புரிய வேண்டும்." —ஜனாதிபதி

அதற்காகத் தான் காடாறு மாதம் போவதற்கென்று காடுகளை வளர்க்க வேண்டுமென்கிறார் நம் வனமகோத்ஸவ மந்திரி கனம் முன்ஷி.

★

"வேலை தருவதாகச் சொல்லி ஒரு நபரை ஏமாற்றிப் பணம் பறித்தவனைப் போலீஸார் தேடுகின்றனர்." —சென்னைச் செய்தி

அவனைத் தேடும் வேலையைக் கொடுத்து விட்டுத்தானே போனான்!

★

"மக்கள் உண்மையை அறிய வழி வகுத்து விட்டால் உலக சமாதானம் தானாகவே வந்து விடும்." —ட்ருமன்

முதலில் இந்த உண்மையை ட்ருமன் அறிந்து கொண்டாரா!

★

"துருப்புகளை வாபஸ் பெறுக" —ஒரு உத்தரவு

முன் வைத்த துருப்பைப் பின் வாங்கும் வழக்கம் என்னிடம் கிடையாது என்கிறார் ஒரு சீட்டாட்டப் புலி.

"இந்தியாவுக்கு இனாமாகக் கொடுக்கப்பட விருக்கும் கோதுமையை இனாமாக ஏற்றிச் செல்லப் பத்து கப்பல்கள் தயாராக இருக்கின்றன." —லேக்ஸக்ஸஸ் செய்தி

அந்தக் கோதுமையை நமக்கு இனாமாகவே கொடுத்து விடுவார்களா என்று கேட்கிறார் ஒரு குடும்பஸ்தர்.

★

"ஜஸ்டிஸ் கட்சி திராவிடக் கழகத்துடன் சேராது." —ஒரு ஜோஸ்யம்

இது நீதியா என்று கேட்கிறார் ஒரு தோழர்.

★

"செஞ்சீனாவுக்கு பிரிட்டன் ரப்பர் ஏற்றுமதி செய்வதை அமெரிக்கா ஆட்சேபிக்கிறது." —செய்தி

"செஞ்சீனா தன்னுடைய சிவப்பு வர்ணத்தை அழித்துக் கொள்ள உதவியாக இருக்கட்டுமென்றே நாங்கள் அதற்கு ரப்பரை ஏற்றுமதி செய்கிறோம்" என்று பிரிட்டன் சமாதானம் கூறலாம்!

★

"50 படி கொண்ட ஒரு அரிசி மூட்டையின் விலை ரூ. 110." —ஒரு செய்தி

இந்தச் செய்தி வெறும் 'மூட்டை' அல்லவே!

★

"பஞ்சாப் முதல் மந்திரி டாக்டர் கோபி சந்த் பார்க்வா மத்திய பார்லிமெண்டரி போர்டு அழைப்பின்மேல் டில்லிக்குப் புறப்பட்டார்." —டில்லி செய்தி

மத்திய பார்லிமெண்டரி போர்டார் ஸ்ரீ பார்க்வா அவர்களைச் சும்மா பார்க்கவா அழைத்திருப்பார்கள்!

★

"பின்தங்கிய வகுப்பாருக்குச் சர்க்கார் சலுகை." —ஒரு செய்தித் தலைப்பு

"என்னுடைய பையன் இந்த வருஷம் பாஸாகாமல் வகுப்பில் பின்தங்கி விட்டான். அவனுக்கேதாவது சலுகை உண்டா!" என்று கேட்கிறார் ஒரு தகப்பனார்.

★

"ஐ. நா. சபை இதுவரை இருந்த கட்டிடத்தைக் காலி செய்துவிட்டு வேறு இடம் மாறியது." —லேக்ஸக்ஸஸ் செய்தி

இனி ஐ. நா. வின் கொரியா, காஷ்மீர், தென் ஆப்பிரிக்கா கொள்கையும் மாறும் என்று எதிர்பார்க்கலாமா!

★

"சென்னை சர்க்கார் கொள்ளேகாலத்தைச் சரியாகக் கவனிப்பதில்லை என்று கொள்ளேகாலம் பிரமுகர் ஒருவர் கனம் ஏ. பி. ஷெட்டியிடம் கூறினார்." —கோவைச் செய்தி

சென்னை மந்திரி சபையில் ஒரு பெண்மணி இருந்தால் கொள்ளேகாலத்தைக் கவனிக்காமல் இருக்க முடியுமா என்று கேட்கிறார் ஒரு கொள்ளேகாலப் புடவை அணிந்துள்ள ஸ்திரீ.

எத்தனை நிலம் வேண்டும்?

"எத்தனை நிலம் வேண்டும்!" என்ற கேள்வியில் இரண்டு கேள்விகள் அடங்கியிருக்கின்றன :—

1. குறைந்த பட்சம் எத்தனை நிலம் இருந்தால் ஒரு குடியானவன் நல்ல முறையில் விவசாயம் செய்து வாழ்க்கை நடத்தலாம்!

2. அதிக பட்சம் ஒருவன் எத்தனை நிலத்துக்குச் சொந்தக்காரனுயிருக்கலாம்!

மேற்கூறிய இரண்டு கேள்விகளுக்கும் என்னுடைய பதில் வருமாறு:

1. குறைந்தபட்சமாக பத்து ஏக்கரா நன்செய் அல்லது தோட்டக்காடும், இருபது ஏக்கரா புன்செய்யும் இருந்தால் ஒரு குடியானவன் உழைத்துப் பாடுபட்டு நல்ல முறையில் வாழ்க்கை நடத்தலாம். இதற்குக் குறைந்தால் விவசாயம் சரிவர நடைபெறாது.

ஆகையால் நன்செய் நிலத்தைப் பத்து ஏக்கராவுக்குக் குறையும்படியாகவும் புன்செய் நிலத்தை இருபது ஏக்கராவுக்குக் குறைவாகவும் பிரிவினை செய்ய அனுமதிக்கக் கூடாது. அத்தகைய பிரிவினையைத் தடைசெய்யச் சர்க்கார் சட்டம் செய்ய வேண்டும்.

2. அதிக பட்சமாக ஒருவன் இத்தனை நிலந்தான் வைத்துக் கொள்ளலாம் என்று நிபந்தனை விதிக்கக் கூடாது. அதற்கு அவசியமும் இல்லை; நியாயமும் இல்லை.

நிலம் என்பது ஒரு சொத்து; அத்துடன் தொழில் செய்யும் சாதனம்.

ஒருவன் இத்தனை வீடுகள்தான் வைத்துக் கொள்ளலாம், இத்தனை கடைகள்தான் வைக்கலாம், இவ்வளவு கம்பெனிகள்தான் நடத்தலாம், இவ்வளவு ஆலைப் பங்குகள்தான் வாங்கலாம், இத்தனை பத்திரிகைகள்தான் நடத்தலாம், இவ்வளவு பணந்தான் பாங்கியில் போட்டு வைக்கலாம் என்று சட்டம் செய்யப்படுகிறதா! அவ்விதம் செய்யப்படும்போது நில உடைமையையும் கட்டுப் படுத்தலாம்.

சோஷலிஸ்ட் தொழில் சர்க்கார் ஆட்சி நடத்தும் இங்கிலாந்திலேகூட இவ்வளவு நிலந்தான் வைத்துக் கொள்ளலாம் என்று சட்டம் கிடையாது. ஆயிரம், இரண்டாயிரம் ஏக்கரா சொந்தக்காரர்கள் சர்வ சாதாரணமாய் அந்நாட்டில் இருக்கிறார்கள்.

எவ்வளவுக்கு அதிக நிலம் ஒருவன் கையில் இருக்கிறதோ, அவ்வளவுக்கு அவன் நல்ல முறையில் விவசாயம் நடத்தி உணவு உற்பத்தியைப் பெருக்கலாம்.

நிலத்தைக் கட்டுப் படுத்தினால் பட்டக்காரர் மாட்டுப் பண்ணையைப் போன்ற மாட்டுப் பண்ணைகள் எப்படி ஏற்பட முடியும்!

மேலும் இந்தியப் பிரஜைகளின் சொத்துரிமை பாதுகாக்கப்படும் என்று இந்திய அரசியல் சட்டத்தில் ஷரத்து இருக்கிறது. ஆகையால், ஒருவனிடம் அதிக நிலம் இருக்கிறது என்பதற்காக நிலத்தைப் பறிமுதல் செய்து பங்கு போடுவது சரியல்ல.

நில உடைமை விஷயத்தில் ஏற்றத் தாழ்வு களைக் கூடிய வரையில் போக்குவதற்கு வேறு வழி ஒன்று இருக்கிறது.

அதிக வருமானம் உள்ளவர்களிடம் அதிக வருமான வரி வாங்குவதுபோல் அதிக நிலம் வைத்திருப்பவர்களிடம் அதிக விகித நில வரி வசூல் செய்ய வேண்டும்.

மூன்று ஏக்கரா நிலமுள்ள குடியானவனிடமும் மூவாயிரம் ஏக்கரா நிலம் படைத்த நிலச்சுவான்தாரிடமும் இப்போது ஒரே விகிதத்தில் நில வரி வாங்கப்படுகிறது. இது தவறு.

நிலம் அதிகமாக, வரி விகிதம் அதிகமாக வேண்டும். ஐம்பது ஏக்கரா வரையில் இப்போதுள்ள வரி விகிதமும் ஐம்பதுக்கு மேல் இரு நூறு ஏக்கரா வரையில் 100-க்கு 50 வீதம் அதிகமும் இருநூறு ஏக்கராவுக்கு மேலே 100-க்கு 100 பங்கு அதிகமும் நில வரி விதிக்க வேண்டும். இப்படிச் செய்தால் பொதுஜன சர்க்காருக்கு அதிக வருமானம் கிடைக்கும்; நில உடைமையில் ஏற்றத் தாழ்வுகள் காலடைவில் நீங்கும்.

30—5—51 — "விவசாயி"

★

நம் பாரத நாட்டில் வசிப்பவர்கள் நாலில் மூன்று பாகம் விவசாயிகள். அவரவர்கள் சக்திக்குத் தகுந்த அளவில் பாடுபட நிலம் சொந்தமாக இல்லா விட்டாலும், குத்தகைக்காவது கிடைக்குமாறு வசதி செய்து ஒவ்வொரு பெரிய மிராசுதார்களும் கொடுத்துதவ முன் வரவேண்டும். ஒரு விவசாயிக்கு நிலம் நன்செய் ஆனால் 15 ஏக்கராவும், புன்செய் ஆனால் 30 ஏக்கராவும் இருக்க வேண்டும். நம் நாட்டில் சிறந்த முறையில் விவசாயம் செய்யத் தெரிந்த விவசாயிகள் நிலம் கிடைக்காமல் பரிதவிக்கின்றனர். பெரிய பெரிய மிராசுதாரரின் ஆயிரக் கணக்கிலுள்ள ஏக்கரா நிலங்கள் தரிசு கிடக்கின்றன. அப்படித் தரிசாய் கிடக்கும் நிலங்களைச் சர்க்கார் கண்டு பிடித்து நிலமில்லாமல் பரிதவிக்கும் ஒவ்வொரு ஏழை விவசாயிக்கும் ஐந்து ஏக்கரா வீதம் பகிர்ந்து கொடுக்கவும். அப்படிப் பகிர்ந்து கொடுப்பதோடல்லாமல் அவரவர்களுக்கு விவசாயச் செலவுக்குத் தேவையான பணமும் வட்டியில்லாமல் கொடுத்து உதவ வேண்டும். மேலும் நம் நிலங்கள் நவீன முறையில் பயிர் செய்ய முக்காலும் தகுதியுள்ளவை யல்ல. நம் நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஒழிய வேண்டுமானால், கால்நடைகளின் தரம் உயர வேண்டும்.

குருக்கப்பாறை
28—5—51 கே. எஸ். வெங்கடாசலக் கவுண்டர்

★

நிலத்தைப் பங்கு போடுவதில் நியாயம் பேசுவது அர்த்தமற்ற காரியமே. மனிதனுக்குத் தேவை நெல் என்பது மட்டுமல்ல. உப்பு வேண்டாமா! ஒரு ஏக்கர் நன்செய் நிலத்தில் ஒரு நிலச்சுவான்தார் அதிகப்படியாக சம்பாதித்தால் ரூ. 500 கிடைக்கும். ஒரு ஏக்கர் உப்பு உண்டாகிற நிலத்தில் ஒரு முதலாளி எச்செலவும் போக ரூ. 3000 சம்பாதிக்கிறார். இப்படியாக ஒவ்வொன்றையும் பற்றிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

தவிர, ஒரு மனிதன் தான் பாடு செய்யக் கூடிய பூமியை வைத்துக் கொள்ளலாம் என்ற

வாதமும் சரியல்ல. ஒரு மனிதன் 40 செண்டில் கூட தானே முழுக்க முழுக்க வேலை செய்ய முடியாது. வரப்பு கட்டலாம். ஏர் பிடித்து உழலாம். ஆனால் நடவுசெய்ய வேண்டுமென்றால் 6, 7 ஆட்கள் வேண்டும். மேலும் ஒரு ஏர் வைத்து எந்தப் பருவத்திலும் உழுவது என்பது பருவத்திற்குச் சரிப்பட்டு வராது. பிறனுடைய உதவி அவசியம் இருந்தாக வேண்டும். எனவே தான் வேலை செய்கிற பூமி தனக்கு என்பது குழப்பமாகவே முடியும்.

மாடு வேண்டாம், மனிதன் வேண்டாம். யந்திரத்தினால் யாவற்றையும் முடிப்போம் என்ற சொல் பிரத்யட்ச நிலையைக் கவனிக்காத சொல். ஒரு கிராமத்திலே 2000 பேர்கள் இருந்தால் குறைந்த பட்சம் 700 பேராவது விவசாய வேலையின் மூலம் கிடைக்கும் ஊதியத்தையே நம்பி வாழ்கிறார்கள். இப்படி 3-ல் 1 பங்கு மனிதர்களுக்கு நிச்சயமான வேலை வேறு இடத்தில் கொடுத்துவிட்டு மனிதனுக்குப் பதிலாக யந்திரத்தை ஏவவேண்டும். அதுவுமல்லாமல் நமது நாட்டில் நன்செய்களும் நீர்ப்பாசனங்களும் எப்படிப்பட்டவை என்பதைக் கண் திறந்து பார்க்க வேண்டும். தஞ்சை மாதிரி ஆற்காடு இல்லை. ஆற்காடு மாதிரி நெல்லை இல்லை. கிராமத்தைச் சுற்றி நன்செய்கள். ஒரு வரிசையில் முதலாவது வயலுக்கும் கடைசி வயலுக்கும் சாதாரணமாக 4—5 அடி ஏற்றத் தாழ்வு இருக்கும். மேட்டை எடுத்துப் பள்ளத்தில் போட்டால் மேடு இருந்த வயலில் சரல் தென்படலாம்; பாறை வெளி வரலாம். ஆக பசுமையான வயல்கள் இருந்த இடத்தில் பாலைவனமாக மாறிவிடவும் வழி பிறக்கலாம். அப்படி ராட்சஸ முயற்சி எடுத்து விஷப் பரீட்சை பார்ப்பதற்கு இது தருணமுமல்ல.

தற்சமயம் இருக்கும் கிராம எல்லை வெள்ளைக்கார ஆட்சிக்குத் தக்க முறையில் அமைந்தது. இவைகளை மாற்றி ஜனங்கள் கூட்டாக வாழ்கிற பிரதேசங்களைப் பார்த்துக் கிராமமாக அமைக்க வேண்டும். அந்தக் கிராம எல்லைக்குள் இருக்கும் நன்செய் புன்செய்களை கிராமச் சொத்தாக ஆக்க வேண்டும். கிராமத்துக்கு ஒரு நிர்வாக சபை இருந்து பராமரிப்பு செய்து வரலாம். கிராம நன்செய் புன்செய் வருமானங்களில் பொதுச் செலவு போக மீதியைச் சமமாகப் பங்கிட்டு எடுத்துக் கொள்ள வேண்டும். பள்ளி, பஸ், சுகாதாரம், நீர்ப்பாசனம், ஆலய வழிபாடு யாவும் பொதுச் செலவுகளே. இது நடந்தால் பூலோக சொர்க்கம் இந்தியாதான்.

இடைக்கால திட்டம் ஒன்று வகுக்க வேண்டும். டெல்டா பிரதேசத்தில் ஒரு குடும்பத்துக்கு, 15 ஏக்கர் நன்செய். ஒரு போக விளைவுள்ள இடத்தில் 30 ஏக்கர் நன்செய். புன்செயானால் 50 ஏக்கர். இப்படி பங்கிட்டால் ஒரு குடும்பம் ஐந்து குழந்தைகள் உள்ள குடும்பமானாலும் சிரமமின்றிக் காலம் தள்ளலாம். இது தற்காலிக ஏற்பாடே. தனி சொத்துரிமை, பாகம், கல்யாணம் என்று சமுதாயத்தில் இருக்கிறவரை வீக்கமும், வற்றலும் 25 வருடத்திற்குள் மாறி மாறித்தான் வரும். ஆகவே தான் முப்பது வருடம் வாழ்ந்தவனும் இல்லை, முப்பது வருடம் கெட்டவனும் இல்லையென்ற வசனம் தமிழ் நாட்டில் வழங்கி வருகிறது.

கடைசியாக, நாம் எதைச் செய்தாலும் நமது பண்பாட்டை அழிக்காமலும், சாத்வீக சட்ட முறைகளாலும் சீர்திருத்தம் செய்ய முற்படுவதே சிறந்த முறை.

விட்டலபுரம்
27—5—51
வி. எஸ். வெங்கடாச்சாரி

★

"வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும்; நெல்லுயரக் குடியுயரும்; குடியுயரக் கோலுயரும்; கோலுயரக் கோனுயர்வான்" என்ற ஔவையார் வாழ்த்தியதைப் பார்த்து இன்புறுகிறோம். அக்கருத்துப்படி நாம் நடந்தால் நாடு செழித்து நாமும் சுபிட்சமடையலாம். அதன் பிரகாரம் நடத்துவதற்கு ஒவ்வொரு தனி மனிதனுக்கும் விவசாயம் செய்ய நிலம் தேவைப்படுகிறது. நூற்றுக்கு எண்பத்தைந்து பேர் நம் நாட்டில் விவசாயிகளாக இருக்கிறார்கள். எனவே ஒரு மனிதன் சுகமாக வாழக் குறைந்தது 12 ஏக்கர் நிலமாவது வேண்டும். அதிக பட்சம் ஒரு தனி மனிதனுக்கு 30 ஏக்கருக்கு மேல் இருக்கக் கூடாது. அத்துடன் நீர்ப்பாசன வசதியில்லாத ஜில்லாக்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுத்து 30 ஏக்கராவுக்கு அதிகமுள்ள மிராசுதாரிடமிருக்கும் நிலத்தை ஏழை விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுத்துவிட்டால், இன்று அமெரிக்காவை உணவு கேட்டு நிற்கும் நம் நாட்டின் அவல நிலை மாறும்.

துழுக்க விடுதி
30—5—51
ஆர். வி. சிங்காரம்

★

"எத்தனை நிலம் வேண்டும்!" என்பது மிகச் சிக்கலான பிரச்னை. 'ஒரு உழவன் அவன் குடும்பத்துடன் சௌகரியமாய் வாழப் போதுமான நிலமே அளவு நிலம், அதாவது ஒருவனுக்குப் போதுமான நிலம்' என்கிறார் கீட்டின்ச் என்னும் பொருளாதார நிபுணர். டாக்டர் மான் என்னும் நிபுணரோ விவசாயி பசியில்லாமல் வாழப் போதுமான நிலமே அளவு நிலம் என்கிறார்!

இந்தியாவில் விவசாயியின் நிலம் அவனுடைய முதலுக்கும், ஊழியத்திற்கும் முழுவேலை தருவதாகவும் அவன் குடும்பத்துடன் வாழப் போதுமானதாகவும் இருக்க வேண்டும். இது நிலத்தின் தரத்தைப் பொறுத்து ஊருக்கு ஊர் வித்தியாசமாய் இருக்கும். ஆகையால் ஐந்து அல்லது பத்து ஏக்கருக்குக் குறையாமலோ அல்லது மேற்படாமலோ இருக்கலாம் என்று நில அளவை அகில இந்தியாவுக்கும் நிர்ணயிக்கச் சாத்தியமில்லை.

இந்தியக் குடியரசு உணவு நிலைமையை ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளுக்குள் சமாளிக்காவிட்டால் ஜனநாயகம் மாண்டு விடும். அராஜகம் கூத்தாடும். இந்தச் சூழ்நிலையில்தான் "எத்தனை நிலம் வேண்டும்!" என்பதை ஆராய வேண்டும்.

நம் நாட்டில் பெரும்பாலோர் மிகக் குறைவான நிலம் உடையவர்கள். இவர்களுக்குப்

பண வசதியில்லை. விஞ்ஞான முறையைக் கையாளவும் முடியாது. இவர்கள் வருமானம் மிகக் குறைவு. இவர்களிடம் நிலம் இருப்பதும் தண்டம்.

நம் நிலத்தை 500 அல்லது 1000 ஏக்கர் என்று வாங்குபவர்களிடம் விடலாமா? இந்தப் பெரும் நிலச்சுவான்தார்கள் லாபம் வரும் காலத்தில்தான் அக்கறை காட்டுவார்கள். லாபம் குறையும் தருவாயில் நிலத்தைத் தரிசு போட்டு விடுவார்கள். விலை உயர்வாகவே வைத்திருப்பதற்குப் பதுக்கல், தரிசு போடுதல் முதலிய ஜால வித்தைகள் செய்வார்கள். மக்களும் அரசாங்கமும் இவர்களிடம் மண்டியிடும் நிலைக்குக் கொண்டு வந்து விட்டு விடுவார்கள். ஆகையால் இவர்களிடம் நிலம் இருப்பது பெரிய ஆபத்து!

உணவு ரேஷன் முறை இன்று படுதோல்வி அடைவதற்குக் காரணம் உற்பத்தியில் அதிகாரம் இல்லாமல் விற்பனையில் மட்டும் கட்டுப்பாடு வைத்திருப்பதுதான். இந்த அரை குறைக் கட்டுப்பாடுதான் பதுக்கல், கள்ள மார்க்கட்டுகளுக்கு வழிகாட்டுகிறது. இவைகளுக்கு விமோசனம் நிலத்தைச் சர்க்கார் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும்.

குறைவான நிலம் உள்ள உழவர்கள் நிலத்தைச் சர்க்காரிடம் தரத் தயங்க மாட்டார்கள். அவர்களுக்குச் சொந்தம் என்ற பெயரால் வரும் வருமானத்தை விட 'சம்பளம்' என்ற பெயரில் அதிக வருமானம் கிடைக்கும். அவர்கள் கவலை குறையும்; மகிழ்ச்சி அதிகரிக்கும்.

லால்குடி
29—4—51 எல். எஸ். பார்த்தசாரதி, எம். ஏ.,

★

நம் நாட்டின் நிலப் பிரச்னை மற்றைய நாடுகளைப் போலல்லாமல் சிக்கலானதாக இருக்கிறது. பற்றாக்குறையின் காரணமாக சர்க்கார் விவசாயத்தைக் கண்காணிப்பது முறையே ஆகும். ஆனால் நிலப் பிரச்னையைத் தீர்க்கு முன் பல விஷயங்களை ஆராயவேண்டும்.

முதலாவதாக, ஒருவருக்கு இத்தனை ஏக்கர் நிலம் தான் அதிக பட்சம் இருக்கலாம் என்று வைத்துக் கொள்ளுவோம். இதில் நிறையத் தீமைகளே பொருந்தி யிருக்கின்றன. நமது நாட்டில் நிலங்கள் ஒரே விதத் தன்மை இல்லாமல் பல திறப்பட்ட செழிப்புத் தன்மை வாய்ந்தவைகளாக இருக்கின்றன. உதாரணமாக, பஞ்சாபில் தாலகாங் என்னும் இடத்தில் 14 ஏகரானது, அருகாமையிலுள்ள சாத் என்ற இடத்தில் 1 அல்லது 2 ஏக்கருக்குச் சமமாக இருக்கின்றது. டெக்கானில் 50 ஏக்கர் இருந்தால்கூடப் போதாது. அதிக பட்சத்திற்கு மேல் உள்ள நிலத்தைப் பிடுங்குமுன், அவர்களுக்கு ஈடு கொடுத்தாக வேண்டும். மேலும் நிறைய நிலத்தைப் பயிரிடுவது லாபகரமானது; உற்பத்தியும் பெருகும். அதிக பட்சம் இவ்வளவு என்று நிர்ணயிப்பதனால் விவசாயம் லாபகரமாயு மிராது; உற்பத்தியும் குறையும்.

அடுத்ததாக, சர்க்கார், நாட்டில் உள்ள நிலத்தைப் பூராவும் எடுத்துக் கொள்ளலாம். இதனால் ஒரு பொறுப்பின் கீழ் உற்பத்திப் பெருக்கில் முனைவதினால் சர்க்காருடைய முயற்சி வெற்றி அடையும். ஆனால் தேசியமயமாக்குவது என்பது பெரும்பான்மை மக்களின் விருப்பத்திற்கு விரோதமாகச் செய்கின்ற செயலாகும். மற்றும் தனி மனிதனின் கண்காணிப்பு சர்க்காருடைய கண்காணிப்பை விடச் சிறந்தது என்பது கண்கூடு.

கடைசியாக, வணிகம் தொழில் போன்ற துறைகளில், வரையறை இல்லாமலிருக்கும் பொழுது, விவசாயத்தில் மட்டும் ஏன் வரையறையைப் புகுத்த வேண்டும் என்று கேட்பது நியாயந்தான். வரையறையைப் புகுத்தினால் பெரும்பான்மை மக்கள் விவசாயத்தைக் கைவிடுவார்கள். ஆகவே உற்பத்தி குறையும்.

உணவு நெருக்கடி நிலைமையைச் சமாளிக்க, மென்மேலும் உணவு உற்பத்தி பெருக்குவதில் ஊக்கமளித்தும், உணவுப் பங்கீடு உற்பத்தி முறைகளில் உள்ள குறைகளைத் தவிர்ப்பதுமே உடனடியாகக் கடைப் பிடிக்க வேண்டிய முறையே யல்லாது, நிலப் பிரச்னையைப் பற்றி ஆலோசித்துக் கொண்டிருப்பது அல்ல.

கோரக்பூர்
6—5—51 எஸ். ஹரிஹரன்

★

பெரிய பட்டாதார்கள் தங்களிடம் இருக்கும் அதிக நிலங்களை வருஷா வருஷம் ஏலத்தில் குத்தகைக்கு விடுகிறார்கள். அப்படி குத்தகைக்கு எடுப்பவர்களிடம் பூமியில் விளைந்தாலும் விளையா விட்டாலும் நிர்த்தாட்சண்யமாகப் பலாத்காரமாய் வீட்டிலுள்ள விதைத் தானியம், ஆடு மாடு முதலியவைகளை யெல்லாம் பறிமுதல் செய்து விடுகிறார்கள். சொந்தப் பண்ணை வைத்து நடத்தினாலோ உழைக்கும் ஆட்களுக்கு அரை வயிற்றுக் கஞ்சிக்கும் போதாமல் கூலி கொடுத்து அவர்களை தலைமுறை தலைமுறையாய் அடிமை கொண்டு தாங்கள் பலகாலம் நிலப் பிரபுக்களாகவே இருந்து வருகிறார்கள். குறைந்த பட்ச நிலம் படைத்த குடியானவர்கள் ஒரு வருஷம் மழையில்லா விட்டால் விவசாயத்தில் நஷ்டத்தைத் தாங்க வகையின்றிப் பெரிய மிராசுதாரிடம் நிலத்தை அடகு வைத்து அதைத் தீர்க்க முடியாமல் பெரும் நிலம் படைத்தவர்களுக்கே அந்த நிலத்தை விற்றுவிட்டு நகர்ப் புறம் வந்து விறகுடைத்தும் மூட்டை தூக்கியும், கைவண்டி இழுத்தும் ஜீவிக்கிறார்கள். சுருங்கச் சொல்லின் ஒவ்வொரு நகரத்திலும் மேலே நான் குறிப்பிட்ட தொழில் செய்யும் ஒவ்வொருவரும் வாழ வகையின்றி நகரத்தை நாடி வந்தவரே.

நம் நாடு விவசாயத் துறையில் முன்னேற வேண்டுமானால் நிலச்சுவான் திட்டத்தை மாற்றியமைத்து ஒவ்வொரு தனி நபருக்கும் குறைந்த பட்சம் பத்து ஏக்கராவும் அதிக பட்சம் முப்பது ஏக்கராவுமாகப் பங்கீடு செய்ய வேண்டும். அதோடுமட்டு மல்லாமல் அதற்கு அரசாங்க மேற்பார்வையும் வைத்து, மேற்படி நிலங்களுக்கு நீர்வசதி மின்சார வசதி நவீன உழவுக் கருவிகள் உதவி செய்து கொடுக்க வேண்டும்.

குளத்தூர்
27—5—51 கே. கே. நாச்சிமுத்துக் கவுண்டர்

ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரசாமி

37. சர்வாங்காசனத்தின் சாதனைகள்

சர்வாங்காசனம் செய்யும் விதத்தைப் பற்றித் தெரிந்துகொண்டோம். அது எப்படி சகல பிணிகளுக்கும் சஞ்சீவியாய் இருக்க முடிகிறது என்பதை ஆராய்வோம்.

உடலில் எந்த ஒரு பாகத்துக்கும் இரத்தம் அவசியம் வேண்டும். இரத்தம் அங்கு செல்லா விட்டால் உணர்ச்சி இருக்காது. அந்த பாகம் உபயோகப் படாது. அப்படியாகாமல் உடம்பில் எல்லா மூலை முடுக்குகளுக்கும் இரத்தத்தை அனுப்பிக் கொண்டே இருப்பது இருதயமே. இது ஒரு பம்பிங் ஸ்டேஷனைப் போன்றது.

பூமியின் ஆகர்ஷண சக்தியை எல்லோரும் அறிவர். பூமியானது எந்த ஒரு வஸ்துவையும் தன் பக்கமே இழுக்கும் சக்தி உடையது. நாம் எவ்வளவு பலங்கொண்டு ஒரு கல்லை வானத்தில் வீசி எறிந்தாலும், நமது பலத்துக்குத் தகுந்தாற்போல் அந்தக் கல் மேலே சென்ற பிறகு கீழேதான் விழும். காற்றில் பறக்கக்கூடிய வஸ்துக்களும் காற்று அடங்கியதும் பூமியைத்தான் வந்தடையும்.

அந்த வேலை நமது சரீரத்திலும் நடைபெறுகிறது. பாதம், கால், தொடை, வயிறு இவற்றிற்கு இரத்தத்தை அனுப்ப இருதயம் அதிகம் வேலை செய்ய வேண்டியதில்லை. பூமியின் ஆகர்ஷண சக்தியினால் அந்தப் பாகங்களுக்கு இரத்தம் தானாகவே இழுத்துக் கொள்ளும். ஆனால் இருதயத்தின் மேல் பாகங்களுக்குப் போகத்தான் இருதயமானது ஆகர்ஷண சக்தியை எதிர்த்துப் போராட வேண்டியிருக்கிறது. இருதயம் துடிக்கும் ஒவ்வொரு துடிப்பும் இரத்தத்தை அடித்து அடித்து அனுப்பும் சத்தமே. நாம் பிறந்தது முதல், ஏன்? கருவிலிருக்கும்போதிருந்து இருதயம் துடிக்க ஆரம்பித்து, இறக்கும் வரையில் வேலை செய்கிறது.

மனிதன் ஆரோக்ய விதிகளை அனுசரித்து, உடல் உழைப்பாலும், உணவாலும் உறக்கத்தாலும் காப்பாற்றும் வரை உடலுக்கு முக்கியமாய் இருதயத்திற்கு யாதொரு கெடுதலும் உண்டாகாது. ஆனால் இயற்கை விதிப்படி அறுபது வயதிற்குமேல் தைராய்ட் கோளத்தினுடைய வேலை குறைவதால், இருதயமும் சற்று கிரணமாய்த்தான் வேலை செய்யும். அப்பொழுது இரத்த நாம்புகளின் வழிகள் சிறுத்து இரத்த ஓட்டமும் மட்டுப்படும். இரத்த போஷணையும் மட்டுப்பட்டு, நரம்புகளின் வழிகளும் சுருங்குவதால் எல்லா அவயவங்களும் நரை ஆரம்பிக்கின்றன. ஞானேந்திரியங்களும் தன் வேலையைக் குறைத்து வந்து நிறுத்திக் கொள்ளுகின்றன. படிப்படியாய் முதுமை அடைந்து பஞ்சேந்திரியங்களின் வேலைகளும் மட்டுப்பட்டுக் கடைசியில் குழந்தை நிலைமைக்கு வந்து சாவு ஏற்படுகிறது. இதற்கு நூறு வருடங்கள் ஆகும், என்று மனித ஆயுளைக் கணக்கெடுத்திருக்கிறார்கள்.

ஆனால் மனிதன், கட்டுக்கடங்கா நடத்தையினாலும், ஆகாரத்தினாலும், சோம்பேறித்தனத்தினாலும் நோய்களை அடைகிறான். அதைப் போக்கப் பல விஷ மருந்துகளை ஊசிகளின் மூலமாகவும் வேறு பல உபாயங்களினாலும் இரத்தத்துடன் கலக்கும்படிச் செய்து கொள்கிறான். இப்படித் தன் உடலைக் கெடுத்துத் தன் பூரண ஆயுளை அனுபவிக்காமல் இறந்து விடுகிறான். எத்தனை பேர் நடைப் பிணங்களாகத் திரிகின்றனர்! இவர்களின் தைராய்ட் கெட்டு, இருதயம் பாழடைந்து, அவயவங்கள் தேய்ந்து ஒன்றுக்கும் உதவா வாழ்க்கை வாழ்கின்றனர்.

இவர்களெல்லாம் பழையபடி ஆரோக்கியமாக இருக்க வேண்டுமானால், சர்வாங்காசனத்தைச் செய்தால்தான் முடியும்.

சரி, சர்வாங்காசனத்தைச் செய்வதினால் எப்படிப் பலன் உண்டாகிறது?

தலை, புஜம் மட்டும் கீழே தரையில் இருக்க மற்ற பாகங்களெல்லாம் மேல் தூக்கப்பட்டிருக்கின்றன. பூமியில், தலை, புஜம் முக்கியமாய்க் கழுத்து பதிந்திருக்கிறது. கழுத்தில் தைராய்ட் கோளமிருப்பதை முன்பே விவரிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது பூமியின் ஆகர்ஷண சக்தியானது கழுத்துக்கு அதிக ரத்தத்தை வரவழைக்கிறது. அதனால் தைராய்டிற்கு ரத்த போஷணை தாராளமாய்க் கிடைக்கிறது. தைராய்டும் பலமடைகிறது. அதனால் அது எப்பொழுதும் தன் கடமையாகிய தைராய்ட் ஹார்மோனை உற்பத்தி செய்கிறது. அதனால் ரத்தம் போஷணை அடைகிறது. நாடி, நரம்புகள் கெடாமல் இருக்கின்றன. உடல் அவயங்களெல்லாம் புத்துணர்ச்சி பெற்றுப் பலமடைகின்றன

இதில் ஒரு பரம ரகஸ்யம் இருக்கிறது. தைராய்ட் வேலை செய்ய, எப்படி ரத்த போஷணை அவசியமோ, அதைப்போல இருதயம் வேலை செய்ய தைராய்ட் ஹார்மோன் அவசியம். இரண்டும் தொத்தி நின்று தொண்டாற்றுகின்றன. அதனால்தான் முதுமையில் இளமை கிடைக்கிறது. குரங்கின் தைராய்ட் கோள ஆபரேஷனின்றி வாலிபம் அடையும் ரகசியமும் இதுவே. இழந்த வாலிபம் பெறும் ரகசியமும் அதுதான். எதுவரை சர்வாங்காசனம் செய்து தைராய்டை நல்ல நிலைமையாய் வைத்திருக்கிறோமோ அதுவரை முதுமையும் அணுகாது. எந்தவித வியாதிகளும் வாராது. எல்லா அவயவங்களும் எப்பொழுதும் ஒழுங்காய் அதனதன் வேலைகளைச் செய்து வரும்.

தைராய்டின் ஹார்மோன், நாட்டைப் பாதுகாக்கும் சேனைகளின் ஆயுதங்களைப் போன்றது. உடலில் புகும் பலவித கிருமிகளை எதிர்ப்பது ரத்தத்தில் இருக்கும் சிவப்பணுக்கள்தான். ஆனாலும் அதற்குச் சக்தி அளித்து வெற்றி பெற வைப்பது ஹார்மோன் சக்தியினால் ஊக்கப்பட்ட ரத்த அணுக்கள். அவை சர்வ ஆயுத பாணிகளாகிய ரக்ஷா சைனியத்தைப் போன்றவை. இந்த அணுக்கள் எதுவரை ஹார்மோன் ஆயுதங்களைப் பெற்றுப் பலம் பொருந்தியதாய் நமது தேகத்தைப் பாதுகாக்கின்றதோ அதுவரை வியாதி எனும் சத்ரு உடலுக்குள் நுழைய மாட்டான்.

காலரா, பிளேக், அம்மை மற்றும் என்னென்ன தொத்து நோய்கள் உண்டோ அவை இந்த சர்வாங்காசனத்தைப் பழகுபவர்களிடம் ஒன்றும் செய்யாது. மலேரியாக் கொசு கடிக்கலாம், ஆனால் அந்தக் கிருமி ரத்தத்தில் அபிவிர்த்தி ஆக முடியாது. உடனே ரத்தத்திலுள்ள சிவப்புக் கிருமிகளுடன் சண்டை நடக்கும். மலேரியாக் கிருமி கொல்லப்பட்டு விடும். இம்மாதிரியே எந்த நோய்களையும் அணுகவொட்டாது.

நால்வர்

மூன்றாவது உலக மகா யுத்தம் எங்கே, எப்போது ஏற்படக் கூடும்! அந்த யுத்தத்தில் அமெரிக்கா அணுகுண்டுகளைப் பிரயோகிக்குமா! கொரியா யுத்தம் உலக யுத்தமாக மாறுமா! ஐரோப்பாவில் உண்டாகி வரும் சில்லறை நெருக்கடிகள் உலக யுத்தத்தில் வந்து முடியுமா! ஈரானில் ஏற்பட்டுள்ள பிரிட்டிஷ் எண்ணெய்க் கம்பெனித் தகராறு யுத்தமாக உருவெடுத்தால், அதில் அமெரிக்கத் துருப்புகள் பங்கெடுத்துக் கொள்ளுமா!


பிராட்லி

இந்தக் கேள்விகளுக்குத் திட்டமாகப் பதில் கூறும் அதிகாரமும் ஆற்றலும் படைத்த நால்வர் அமெரிக்காவில் இருக்கிறார்கள். அவர்கள்தான் அமெரிக்க இராணுவப் பிரதம நிர்வாகிகள் (Chiefs of Staff).


வாண்டன்பர்க்

அவர்களில் ஜெனரல் ஜே. லாட்டன் காலின்ஸ் என்பவர் அமெரிக்கத் தரைப் படையின் பிரதம நிர்வாகி; அட்மிரல் பாரஸ்ட் பி. ஷெர்மன் அமெரிக்கக் கடற் படையின் பிரதம நிர்வாகி; ஜெனரல் ஹாயிட் எஸ். வாண்டன்பர்க் அமெரிக்க விமானப் படையின் பிரதம நிர்வாகி. மேற்படி நிர்வாகிகள் சபைக்கு ஜெனரல் ஓமர் பிராட்லி தான் தலைவர். இவர்கள் சென்ற மகா யுத்தத்தில் போர் முனைகளிலே தங்களுடைய வீர தீர பராக்கிரமங்களைக் காட்டிப் புகழ்பெற்றவர்கள்.


காலின்ஸ்

ஐரோப்பாவிலும், மத்திய கிழக்குப் பிரதேசங்களிலும், கிழக்கு ஆசியாவிலும், உலகத்தின் எந்தப் பிரதேசத்திலும் அமெரிக்காவின் போர்த் திட்டத்தை வகுக்கும் முழுப் பொறுப்பும் இந்த நால்வரையும் சேர்ந்தது.

அமெரிக்கத் தரைப்படை, கடற்படை, விமானப்படை முதலியன எந்த அளவில் எந்த இடத்துக்குச் செல்ல வேண்டும் என்பதை இவர்கள்தான் நிர்ணயிப்பார்கள். அமெரிக்காவில் எத்தனை துருப்புகள் பயிற்சி பெறவேண்டும், உலகத்தின் கேந்திரப் பிரதேசங்களில் எத்தனை துருப்புகள் இருக்கவேண்டும், போர் முனைகளுக்கு எத்தனை துருப்புகள் செல்ல வேண்டும் என்பதை யெல்லாம் இவர்களே ஆலோசித்து முடிவு செய்வார்கள்.


ஷெர்மன்

அமெரிக்க ஜனாதிபதியும் யுத்த மந்திரியும்கூட இவர்களுடைய ஆலோசனையைக் கேட்காமல் யுத்த சம்பந்தமான முடிவு எதுவும் செய்ய மாட்டார்கள். இவர்களுடைய யோசனையின் பேரிலேயே ஜெனரல் மெக்ஆர்தர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

மொத்தத்தில் உலகத்தையே அழிக்கவல்ல மகத்தான சக்தி பொருந்திய அமெரிக்க இராணுவ யந்திரம் இந்த நால்வரின் உத்தரவின்றி ஓர் அங்குலம் கூட இயங்காது!

சளி தொற்று நோய்கள் அணுகாது. மற்ற நோய்களாகிய வயிற்றுவலி, தலைவலி, மற்றும் வயிற்று அவயவங்கள் கெடுவதால் உண்டாகும் நோய்களுக்கெல்லாம் என்ன செய்வது என்று கேட்கலாம்.

அவைகள் எல்லாம் பலர் தானே தேடிக் கொள்ளும் வியாதிகளே. பகுத்தறிவை நன்கு உபயோகித்து, உடலை, பழக்க வழக்கம், ஆகாரம் இவைகளைச் சீர்திருத்திக் கொண்டு, சர்வாங்காசனமும் பழகி வந்தால் எல்லாம் சரியாய் விடும்.

நமக்கு வரும் நோய்களில் மூன்று விதங்கள் இருக்கின்றன.

1. தாமே தேடிக் கொள்ளும் நோய். இது நமது கவனிப்புக் குறைவாலும், அசட்டையினாலும், ஆகாரத்தினாலும், பழக்க வழக்கங்களினாலும் உண்டாவது.

2. நம் அநுமதியில்லாமல் புகும் நோய். இது பயங்கரத் தொத்து நோய்க் கிருமிகளால் உண்டாவது.

3. பரம்பரை நோய். இது க்ஷயம், காசம், காப்பான், குஷ்டம், மேகம், வலிகள்.

இவைகளெல்லாம் சர்வாங்காசனத்தினால் குணமாகக் கூடியவே. இருந்தாலும் வியாதி உள்ளவர்கள் வியாதிகளைப் போக்கிக் கொள்ளுவதற்காக ஆசனம் செய்வதாயிருந்தால் அதில் சில கட்டுப்பாடுகளைக் கட்டாயம் அநுசரிக்க வேண்டும். அப்படி அநுசரித்தால் சில மாதங்களில் தீர்ந்து குணமாகக் கூடிய வியாதிகள் சில வாரங்களிலேயே குணமாகிவிடும். ஆரோக்கிய வாழ்வு வாழலாம். அது ஒன்றும் அப்படிப் பிரமாதமான கட்டுப்பாடல்ல. மிகச் சுலபமாக ஒவ்வொருவரும் அநுசரிக்கக் கூடியது தான். அதாவது ஆசனப் பயிற்சியுடன் அந்தந்த வியாதிக்குத் தக்கபடி சில ஆகார நியமங்களுடன், சில வாழ்க்கைத் திட்டத்தையும் கைக் கொண்டால் எல்லாவித வியாதிகளுமே விலக்கக் கூடியதுதான். சிற்சில வியாதிகளுக்கு வேறு சில ஆசனங்களும் செய்ய வேண்டியிருக்கும்.

ஹலாசனம் செய்தால் நரம்புகள் உணர்ச்சி அடையும் என்று சொன்னோமல்லவா? அத்துடன் சர்வாங்காசனமும் செய்தால் அதன் உணர்ச்சி இரட்டிப்பாகும். ஆனால் 15, 20, 40 நாள் என்று அவ்வப்போது பிரம்மச்சரியம் கைக் கொண்டு சுத்தமனதாய் விடாமல் காலை, மாலை ஹலாசனம், சர்வாங்காசனம் பழகவேண்டும். (தொடரும்)

○●○

தோன்றில் புகழொடு தோன்றுக!

தாங்கள் எழுதிய "தெய்வ தரிசனம்" என்ற கட்டுரையை 20—5—51 கல்கி இதழில் கண்டேன். திருவள்ளுவரோடு உரையாடுவதாகக் குறிப்பிட்டு, குறள் ஒன்றையும் பொறித்துப் பொருளைப் புகன்று பொல்லாத கேள்விகளை எழுப்பி விடை கூறாது விடுத்துள்ளீர்கள்.

"தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற குறளுக்குப் பழைய பரிமேலழகரின் பழைய உரையைத் தாங்களும் பகர்ந்தமையே குறளில் ஒரு குறளி வேலை செய்ய நேர்ந்தது.

"தோன்றில்"—என்பதற்குப் "பிறப்பதற்கு" என்ற பொருள் தவறு. எப்படி!

"பிறந்தால் புகழுடையோராய்ப் பிறக்க வேண்டும்; இன்றேல் பிறவாதிருக்க வேண்டும்."

இவ்வுரையை "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்ற முறையிலே கூர்ந்து நோக்க வேண்டும். நாம் புகழ் பெறுவோமா, இகழுடையோமா என்ற எண்ணம் ஒருவருக்குப் பிறப்பதற்கு முன் இருந்ததில்லை; இருக்க இயலாது. ஓவியப் புலவன், காவியக் கவிஞன், சிலைச்சிற்பி, கலையறிஞன்—தன் திறமையைப் பிறப்பதற்கு முன் கூட அல்ல குழந்தைப் பருவத்திலேகூட உணர்வதில்லை.

எனவே "புகழொடு தோன்றுக" என்பதற்குக் கூறிய உரை சீரிய முறையில் இல்லை; பொருந்தாத உரை அது.

அடுத்த அடி பெரு வியப்புக்குரியது. "தோன்றலின் தோன்றாமை நன்று"—அங்ஙனம் பிறப்பதினும் பிறவாமை நல்லது.—குழந்தை பிறப்பதற்குத் தாய் தந்தையர் காரணமா? குழந்தை காரணமா? எனவே இவ்வுரையும் தவறு என்பது தெளிவு.

"தோன்றில்" — என்பதற்கு "பிறர் முன்னால் தோன்றினால்" என்று பொருள் கொள்ள வேண்டும். "பிறர் முன் தோன்றில் புகழொடு தோன்றுக; அங்ஙன மின்றேல் (பிறர் முன்) தோன்றலின் தோன்றாமை நன்று." இதுவே நேரிய சீரிய பொருளாகும்.

'அறிவால் பெரியவன், அருளால் மிக்கவன், அறத்தால் சிறந்தவன், ஆற்றல் மிக்கோன், அன்புடைப் பண்பினன், தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்' என்ற முறையிலே பிறர்முன் புகழொடு தோன்ற வேண்டும் என்பதே தெய்வப் புலவர் திருவள்ளுவர் கருத்தாகும்.

வத்தலக்குண்டு
19—5—51

அ. கேசவமூர்த்தி



சுருதி சேருமா!

கி. ரா. கோபாலன்

தம்புராவைக் காதோடு அணைப்பாகப் பொருத்திக் கொண்டு மீட்டிய வண்ணம் கண்களை மூடிக்கொண்டு அதில் லயித்திருந்தான் ஜயராமன். வெகு நேரம் வரையில் தம்புராவைச் சுருதி சேர்க்கப் பிரயத்தனப்பட்டு வெற்றியடைந்த பிறகு மீட்டிய வண்ணமே அந்த ஸுநாதத்தில் கொஞ்ச நேரமாவது மெய் மறந்திருக்க அவன் விரும்பினான் போலிருக்கிறது.

மாலை நேரம்! நல்ல கோடை காலமானதால் இன்னும் வெய்யிலின் கொடுமை தணியாமலிருந்தாலும் அவன் மாடி அறையில் குளு குளு வென்று காற்று வீசி அவனைத் தாபத்திற்கு ஆளாக்காமல் காப்பாற்றியது.

நெடு நேரம் வரையில் தம்புராவின் நாதவெள்ளத்தில் அவன் தன்னை மறந்து இருந்து விட்டான். அவன் கண்களைத் திறந்த பொழுது அவன் எதிரில் ஸியாமளா நின்று கொண்டிருந்ததைக் கண்டு திடுக்கிட்டான். அவளும் கையில் ஒரு வெள்ளி டம்ளருடன் அவன் எப்பொழுது கண்ணைத் திறப்பான் என்று எதிர்பார்த்து நிற்பது போல் தானிருந்தது. எப்படியோ நாதத்தில் ஆழ்ந்திருந்த அவனது மோனத் தவமும் கலைந்தது. அவன் தம்புரா மீட்டுவதை நிறுத்தி அதைக் கீழே வைத்து விட்டு "என்னம்மா......?" என்றான் பரிவோடும் ஆவலோடும்.

"காப்பி கொண்டு வந்தேன்" என்றாள் அவள், டம்ளரைக் கீழே வைத்துவிட்டு.

தினமும் இரண்டு வேளை போஜனமும் போட்டுத் தனக்குச் சங்கீதாப்பியாசமும் செய்து வைக்கும் குருநாதர் வீட்டில் எப்பொழுதாவது ஓரோர் சந்தர்ப்பங்களில் காப்பி பலகாரங்களைப் பதுக்கி வைத்து ரகசியமாகக் கொடுக்கும் கள்ளங் கபடமற்ற இரக்கமுள்ள ஒரு ஜீவன் இருப்பதை அவன் ஒரு பெரிய அதிர்ஷ்டமாகத்தான் கருதினான். தன் மீது பச்சாத்தாபங் கொண்டு இத்தகைய உபசாரங்களை ரகசியமாகச் செய்யும் அந்தப் பேதைப் பெண்ணுக்கு இதனால் ஏதேனும் ஆபத்து ஏற்பட்டு விடப் போகிறதே என்று எண்ணி அவன் பயப்படுவான்.

அவள் அவன் முகத்தை நன்றியறிதலோடு பார்த்துக் கொண்டே "எனக்கு எதற்கு அம்மா காப்பி......?" என்றான். அவன் அப்படிச் சொன்னானே தவிர அவனுடைய கைகள் அவனையறியாமலேயே காப்பி வைத்திருக்கும் டம்ளரை எடுத்தது.

ஸியாமளா அவனுக்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவள் அவனுக்காக ஏதேனும் கொண்டு வந்து கொடுக்கும் போதெல்லாம் அவன் எனக்கு எதற்காக அம்மா என்றுதான் கேட்பது வழக்கம். எதற்காக என்று கேட்கும் அவனுடைய கேள்விக்கு எப்படிப் பதில் அளிப்பதென்றே அவளுக்குத் தெரியாது. சிரித்துக் கொண்டே மௌனமாக நிற்பாள். அன்றும் அப்படித்தான் நின்றாள். ஒருவருக்கும் தெரியாமல் அவனுக்குப் பல பண்டங்களை ஒளித்து மறைத்துக் கொடுக்க வேண்டுமென்ற ஆவல், அவள் இருதயத்தில் எங்கிருந்து எப்படி ஏற்பட்டது என்பது யோசித்துப் பார்த்தும் விளங்காத புதிராகத்தான் அவளுக்கு இருந்தது.

அவன் காப்பியைச் சாப்பிட்டு விட்டு டம்ளரைக் கீழே வைத்து விட்டு மறுபடியும் தம்புராவை மீட்டத் தொடங்கினான்.

முதலில் சேர்த்து வைத்திருந்த சுருதி அப்பொழுது கலைந்திருந்தது. அவள் டம்ளரைக் கையிலெடுத்துக் கொண்டே சிரித்த வண்ணம் "சுருதி கலைந்து விட்டது இல்லையா...?" என்றாள்.

"ஆமாம்! இந்தத் தம்புராவில் மந்தரத்தைப் பேச வைப்பது பகீரதப் பிரயத்தனமாகத் தானிருக்கிறது" என்றான்.

அவளும் "ஆமாம்!" என்று சொல்லி விட்டு அவனுக்குச் சமீபமாக நெருங்கி வந்து உட்கார்ந்தாள்.

அவள் அப்பொழுதே அந்த இடத்தை விட்டுப் போய் விடுவாள் என்று அவன் நினைத்ததற்கு மாறாக இவள் அவனுக்குச் சமீபமாக நெருங்கி வந்து உட்கார்ந்தது பெரிய தர்மசங்கடமான நிலைமையை அவனுக்கு உண்டாக்கியது.

அப்பொழுது அந்த வீட்டில் ஒருவருமில்லை. அவளுடைய தகப்பனார் வெளியே சென்றிருந்தார். அவளுடைய தாயாரும் எங்கோ உறவினர் வீட்டுக்குப் போயிருந்தாள். வீட்டோடு இருந்து பாடம் சொல்லிக் கொள்ளும் ஜயராமனிடம் அவர்களுக்குப் பூரணமான நம்பிக்கையுண்டு.

சியாமளாவைத் தனியாகச் சந்திக்க நேரிட்ட போதோ, அவளிடம் பேசக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டபோதோ கூச்சமும் பயமும் அவனை வதைத்து விடும். அவனுடைய அர்த்தமற்ற பதை பதைப்பும் நடுக்கமும் சியாமளாவுக்கு விநோதமாய்த்தானிருக்கும்.

சியாமளாவுக்கு வயது பதினெட்டு. ஜயராமனுக்கு வயது இருபத்தைந்து. அவன் மிகவும் எளிய குடும்பத்தில் பிறந்தவன். அனுபவம் நிறைந்த சங்கீத வித்வானாகிய ஜகதீசய்யரிடம் சிட்சை பயின்று சங்கீதத்தை ஜீவனோபாயமாக வைத்துக் கொள்ளலாம் என்ற முடிவுடன் ஐந்தாறு வருடங்களாக அவருடைய வீட்டோடு இருந்து அவரிடம் குற்றேவல்களைச் செய்து பயபக்தி விசுவாசத்துடன் பாடம் கற்றுக் கொண்டு வந்தான். ஜகதீசய்யர் முன்கோபி. கண்டிப்பானவர். ஜயராமன் அவரிடம் எவ்வளவோ குட்டுப் பட்டிருக்கிறான். எவ்வளவோ திட்டு வாங்கியிருக்கிறான். அவனுடைய பொறுமையும் அடக்கமும் ஜகதீசய்யரையே ஒவ்வொரு சமயம் ஆச்சரியத்திற்குள்ளாக்கி இருக்கிறது.

அவன் சாயங்கால வேளையில் ஒழிந்த நேரத்தில் சில பாடல்களைப் பாடிச் சாதகம் செய்யலாம் என்று உத்தேசித்தான். மிகவும் சிரமப்பட்டுச் சுருதி சேர்த்து வைத்திருந்த தம்புராவில் சுருதி கலைந்து விட்டது. மறுபடியும் சுருதி சேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டான். சியாமளா அவன் கண்ணெதிரில் இருக்கும் போது அவன் எப்படி மன நிம்மதியுடன் ஒரு காரியத்தைச் செய்து முடிக்க முடியும்? தம்புராவில் சுருதி சேர்த்தால்கூட அவனுடைய மனக் குழப்பத்திலும் தடுமாற்றத்திலும் சுருதி சேர்த்ததாகவே அவனுக்குத் தெரியவில்லை. தடுமாறினான்.

சியாமளா அவனுடைய தடுமாற்றத்தைக் கண்டு சிரித்தாள். "தம்புராவை இங்கே கொடு. நான் சுருதி சேர்க்கிறேன்" என்றாள்.

"வேண்டாம். நானே சேர்த்துக் கொள்ளுகிறேன். உனக்குக் கீழே ஏதேனும் காரியம் இருந்தால் போய்ப் பாரேன். அம்மாவும் வீட்டில் இல்லை!" என்றான்.

"எனக்கு ஒரு காரியமும் இல்லை. எல்லாவற்றையும் செய்து விட்டுத்தான் சாவகாசமாக வந்திருக்கிறேன்........."

அவள் சாவகாசமாக வந்திருக்கிறேன் என்று சொன்னது ஜயராமனின் குழப்பத்தையும் பயத்தையும் அதிகமாக்கியது. அவள் பேச்சிலிருந்து அவள் சீக்கிரமாக அந்த இடத்தை விட்டுப் போய்விடுவாள் என்று நினைக்க ஆதாரமில்லாமலிருந்தது. அவள் எதற்காகச் சாவகாசமாக வந்திருக்கிறாளோ? அவளுடைய பார்வை, பேச்சு, சிரிப்பு எல்லாவற்றிலுமே ஏதேதோ உள்ளர்த்தமும் ரகசியமும் பொதிந்திருப்பது போல்தான் அவனுக்குப் பட்டது. "வாசற் கதவு திறந்திருக்கிறதா......?" என்றான் தயக்கத்துடன்.

"அதெல்லாம் பயப்பட வேண்டாம். கதவைச் சாத்தித் தாழிட்டு விட்டுத்தான் வந்திருக்கிறேன்" என்றாள் அவள்.

"அதெல்லாம் பயமில்லை......நீ தான் கொஞ்சம் சுருதி சேரேன். ஒழிந்த நேரமாய் இருக்கிறதே இரண்டு பாட்டுப் பாடலாமென்று நினைத்தேன்" என்று சொல்லிக் கொண்டே தம்புராவை அவளிடம் கொடுத்தான்.

"நானும் உன்னோடு சேர்ந்து ரெண்டு பாட்டுப் பாடலாமென்றுதான் வந்தேன். எனக்கு ரொம்ப நாளாக ஆசை, நீ பாடும் போதெல்லாம் உன்னோடு சேர்ந்து பாட வேண்டுமென்றும்......" என்று தம்புராவைச் சுருதி கூட்டிய வண்ணம் அவனைக் கடைக் கண்ணால் பார்த்தாள்.

இதைக் கேட்டதும் ஜயராமனுக்குத் தூக்கி வாரிப்போட்டது. மனதில் திகிலும் அதிகமாகியது. தன்னை ஏதாவது சந்தியில் இழுத்து வைக்கத்தான் தன்னோடு சேர்ந்து பாடவேண்டுமென்று

அந்தப் பெண்ணுக்கு விபரீத யோசனை தோன்றியிருக்க வேண்டுமென்று நினைத்தான். ''என்னோடு சேர்ந்து பாடவா...'' என்று பயத்தோடும் பரபரப்போடும் அவளைப் பார்த்தான். அவளோ பதில் பேசாமல் சுருதி சேர்ப்பதிலேயே கவனமாய் இருந்தாள்.

சியாமளா தனியாகப் பாடும்போதெல்லாம் ஜயராமன் கேட்டிருக்கிறான். நல்ல சங்கீத ஞானம்.- அப்பழுக்கற்ற இனிய சாரீரம். அவளுடைய தகப்பனார் ஜயராமனுக்குச் சொல்லிக் கொடுத்தது போல் தான் அவளுக்கும் சொல்லிக் கொடுத்திருந்தார். இருவரும் தனித் தனியாகச் சொல்லிக் கொண்டாலும் ஒரே வகையான பாடம்தான். சியாமளா தனியாகப் பாடும் போதெல்லாம் அவளோடு சேர்ந்து பாட வேண்டுமென்ற ஆவல் ஜெயராமனுக்கும் ஏற்படுவதுண்டு. ஆனால் அந்த ஆசையை, பயமும் சம்சயமும் விழுங்கிவிடும். ஆனால் சியாமளா அவளாகவே துணிச்சலோடு அவனோடு சேர்ந்து பாட விரும்புகிறாள். அவன் மனசில் பயமும் கலக்கமும் இருந்தாலும் அவைகளை அமுக்கிவிட்டுச் சிறிது சிறிதாக ஆசையும் ஆவலும் தலை தூக்கி ஆட ஆரம்பித்தன.


சியாமளா சுருதி சேர்த்துத் தம்புரா மீட்டிக்கொண்டே ''ஹூம்! பாட ஆரம்பிக்கலாமா ...?'' என்றாள்.

ஜயராமன் ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டே மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு ''ஹூம்! முதலில் காம்போதி வர்ணம் பாடிவிட்டு அப்புறம் கீர்த்தனங்கள் பாடுவோம்'' என்றான்.

''சரி.''

ஒன்று. இரண்டு. மூன்று. ஒன்றுக்குப் பின் ஒன்றாக நேரம் போவதே தெரியாமல் இருவரும் பாடிக் கொண்டிருந்தனர். இருவரும் விலைகொள்ளாத சங்கீத சாகரத்தில் அமிழ்ந்து விட்டனர் என்றுகூடச் சொல்லலாம்.

வாசற்கதவை யாரோ தட தடவென்று தட்டியது ஜயராமனின் காதில் விழுந்தது. அவன் நடுங்கிக்கொண்டே ''சியாமளா! யாரோ கதவைத் தட்டுகிறார்களே? அப்பாவோ அம்மாவோ? எத்தனை நாழியாய்த் தட்டுகிறார்களோ......!'' என்றான்.



பயத்தால் அவன் குரல் நடுங்கியது. உடல் வெலவெலத்து வியர்த்துக் கொட்டியது.

“யாரா யிருந்தால் என்ன? இதற்காக ஏன் பயப்படணும்? இதோ போய் நான் கதவைத் திறக்கிறேன்” என்று சொல்லி விட்டு எழுந்து போனாள் சியாமளா. ஜயராமன் உட்கார்ந்த இடத்திலேயே சிலையாகி விட்டான்.

கீழே தாழ்வாரத்திலிருந்து பேச்சுக் குரல் கேட்டது. “அரை மணி நேரமா கதவை உடைக்கிறேன்! இரண்டு பேருமா அப்படியே உலகத்தையே மறந்து சங்கீத கானம் செய்ய ஆரம்பித்து விட்டீர்களே...!” இது ஜகதீசய்யரின் குரல். சியாமளா அவருக்கு எவ்விதமான பதிலும் சொன்னதாகத் தெரியவில்லை. மாடியில் ஜயராமன் மாத்திரம் அடுத்த கணம் என்ன நேருமோ என்று வயிற்றில் நெருப்பைக்கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

ஜகதீசய்யர் மாடிக்கு வந்தார். ஜயராமன் அவரைக் கண்டதும் அலறியடித்துக் கொண்டு எழுந்து ஏதோ பெரிய குற்றத்தைச் செய்துவிட்டவன் போல் பர பரவென்று விழித்தான்.

ஜகதீசய்யர் ஒரு தடவை கனைத்துக் கொண்டே “என்ன ஜயராமா! சியாமளா எல்லாப் பாட்டையும் சுருதி சுத்தமாக லயசுத்தமாக பாடுகிறாளா?” என்றார்.

அவனுக்கு எப்படிப் பதில் சொல்லுவதென்றே தெரியவில்லை. “ஹூம், சுத்தமாகப் பாடுகிறாள்” என்று முனகினான் எங்கேயோ பார்த்துக் கொண்டு. இந்த வார்த்தை அவன் நெஞ்சிலிருந்து வெளியே வருவதற்குள் அவன் மூச்சே நின்றுவிடும் போலிருந்தது.

“சந்தோஷம். அதுதான் காலையிலேயே அவளிடம் சொல்லி இருந்தேன். மத்தியானம் ஒழிந்த வேளையில் அவளிடம் எல்லாப் பாட்டையும் ஒரு தடவை பாடிக் காட்டி ஏதாவது தவறு இருந்தால் திருத்திக் கொள் என்று. உன்னோடு சேர்ந்து தானே பாடினாள்? இல்லா விட்டால் அது ஏதாவது ஒரு தனி வழியாக......?” என்று சொல்லி நிறுத்தினார்.

ஜயராமனுக்கு முழு பயம் தெளியா விட்டாலும் அவன் எதிர்பார்த்த அளவிற்கு விபரீதமில்லாமல் போனது அவனுக்குச் சிறிது தைரியத்தைக் கொடுத்தது. “அதெல்லாம் ஒன்றுமில்லை. சேர்ந்து நன்றாய்ப் பாடினாள்” என்றான்.

“சந்தோஷம். எவ்வளவுதான் சிரமப்பட்டு அவளுக்கு நான் சொல்லிக் கொடுத்திருந்தாலும் பிறர் கேட்டு ‘சரி’ என்று சொன்னால்தான் என் மனத்திற்குத் திருப்தி ஏற்படும். ஹூம், அவளுக்குக் கல்யாணத்திற்கு நிச்சயம் செய்து விட்டேனே உனக்குத் தெரியுமோ? முன்னே பார்த்து விட்டுப் போனான் பாரு, சோழபுரம் வரன்! அந்தப் பையனேதான். வைகாசி பதின்மூன்றாம் தேதி முகூர்த்தம் வைத்து விட்டேன். இனிமேல் அவளுக்கு எங்கே நாம் பாட்டுச் சொல்லிக் கொடுக்கப் போகிறோம்! சொல்லிக் கொடுத்த வரையில் தவறில்லாமல் பாடுகிறாளா என்று கடைசியாகப் பார்த்துவிட வேண்டாமா? அதனால்தான் உன்னிடம் பாடிக் காண்பிக்கச் சொன்னேன்” என்றார்.

ஜயராமனுக்கு இந்தச் செய்தி இடி விழுந்தது போல் தானிருந்தது. சியாமளாவிற்குக் கல்யாணம் செய்ய வரன் பார்த்துக் கொண்டிருந்தது அவனுக்குத் தெரியும். சியாமளாவைத் தான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்ற இச்சை இத்தனை நாளாக அவனுக்கு ஏற்பட்டதேயில்லை. அவனுக்கு அதை நினைத்துப் பார்க்கக் கூட அச்சமாய் இருந்தது. ஆனால் இன்று அவனுடைய பயந்த மனத்திலும் ஒரு ஆசை எழுந்து ஆடிக் கொண்டிருந்தது. சியாமளாவின் பார்வை, பேச்சு, சிரிப்பு எல்லாம் அவனை உன்மத்தனாக்கி மனதில் கற்பனையையும் கனவையும் எழுப்பி ஜோடனை செய்து வைத்திருந்தது. ஆனால் அவனுடைய ஆசை, கனவு, திட்டம், எல்லாவற்றையும் சரிந்துவிழும் மணற் கூண்டாக்கி விட்டது ஜகதீசய்யர் ‘சியாமளாவுக்குக் கல்யாணம் நிச்சயமாகி விட்டது’ என்று சொன்னது.

• • •

அன்று ஜயராமனுக்குச் சாப்பாடு பிடிக்கவில்லை. தூக்கமும் வரவில்லை. இரவெல்லாம் மனத்தோடு போராடிக் கொண்டிருந்தான். இனிமேல் அந்த வீட்டை விட்டுப் போய் விடுவதுதான் உசிதமான வழியாக அவனுக்குப் பட்டது.

மறுநாள் காலையில் கிணற்றடியில் சியாமளாவைத் தனியாகச் சந்திக்கக் கூடிய சந்தர்ப்பம் அவனுக்குக் கிடைத்தது. அவளைப் பரிதாபத்தோடு பார்த்துக் கொண்டே “உனக்கு இன்னும் பத்துப் பன்னிரண்டு நாளில் கல்யாணம். அப்புறம் நீ எங்கேயோ நான் எங்கேயோ...?” என்றான்.

இதைக் கேட்டதும் சியாமளாவின் முகம் ‘குப்’பென்று வெட்கத்தால் சிவந்தது. அவள் தலை குனிந்து கொண்டாள். அவள் இதழ்க் கடையோரத்தில் பெருமிதமான புன்முறுவல் தோன்றி நெளிந்தது. “கல்யாணமாகி விட்டால் என்ன? அடிக்கடி இங்கே நான் வந்து போக மாட்டேனா?” என்றாள்.



எஜமானி :—கண்ணாடி ஜன்னலில் அழுக்குப் படிந்து வெளியே ஒன்றும் பார்க்க முடியாமல் இருக்கிறதே! நீ கவனிக்கவே இல்லையே!
வேலைக்காரி :—அதனால் என்ன, அம்மா! நான் வெளியே பார்க்க வேண்டும் என்றால் ஜன்னல் கதவுகளை நன்றாய்த் திறந்து வைத்துக் கொள்ளுகிறேன்!

அவனும் ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். அந்தச் சிரிப்பு 'பேதைப் பெண்ணே! இவ்வளவு தானா என் இருதயம் உனக்கு விளங்கியது' என்பது போலிருந்தது. "அடிக்கடி நீ பிறந்த வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருக்காமல் முடியுமா? ஆனால் இந்த வீட்டில் நெடுநாள் நான் தங்கி இருக்க முடியுமா? நேற்றுப் பாடியது போல் நீயும் நானும் மறுபடியும் சேர்ந்து பாடக்கூடிய சந்தர்ப்பம் ஏற்படுமா? என்ன இருந்தாலும் நான் அன்னியன் தானே?" என்றான்.

சியாமளா இந்த வார்த்தையைக் கேட்டதும் திகைப்போடு அவன் முகத்தைப் பார்த்தாள். அவனுடைய முகத்தைப் பார்த்ததும் அவளுடைய மலர்ந்த முகம் வாட்டமடைந்தது. ஏமாற்றமும் சோகமும் நிறைந்த அவனுடைய முகமும் கண்களும் அவனுடைய இருதய தாபத்தை அவளுக்குத் தெளிவாக்கின. அவள் அவனுக்கு ஆறுதலாக ஏதாவது சொல்ல நினைத்தாள். நெஞ்சிலிருந்து வார்த்தைகள் எழும்பவில்லை. அதற்குப் பதிலாக அவள் கண்களில் இரு சொட்டுக் கண்ணீர் துளித்திருந்தது. அவள் சட்டென்று குடத்தைத் தூக்கி இடையில் வைத்துக் கொண்டு உள்ளே போய் விட்டாள்.

ஜயராமன் அன்று அந்த வீட்டில் மத்தியான சாப்பாட்டை முடித்துக் கொண்டு வெளியே சென்றவன் தான், மறுபடியும் அவனை ஒருவரும் பார்க்கவில்லை. அவன் எங்கு சென்றானோ, என்ன செய்தானோ ஒருவருக்கும் தெரியாது. ஜகதீசய்யர் ஆத்மார்த்தமாக அன்பு செலுத்திய சிஷ்யனை இழந்த வருத்தத்தைத் தாங்காது உருகினார். சியாமளா ஊமை கனா கண்டது போல் எதையும் வெளியே காட்டிக் கொள்ளாமல் மனம் சஞ்சலமடைந்தாள்.

• • •

சியாமளா விவாகமாகிப் புருஷன் வீட்டோடு குடித்தனம் நடத்திக் கொண்டிருந்தாள். அவளுடைய கணவனுக்கு அவளுடைய பாட்டைத் தனியாக இருந்து கேட்க வேண்டுமென்ற ஆசை. அன்று சாயங்கிரம் அதற்கு ஏற்றதாக இருந்தது. சியாமளாவுக்குப் பாடுவதில் இப்பொழுதெல்லாம் அவ்வளவு ஆர்வம் இல்லை. கணவனின் வற்புறுத்தலினால் அன்று இரண்டு கீர்த்தனங்களாவது உருவாகப் பாட நினைத்தாள். நெடுநாளைக்குப் பிறகு அன்று தான் தம்புராவை எடுத்து வைத்துக் கொண்டு சுருதி சேர்க்க முயன்றாள். இத்தனை நாள் வரையில் அந்தத் தம்புராவின் மேல்உறை கூட நீக்கப் படாமலிருந்தது. அப்பொழுதுதான் அதன் உறையை நீக்கித் தந்திகளைத் துடைத்துச் சுருதி சேர்க்க ஆரம்பித்தாள். ஆனால் அவள் மனோநிலை சரியாக இல்லை. நெடுநேரம் வரையில் சுருதி சேர்த்துப் பார்த்தாள். அவள் முயற்சியெல்லாம் வியர்த்தமாகியது. சுருதி கூடவில்லை. ஒருவேளை அவளுக்கிருந்த மனக் குழப்பத்தில் சுருதி சேர்ந்தும் சேராததுபோல் அவளுக்குத் தோன்றியதோ என்னவோ? அவள் தன் கணவனை இரக்கத்தோடு பார்த்துக் கொண்டே "தம்புராவில் சுருதி சேரவில்லையே......" என்றாள்.

"அப்படியென்றால் தம்புரா சுருதி இல்லாமல் பாடு-போதும்" என்றான்.

"தம்புரா சுருதி இல்லாமல் நான் பாடிப் பழக்கமில்லை..." என்றாள், கெஞ்சுவது போல் அவன் முகத்தைப் பார்த்துக் கொண்டே. அவளுடைய கண்கள் கணவனின் மன்னிப்பைக் கோரி மன்றாடின.

அவளுடைய கணவன் சிரித்துக்கொண்டு "சரி! இப்பொழுது உன் மனம் சரியாய் இல்லை போலிருக்கிறது. இன்னொரு நாள் பார்த்துக் கொள்ளலாம்" என்றான்.

சியாமளா மறுபடியும் தம்புராவுக்கு உறையைப் போட்டு யதாஸ்தானத்தில் கொண்டுபோய் வைத்தாள்.

இன்னொரு நாள் என்பது எந்த நாளோ? அந்த நாள் எப்பொழுது வருமோ? அன்று சியாமளாவின் மனம் சரியான நிலையில் இருக்குமோ இருக்காதோ? உறைக்குள் தவமிருக்கும் அந்தத் தம்புரா ஒரு நாள் வெளியே எடுக்கப்பட்டுச் சுருதி சேர்க்கப் பட்டால் சுருதி சேருமோ சேராதோ?

கமலாவின் அண்ணா!

என். கே. பத்மநாபன்

"ஏது, ரொம்பக் குஷியாக இருக்கிறீர்களே! ஆபீஸிலிருந்து வரும்போது தலைவலியும் கோபமும் தானே உங்கள் கூட வரும்?" என்று கேட்டாள் கமலா.

மணியும் சிரிப்புடன், "சந்தோஷம் மட்டும் வரவில்லை. ஒரு பை நிறையக் காய் கறிகள் வந்திருக்கிறது; நாளை இரவு என் சிநேகிதர்கள் நாலு பேர் சாப்பிட வருகிறார்கள்; அப்போது உன் மென்மையான கையினால் அருமையான சாப்பாடும் வரப்போகிறது!" என்றான்.

"அடேயப்பா! மார்க்கெட்டில் இருக்கிற அத்தனை காய்கறிகளும் வந்து விட்டதே! மழைதான் வரப்போகிறது!" என்றாள் கேலியாக.

மணி சிரித்தான். திடீரெனக் கமலாவின் பார்வை, மணியின் சட்டைப் பையிலிருந்து வெளியே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த கவரின்மேல் பாய்ந்தது. "அது என்ன லெட்டர்? ஊரிலிருந்து வந்ததா? 'பத்து'வுக்கு எப்படியிருக்கிறதாம்? உடம்பு குணமாகி விட்டதா?" என்று கேள்விகளை அடுக்கினாள். அதுவரை மகிழ்ச்சி நிலவிய மணியின் முகம், கமலாவின் கேள்விகளைக் கேட்டதும் சுருங்கிவிட்டது; வெறுப்புக் குறி தோன்றியது. "இன்னுமா அந்த அல்பனின் நினைப்பு? சந்தோஷமான வேளையில் அவனைப் போய் நினைக்கிறாயே! போ! உன் வேலையைப் பார்!" என்றான்.

மணியின் திடீர்க் கோபத்தைக் கண்டு அவள் கலங்கவில்லை. ஆனால் அவன் சொன்ன வார்த்தைகள் அவளைப் பெரிதும் பாதித்துவிட்டன.

கண்களில் வழிந்த நீரைக் கமலா, புடவைத் தலைப்பினால் துடைத்துக் கொண்டாள். 'சந்தோஷமான வேளையில் நினைக்க வேண்டிய புனித புருஷனல்லவா பத்து! என் வாழ்க்கை சந்தோஷமாக இருப்பதற்கே அவனல்லவா காரணம்? பாவம், என்ன பாடு படுகிறானோ! லெட்டரில் அப்பா என்ன எழுதியிருக்கிறாரோ!" எனப் பலவிதமான சிந்தனைகள் அவள் மனதில் அலைமோதின.

'பத்து' என்று கமலா குறிப்பிட்டது வேறு யாருமில்லை. அவளது அத்தை பிள்ளை, பத்மநாபன்தான் அவன். அவனைப்போல் அபாக்கியவான் யாருமே இருக்க முடியாது. தாயின் வயிற்றில் அவன் இருக்கும்போதே அவன் தகப்பனார் கண்ணை மூடிவிட்டார். அவன் பிறந்து ஒரு வருஷம் வரையில்தான் அவனது தாய் உயிருடன் இருந்தாள். பத்து அனாதையானான். ஆனால், அவனது மாமா நாராயணசாமி அவனை அப்படி நிர்க்கதியாக இருக்கும்படி விட்டுவிடவில்லை.

மாமாவின் அன்பான கவனத்திலே பத்து சந்தோஷமாக வளர்ந்து வந்தான். அவனது சந்தோஷ வாழ்வுக்கு இன்னொரு ஆத்மாவும் காரணமாக இருந்தது. நாராயணசாமியின் ஒரே புதல்வி கமலாதான் அது. சகோதர பாசத்தின் ருசியறியாத கமலாவுக்குப் பத்துவின் துணை பெரிதும் இன்பத்தைக் கொடுத்தது. அதேபோல், யாருமற்ற அனாதையாகிவிட்ட அவனுக்கும் கமலாவின் துணை சொல்ல முடியாத சந்தோஷத்தை அளித்தது. இருவரும் அண்ணன், தங்கையாக அன்புப் பிணைப்பிலே ஆனந்தமாக வளர்ந்து வந்தனர். இந்த அன்பை அதிகரிக்கும் விதத்தில் ஒரு சம்பவம் நிகழ்ந்தது.

ஒரு நாள் கமலா, கொல்லைப்புறத்தில் கிணற்றங்கரையருகில் பாத்திரம் தேய்த்துக் கொண்டிருந்தாள். பாத்திரம் தேய்த்துவிட்டு, தண்ணீர் இறைக்க வாளியைக் கிணற்றினுள் இறக்கினாள். வாளியின் கனத்தினாலோ அல்லது கால் வழுக்கி விட்டதாலோ......கமலா 'தடாரென'க் கிணற்றினுள் சாய்ந்தாள். "ஐயோ" என்ற அவளது பயங்கரமான அலறலும், கிணற்று ஜலத்தில் விழுந்த சப்தமும் பெரிதாகக் கேட்டது. வீட்டினுள்ளிருந்து நாராயணசாமி, அவர் சம்சாரம், பத்து மூன்று பேரும் தலைதெறிக்க ஓடி வந்தனர். "கமலா! என் கண்ணே!" எனக் கமலாவின் தாய் போட்ட அலறல் கோரமாக எதிரொலித்தது. அடுத்த கணம் பத்து கிணற்றில் குதித்து விட்டான்!

எல்லாம் கண் மூடிக் கண் திறப்பதற்குள் நடந்து விட்டது. கிணற்றில் பத்து குதித்ததை எல்லோரும் பார்த்தனர். 'குபுக்' என இரண்டு குமிழிகள் ஜலத்தில் தென்பட்டன. கமலாவுடன் பத்து, ஜலத்தினுள் இருந்து வெளியே வந்தான். தட்டுத் தடுமாறி ஒரு கையினால் கிணற்றைச் சுற்றிச் சிறிது எழும்பி நின்ற ஒரு கல்லைப் பிடித்துக் கொண்டான். அவன் தோளில் கமலா, பிரக்ஞையற்றுக் கிடந்தாள். அப்புறம் நடந்ததை அதிகமாக விவரிக்க வேண்டியதில்லை. வெளியே கூடி நின்றவர்களின் உதவியால், பத்து கமலாவுடன் வெளியே வந்தான்.

பத்து மட்டும் அன்று இல்லையென்றால் இன்று கமலா இல்லை. அவளுக்குக் கிட்டியிருக்கும் இன்பவாழ்வு இல்லை.

அதெல்லாம் பழையகால நிகழ்ச்சிகளாகிவிட்டன. கமலா, துள்ளித் திரியும் சிறுமிப் பருவத்தைக் கடந்து, அடக்கமும் நாணமும் உள்ள மங்கையானாள். பருவத்தின் வளர்ச்சி அவளுக்கொரு தனி அழகைக் கொடுத்தது. ஏற்கனவே, பத்தரை மாற்றுத் தங்கத்தில் செய்த பதுமை போல் காட்சியளித்தாள். இந்த அழகைக் கண்டு மயங்கித்தான் மணி, வரதட்சிணை, சீர் சினத்திகளையெல்லாம் பொருட்படுத்தாமல் அவளை மணந்து கொள்ள முன் வந்தான். காரியவசாமிக்கு "அதிக செலவில்லாமல் கலியாணம் முடிந்துவிட்டதே!" என்பதில் பெரு மகிழ்ச்சி. கமலாவும் மணியின் களையான முகத்தையும் கட்டுமஸ்தான உடலையும் கண்டு மகிழ்ந்து அவனை மணந்து கொள்ள மனப்பூர்வமாகச் சம்மதித்தாள். இப்படி எல்லோரும் மகிழ்ச்சி வெள்ளத்தில் தத்தளிக்கும்போது, பத்து மட்டும் கரை காண முடியாத சோகத்தில் மூழ்கிக் கிடந்தான். "இதுநாள் வரை நம்மிடம் அன்பு காட்டிவந்த ஜீவன் பிரிந்து போகிறது!" என்றுதான் அவன் வருந்தினான்.

கமலா கணவன் வீட்டுக்குப் போன பிறகு பெற்றோருக்குக் கடிதம் எழுதும்போதெல்லாம் அத்துடன் தனியாகப் பத்துவுக்கும் கடிதம் எழுதுவாள். என்னதான் கணவன் வீட்டுக்கு வந்தாலும் பத்துவை மறக்க அவள் உள்ளம் மறுத்தது. மறப்பதற்கு பதிலாக அவன்பேரில் அன்பு தான் அதிகமாயிற்று பத்துவும் அவளுக்குக் கடிதமெழுதத் தவறவில்லை. இதை மணி கவனித்தான். சந்தேகப்பித்துக் கொண்ட அவன் மனத்தில் சஞ்சலம் பிறந்தது. "யார் இந்தப் பித்துக்குளி, பத்து?" என்று தன் மனதிலேயே சிந்தித்துப் பார்த்தான். மூளை குழம்பியதுதான் மிச்சமே தவிரப் பத்து யாரென அவனால் நிர்ணயிக்க முடியவில்லை. கமலாவிடம் கேட்கலாமென்று நினைத்தான். ஆனால், அதற்குள் கமலாவே அவனிடம் ஒன்றைக் கேட்டுவிட்டாள்.

"என்ன... உங்க ஆபீஸிலே ஏதாவது வேலை காலியாக இருக்கிறதா?" என்று கேட்டாள். "யாருக்காக இந்தச் சிபாரிசு?" என்று மணி திருப்பிக் கேட்டான். கமலாவின் முகத்தில் புன்னகை அரும்பியது. "என் அண்ணா பத்துவுக்குத்தான். எஸ். எஸ். எல். ஸி. பாஸ் பண்ணியிருக்கிறான்; டைப் அடிக்க, ஷார்ட்ஹாண்டு எழுதத் தெரியும். பாவம், எங்கெல்லாமோ வேலைக்காக அலைந்தான். ஒரு வேலையும் கிடைக்கவில்லை. நீங்கள்தான் கொஞ்சம் சிபாரிசு பண்ணி உங்க ஆபீஸிலே அவனுக்கொரு வேலை வாங்கிக் கொடுங்களேன்!" என்றாள். "ஓஹோ! இவன்தானா, பத்து" என்று மணி மனதிற்குள் நினைத்துக் கொண்டு பதில் பேசாமல் தலையை ஆட்டினான்.

மறுநாளே பத்துவைப் புறப்பட்டு வரச் சொல்லிக் கமலா கடிதம் எழுதினாள். அவனும் வந்து சேர்ந்தான்.



பத்திரிகைக்காரரின் மனைவி சொகுசாகப் 'பிரிண்டட்' புடவை கட்டிக் கொண்டிருக்கிறாள்

"நமஸ்காரம் மாப்பிள்ளை! சௌக்கியந்தானா?" என்று சிரிப்புத் தவழத் தன்னை வரவேற்ற பத்துவைக் கண்டு, ஆபீஸிலிருந்து வந்த மணி திடுக்கிட்டான். அவனை ஏறிட்டுப் பார்த்தான். புன்சிரிப்புத் தவழும் களங்கமில்லாத முகம், பிரகாசமான விழிகள், இத்தனையும் கொண்ட பத்துவைப் பார்த்ததும் "அடடா! இந்தப் புனித ஆத்மாவையா நாம் அநியாயமாக... இல்லாமல் வெறுத்து வந்தோம்?" என்று மணி நினைத்தான்.

பத்துவுக்கு மணியின் ஆபீஸிலேயே வேலை கிடைத்தது. பத்துவை விட, அவளுக்கு வேலை கிடைத்ததில் அதிகம் சந்தோஷப்பட்ட ஆத்மா கமலாதான். தினமும் காலையில் ஆறு மணிக்கு எழுந்து வீட்டு வேலைகளைக் கவனிப்பவள், பத்துவின் வரவிற்குப் பின் ஐந்து மணிக்கே எழுந்திருக்க ஆரம்பித்தாள்

நாளாவட்டத்தில் மணியின் சுபாவம் மாறத் தொடங்கியது. முகத்தில் ஒரு

கடுகடுப்பும் பேச்சில் ஒரு படபடப்பும் தென்பட்டன. கமலாவிடம் எதற்கெடுத்தாலும் எரிந்து விழுவான். மணியின் திடீர்க் கோபகுணம் கமலாவுக்கு அதிசயமாக இருந்தது. பத்து புத்திசாலி. மணியின் மாறுதலைக் கவனிக்க அவன் தவறவில்லை. மணியின் பைத்தியக்காரத்தனமான நினைப்புக்கு ஒரு முடிவு கட்ட நினைத்தான். அவன் நினைத்தது நடக்கவில்லை. அதற்குப் பதிலாக ஒரு விபரீதம் நிகழ்ந்துவிட்டது!

அன்று சனிக்கிழமை. வழக்கமாகக் கமலா கோவிலுக்குப் போய் வருவாள். ஒவ்வொரு சமயம் மணியும் போவான். மணி வராவிட்டால் பக்கத்து வீட்டு மாமியுடன் கமலா போவது வழக்கம். அன்று பக்கத்து வீட்டு மாமி சீக்கிரமாகக் கோவிலுக்குப் புறப்பட்டு விட்டாள். ஆகவே, கமலா பத்துவுடன் கோவிலுக்குப் புறப்பட்டாள்.

ஆபீஸிலிருந்து அலுத்துப் போய் இரவு ஏழு மணிக்கு வீடு திரும்பிய மணியிடம் அடுத்த வீட்டுப் பெண் சாவியைக் கொடுத்து "மாமா! கமலாவும் அவ அண்ணாவும் கோவிலுக்குப் போயிருக்கா," என்றாள். மணிக்குக் கோபமும் ஆத்திரமும் பொத்துக் கொண்டு கிளம்பியது.

கமலாவும் பத்துவும் கோவிலிலிருந்து திரும்பி வந்தார்கள். மணி அதிக நேரம் கூடக் காத்திருக்கவில்லை. ஆனால் கோபம் மட்டும் பிரமாதமாக வந்து விட்டது. அவன் வாய் திறக்காமல் சாப்பிட்டு விட்டு எழுந்து தன் அறைக்குப் போய் விட்டான்.

கமலா மணியினருகில் வந்து உட்கார்ந்தாள் "என்ன ..இன்றைக்கு..." என்று ஆரம்பித்தாள். மணி அவள் பக்கம் முகத்தைத் திருப்பினான். அதில் ஜொலித்த கோபத்தைக் கண்டு கமலா பயந்து விட்டாள். "கமலா, நீ பத்துவைக் கலியாணம் பண்ணிக் கொள்ள வேண்டியவள் தவறிப் போய் என் மனைவியாகி விட்டாய்..." என்றான் மணி. கமலா திடுக்கிட்டாள். மணியின் மனம் அன்றுதான் அவளுக்குத் தெரிய வந்தது.

அடுத்த அறையில் படுத்துக் கொண்டிருந்த பத்துவும் மணி சொன்னதைக் கேட்டான். அவன் கண்களில் நீர் மல்கியது. பொழுது விடிந்ததும் பத்து, தன் பெட்டி படுக்கைகளுடன் மணியிடம் வந்து சாந்தமான குரலில், "மாப்பிள்ளை! நீங்கள் என்னைத் தவறாக நினைத்து விட்டீர்கள். பரவாயில்லை. ஆனால் கமலாவைச் சந்தேகிக்காதீர்கள். அது ஒன்றுதான் உங்களிடம் நான் கேட்டுக் கொள்வது" என்றான். "போய் வருகிறேன் கமலா" என்று படபடப்புடன் சொல்லி விட்டு வெளியே கிளம்பினான். கமலா ஒன்றுமே பேசவில்லை. அவளால் பேச முடியவில்லை. அவள் கண்களிலிருந்து நீர் வடிந்தது.

எட்டு வருடங்கள் ஓடி மறைந்தன. கமலாவின் மனத்தில் பழைய புண் ஆறத் தொடங்கியது. மணியோ அதை அடியோடு மறந்து விட்டான். இந்த வேளையில்தான் பத்துவுக்கு உடம்பு சரியில்லை என்று கமலாவின் தந்தை நாராயணசாமி எழுதி இருந்தார். பத்துவின் உடம்பு பற்றி அப்பாவின் கடிதத்தைத் தினமும் கமலா எதிர்பார்த்தாள். அந்த கவலையில்தான் மணியிடமும், அவன் பையிலிருந்த கடிதத்தைக் காட்டிக் கேட்டாள்.

மறுநாள் இரவு. மணி தன் நண்பர்களுடன் விருந்துக்கு வந்து சேர்ந்தான். கமலா, மிக உயர்தரமாகச் சமைத்திருந்தாள். எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தனர். கமலா பரிமாறினாள். அவள் சோர்ந்து போயிருந்தாள். கலைந்த தலையும், வீங்கிப் போன விழிகளும், அழுக்குப் புடவையும், அவள் சரியாக இல்லை என்பதைக் காட்டின. மணிக்குக் கோபம் பொத்துக் கொண்டு கிளம்பியது. 'நாலு பேர் சாப்பிட வந்திருக்கும்போதா இந்த மூதேவி வேஷம்? வந்திருப்பவர்கள் என்ன நினைக்க மாட்டார்கள்?' என்று நினைத்தான். அவன் நண்பர்களில் ஒருவர், "என்ன மணி, உன் மனைவிக்கு உடம்பு சரியாயில்லையா? ஒரு மாதிரி இருக்கிறாளே? இந்த நிலையிலே எங்களை விருந்துக்கு அழைத்து அவளை ஏன் தொந்தரவு செய்திருப்?" என்று கேட்டார். மணி பதில் பேசவில்லை. தாங்க முடியாத அவமானம் ஏற்பட்டு விட்டது போன்ற உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது.

எல்லோரும் போய் விட்டனர். மணி கோபத்தினால் துடித்துக் கொண்டிருந்தான். "கமலா! இங்கே வா!" என்று இரைந்தான். கமலா மௌனமாக வந்து நின்றாள். "ஏண்டி, சமையல் பண்ண முடியாதுன்னு சொல்லித் தொலைக்கிறதுக்கென்ன? இப்படியா வந்தவாளை அவமானம் பண்ணணும்? மூஞ்சியைப் பாரு மூஞ்சியை!" என்று அதட்டினான். அவன் குரல் வீட்டையே அதிரச் செய்தது. கமலா பதில் பேசவில்லை. மௌனத்துடன் ஒரு தந்திக் கவரை அவனிடம் நீட்டினாள். மணி அதை வாங்கிப் படித்தான்.

"நேற்று இரவு பத்து இறந்து விட்டான். கமலாவுடன் உடனே வரவும்—நாராயணசாமி" என்று அதில் இருந்தது.

"ஆ!" என்று கமலாவைப் பார்த்துக் கலவரத்துடன் கூவினான் மணி. அந்த சமயம் வேரற்ற மரம்போல், கமலா கீழே சாய்ந்து கொண்டிருந்தாள்!



வீரம் காத்த சாரங்கம்

7: மதனன் மண்டபம்

“டாண்” “டாண்” என்று மணி ஓசை கேட்டது. அடுத்த சில நிமிஷங்களுக்கெல்லாம் யாரோ ஓடி வருவது போன்ற சத்தம் கேட்டது. அரண்மனையில் நாலா புறத்திலும் பணியாட்களின் ஆரவாரமும் சேடிகளின் தடபுடலும் பிரமாதப்பட்டன. அமுதவல்லி எதையோ நினைத்தபடி நின்று கொண்டிருந்தாள். அவள் முகத்தில் எத்தனையோ விதமான சிந்தனைக் கோடுகள் ஓடி மறைந்தன. பாட்டி பரபரப்புடன் வீரசேனனிடம் வந்தாள். அவன் கையைப் பிடித்துச் சற்று ஒதுப்புறமாக அழைத்துச் சென்றாள். வீரசேனன் ஏதோ ஒரு அதிசயம் நிகழப் போவதை ஆவலுடன் எதிர் பார்த்து நின்று கொண்டிருந்தான்.

இரண்டு வீரர்கள் அமுதவல்லியின் அறைக்குள் வந்து அரசகுமாரியை வணங்கி நின்றனர். “மதனன் மண்டபத்தில் சபை கூடிவிட்டது. மகாராஜா தங்களுக்குத் தெரிவிக்கச் சொன்னார்” என்றனர். “இதோ வருகிறேன்” என்று கூறிவிட்டு அமுதவல்லி அவசரமாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டாள். வீரர்கள் இருவரும் முன் செல்ல அமுதவல்லி அவர்களைத் தொடர்ந்து மதனன் மண்டபத்துக்குச் சென்றாள். போவதற்கு முன் வீரசேனன் நின்று கொண்டிருந்த திசையை நோக்கி ஒரு முறை பார்த்தாள். அடாடா! அந்தப் பார்வையில் இருந்த அர்த்த பாவங்களை எப்படி விவரிப்பது?

அமுதவல்லி சென்றவுடன் வீரசேனன் பாட்டியை நோக்கி ஏதோ கேட்க வாயைத் திறந்தான். பாட்டி அவன் வாயைப் பொத்தி அரண்மனையின் பின் வாசல் வழியாக வெளியே அழைத்து வந்தாள். “வீரசேனா! இப்பொழுது உனக்கு என்ன கேட்க வேண்டுமோ கேள்” என்றாள்.


“பாட்டி! அந்த மணிச் சத்தம் என்ன? அந்தச் சத்தம் கேட்டவுடன் அரண்மனையில் ஏன் அந்த பரபரப்பு? மதனன் மண்டபத்தில் சபை கூடுவானேன்? அரசகுமாரி அமுதவல்லி ஏன் அங்கு போகவேண்டும்?” என்று பல கேள்விகளைக் கேட்டான்.

மாலு

“வீரசேனா! அமுதேசபுரத்து அரசருக்கு அமுதவல்லி ஒருத்திதான் மகள் என்று உனக்குத் தெரியுமல்லவா? ஆகையால் அவளை மணந்து கொள்கிறவர்கள் தான் அமுதேசபுரத்தின் எதிர்கால அரசர். அப்படி இந்த நாட்டையே ஆளும் பொறுப்பு வாய்ந்த ஒருவன் சாதாரணமாக இருக்கலாமா?

வீராதி வீரனாகவும் அசகாய சூரனாகவும் எல்லாக் கலைகளிலும் வல்லவனாகவும் குற்றமற்ற குணம் உடையவனாகவும் நாட்டிலும் நாட்டு மக்களின் நலத்திலும் அக்கறை உள்ளவனாகவும் இருக்க வேண்டாமா? அதற்காக அரசர் அமுதவல்லியை மணந்து கொள்வதற்கு ஒரு நிபந்தனை விதித்திருக்கிறார். அதாவது அரண்மனையில் ஒரு மாசற்ற வீணை இருக்கிறது. அந்த வீணை யாரோ ஒரு மகானால் அரசருக்கு அளிக்கப்பட்டதாம். அந்த வீணையை மீட்ட வேண்டுமானால் மேலே நான் சொன்ன லட்சணங்கள் எல்லாம் பொருந்தி யிருக்க வேண்டும். அமுதவல்லிக்கு அத்தனை லட்சணங்களும் பொருந்தி யிருக்கிறது. அவள் அநாயசமாக அந்த வீணையை மீட்டி கீதம் இசைப்பாள். அந்த வீணையை எந்த அரச குமாரன் மீட்டுகிறானோ அவனுக்குத் தான் அமுதவல்லி மாலைசூட்டுவாள். அப்படி யாராவது வீணையை மீட்டத் தயார் என்று வந்தால் அப்பொழுது அரண்மனையில் இருக்கும் சுயம்வர மணி ஒலிக்கும். மதனன் மண்டபத்தில் ராஜசபை கூடும். அந்த மகா சபையில் நடு நாயகமாக மன்னர் வீற்றிருப்பார். அரசருக்கு இரு மருங்கிலும் மந்திரிகளும் தளபதிகளும் நகரத் தலைவர்களும் அமர்ந்திருப்பார்கள். வேறு ஒரு புறத்தில் புலவர்கள், சங்கீத வித்வான்கள், சிற்பிகள், சித்திரக்காரர்கள் முதலானோர் வீற்றிருப்பார்கள்.

“மண்டபத்தின் நடுவில் இரண்டு அழகிய மேடைகள் இருக்கும். அதில் ஒரு மேடையில் அமுதவல்லி அமர்ந்திருப்பாள். இன்னொரு மேடைமீது அவனுடன் போட்டியிட வந்திருக்கும் அரச குமாரன் அமர்ந்திருப்பான். முதலில் அமுதவல்லி வீணையை மீட்டி கீதம் இசைப்பாள். பிறகு அரச குமாரன் வீணையை மீட்டிப் பாட வேண்டும். அரசகுமாரன் வீணையில் சுருதி கூட்டிப் பாடிவிட்டால் உடனே அந்தப் புண்ணிய புருஷருக்கு அமுதவல்லி மாலை சூடுவாள். ஆனால் இது வரையில் நூற்றுக்கணக்கான ராஜ குமாரர்களும் மந்திரி குமாரர்களும் வந்து வீணையை மீட்ட முடியாமல் வெட்கித் தோற்றுத் தலை வணங்கினர்.



"அரசர் ஏன் இந்த விஷப் பரீட்சையை வைத்தாரோ தெரியவில்லை. அமுதவல்லி கலியாணமாகாத கன்னிப் பெண்ணாகவே இருந்து விடுவாளோ என்று எனக்குக் கவலையாக இருக்கிறது. அமுதவல்லியைத் தவிர வேறு யார் தொட்டாலும் அந்த வீணையின் தந்திகள் அறுந்து விடுகின்றன. இன்று யாரோ வீணை மீட்ட வந்திருக்கிறார். அதனால்தான் சுயம்வர மணி ஒலித்தது. அமுதவல்லி மதனன் மண்டபத்துக்குப் போனாள்" என்று மூச்சு விடாமல் சொன்னாள் பாட்டி.

"அந்த வீணையை யார் வேண்டுமானாலும் மீட்டலாமா? அதற்கு இன்னும் ஏதாவது விசேஷ நிபந்தனைகள் உண்டா?" என்று கேட்டான் வீரசேனன்.

"உண்டு. ஆயிரம் பொற் காசுகளைக் காணிக்கையாகக் கொடுத்து விட்டு யார் வேண்டுமானாலும் வீணையை மீட்டலாம். ஆனால் வீணைப் போட்டியில் தோற்று விட்டாலோ ஆயுள் பூராவும் அரசகுமாரி அமுதவல்லிக்குத் தொண்டு செய்யும் பணியாளாக இருக்க வேண்டும்" என்றாள் பாட்டி.



வீரசேனன் சிந்தனை சுழன்றது. வீணையை மீட்டி விட்டாலோ அமுதவல்லி நமக்கு அடிமை. அதை மீட்ட முடியாமல் தோற்று விட்டாலோ அமுதவல்லிக்கு நாம் அடிமை. ஜெயித்தாலும் லாபம்! தோற்றாலும் லாபம்தான்!! அமுதவல்லியிடம் அடிமையாக இருப்பதே ஒரு பாக்கியமல்லவா?

மறு நாள் வீரசேனன் அதி காலையிலேயே எழுந்தான். அவசரமாகப் பாட்டியிடம் சென்று முதல் நாள் போட்டியிலும் அரச குமாரி அமுதவல்லிதான் ஜெயித்தாள் என்ற சேதியைத் தெரிந்துகொண்டான். தன்னுடைய அறைக்கு வந்தான். தாயார் கொடுத்த பொற் காசுகளில் ஆயிரம் பொற் காசுகளை எண்ணி எடுத்துக் கொண்டான். தன்னை ஒரு அரச குமாரன் போல அலங்காரம் செய்து கொண்டான். "பாட்டி! நான் அரண்மனைக்குப் போகிறேன். அமுதவல்லியுடன் வீணை வாசித்து ஜெயிக்கப் போகிறேன்" என்றான். பாட்டி தடுத்தாள். வீரசேனன் கேட்கவில்லை.

நேரே அரண்மனைக்கு வந்தான். ஆயிரம் பொற் காசுகளை எண்ணிக் கொடுத்தான். அமுதவல்லியுடன் வீணை வாசிக்கத் தயார் என்றான்.

அடுத்த நிமிஷம் அரண்மனையில் சுயம்வர மணி ஒலிக்கத் தொடங்கி விட்டது. இரண்டு வீரர்கள் வீர

சேனனுக்கு ராஜோபசாரம் செய்து அழைத்துச் சென்றனர்.

சிறிது தூரம் சென்றதும் "அரச குமாரா! இந்தப் பக்கமாக வாருங்கள். அதோ தெரிகிறதே அதுதான் மதனன் மண்டபம்!" என்று சொன்னார்கள்.

வீரசேனன் அவர்கள் காட்டிய திக்கைப் பார்த்தான். "ஆஹா! என்ன அழகான மண்டபம்" என்று வாய்விட்டே கூறிவிட்டான். அந்த மண்டபத்தில் பாட்டி சொன்னது போலவே ராஜ சபை கூடியிருந்தது. அந்த அற்புதச் சபையைப் பார்த்துக் கொண்டே மண்டபத்தின் வாசலை அடைந்தான் வீரசேனன்.

மண்டபத்தின் வாசலில் கிளி வாகனத்தின் மீது மதனன் விக்ரகம் ஒன்று வைத்திருந்தது. அதைப் பார்த்தவுடன் வீரசேனன் ஸ்தம்பித்து நின்று விட்டான். அவனுடைய நரம்புகளில் ஏதோ ஒருவித இன்ப உணர்ச்சி பாய்ந்து ஓடத் தலைப்பட்டது. தூய வெண்ணிறமான பளிங்குக் கல்லினால் அந்தப் பதுமை செய்யப் பட்டிருந்தது. அப் பதுமைக்கு உண்மையில் உயிர் இல்லாவிடினும் அதற்குக் கலை உயிர் கொடுத்திருந்தது. வீரசேனன் அந்த அழகிய விக்கிரகத்தைக் கண் கொட்டாமல் பார்த்தான். பிறகு அவன் கண்களும் மனதும் அந்த மதனன் விக்கிரகத்தை விட்டு அகலவில்லை.

"மதனன் மண்டபம். என்ன அழகான பெயர். மிகப் பொருத்தமான பெயர்" என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டே மண்டபத்திற்குள் நுழைந்தான். அவன் நுழைந்ததும் அரசர் வீரசேனன் அருகில் சென்று அவன் கையைப் பற்றி அழைத்து வந்தார். அங்கு வீணையுடனிருந்த அமுதவல்லியைக் காண்பித்து "இவள்தான் என் மகள். இவள் வீணையை மீட்டியவுடன் நீங்கள் இந்த வீணையை மீட்ட வேண்டும். வீணையை மீட்டி விட்டால் நீர்தான் இந்த நாட்டின் மன்னர். அமுதவல்லி இந்த நாட்டுப் பட்டத்து ராணி" என்றார்.


வீரசேனன் பதில் ஒன்றும் சொல்லாமல் அமுதவல்லிக்கு எதிரில் இருந்த மேடைமீது அமர்ந்தான். அமுதவல்லி இப்பொழுது தான் வீரசேனனைப் பார்த்தாள். வீரசேனனும் அமுதவல்லியைப் பார்த்தான்.

கிளி வாகனத்தின்மீது அமர்ந்திருந்த மதனனே உயிர் பெற்று வந்து தன் எதிரே அமர்ந்திருக்கிறானோ என்று நினைத்தாள் அமுதவல்லி. தேவலோகத்திலிருந்து ரம்பை, ஊர்வசி, மேனகை அப்ஸரஸ்களில் ஒருத்தி இறங்கி வந்து வீணையும் கையுமாக உட்கார்ந்திருப்பது போலிருந்தது வீரசேனனுக்கு.

"அமுதவல்லி! வீணையை மீட்டலாமே!" என்றார் அரசர்.

அமுதவல்லியின் விரல்கள் வீணையின் தந்தியை மீட்டின. அவள் பாட ஆரம்பித்தாள். அமுதவல்லியின் இனிய குரல் ஒலியும் வீணைத் தந்தியின் நாதமும் சேர்ந்து இந்திரஜாலம் புரிந்தன. சபையோர் சித்திரப் பாவைப் போல் செயலற்று இருந்தனர். அமுதவல்லி அன்று வாசித்தது போல் இது வரை வாசித்ததே இல்லை என்று புலவர்கள் கூறிக் கொண்டனர். வீரசேனன் அந்த இன்ப கீதத்தில் சொக்கிச் சிலையாகி விட்டான். "அரச குமாரா! நீங்கள் வீணையை மீட்டலாம்" என்று அமுதவல்லி கூறியபோதுதான் அவனுக்குத் சுய நினைவு வந்தது.

வீரசேனன் வீணையை மௌனமாக வாங்கினான். அவன் வீணையை வாங்கி



சாமி :—கொஞ்ச தூரம் நடப்பதற்குள்ளே காலை வலிக்கிறது என்று உட்கார்ந்து விட்டாயே! உங்கள் பாட்டி என்பது வயதில் பத்து மைல் நடப்பாளாம்!

லீலா :—எனக்கு இப்பத்தானே ஐந்து வயதாகிறது? என்பது வயதில் நானும் பாட்டிக்கு மேலே இன்னும் பத்து மைல் நடப்பேன்!

அதை வைத்திருந்த பாவமே பிரமாதமாக இருந்தது. வீரசேனன் விரல்கள் வீணையின் தந்தியை மெதுவாகத் தொட்டன. அவன் முகத்தைச் சற்று நிமிர்த்தி தன்னுடைய அமிழ்தினுமினிய குரலைக் காட்டி, சுருதி கூட்ட ஆரம்பித்தான்.

சபையோர் ஒரு நிமிஷம் வீணையையும் அதன் தந்தியையும் பார்த்தனர். வீரசேனன் முகத்தைப் பார்த்தனர். அப்படியே வியப்புக் கடலில் மூழ்கிவிட்டனர். இதுவரை அமுதவல்லியைத் தவிர வேற்று மனிதர்கள் அந்த வீணைத் தந்தியைத் தொட்டு அது அறுபடாமல் இருந்தது இதுதான் முதல் தடவை. அதனால்தான் எல்லாரும் அப்படி வியக்க ஆரம்பித்தனர். அரசர் ஆச்சரியத்தாலும் சந்தோஷத்தாலும் அகல விழித்த கண்களை மூடாமலிருந்தார். அமுதவல்லி அகமும் முகமும் மலர அந்த அற்புதத்தைப் பார்த்தாள். அவள் தன் வாழ்நாளிலேயே அடையாத இன்பத்தை அனுபவித்துக் கொண்டிருந்தாள்.



யானைக்குட்டி:— போட்டோவில் நன்றாக விழவேண்டும் என்றால், நான் சொன்னபடி நகர்ந்து நின்றால்தான் நன்றாக விழலாம்...... இன்னும் ஒரு அடி பின்னால் நகர்ந்து நில்லுங்கோ, மாமா!

வீரசேனன் குரலைச் சற்று உயர்த்திப் பாட ஆரம்பித்தான். அவன் குரல் தேனாக இருந்தது. அவனுடைய விரல்கள் வீணையின் தந்திகளை மீட்டவில்லை. அதன்மேல் நர்த்தனம் புரிந்தன. அப்பொழுது வீணையிலிருந்து அமுதவாரி பெருகிற்று. வீரசேனன் குரல் இனிமையும் வீணையின் நாதமும் சேர்ந்து கேட்பவர்களை இன்ப உலகத்துக்கு அழைத்துச் சென்று விட்டது.

அமுதவல்லி மந்திரத்தால் கட்டுண்டவள் போல அந்தத் தெய்வீக சங்கீதத்தை அனுபவித்துக் கொண்டிருந்தாள். அவளால் தனியே உட்கார்ந்திருக்க முடியவில்லை. தன்னை ஏதோ ஒரு சக்தி இழுப்பது போலிருந்தது. எழுந்து வீரசேனன் அருகில் சென்றாள். அடுத்த கணம் அந்த இன்ப கீதத்தில் மயங்கி அவன் மடிமீது சாய்ந்தாள்.

அமுதவல்லியின் சிந்தனை சிறகடித்துக் கொண்டு கிளம்பியது. வீரசேனன் ஒரு வெண் புரவி மீது வந்தான். அவள் வீரசேனன் கையைப் பிடித்துக் கொண்டு ககன மார்க்கத்தில் நடந்தாள். பாடுகின்ற குயில்கள் மலர் புனைந்த மரங்கள் அடர்ந்த இடத்துக்கு வந்தனர். வீரசேனன் அவளை அன்போடு அணைத்து ரோஜா மலர் போன்ற அவள் கன்னத்தை வருடினான். வான வெளியில் வந்த விமானத்தில் இருவரும் ஏறி அமர்ந்தனர். விமானம் சந்திர மண்டலத்தை நோக்கிப் பறந்தது. காதலர்கள் இருவரும் வானவெளியில் மையலூட்டும் சந்திரனை நோக்கி மேலே மேலே போய்க் கொண்டிருந்தனர்.

வீரசேனன் பாட்டை நிறுத்தினான். அவன் விரல்கள் வீணையில் நடனமாடியதை நிறுத்தின. சபையோர் இன்ப உலகத்திலிருந்து பூவுலகத்துக்கு வந்தனர்.

அமுதவல்லி சுய உணர்வு பெற்றாள். அங்கிருந்த சுயம்வர மாலையை எடுத்தாள். வீரசேனன் கழுத்தில் சூட்டி வணங்கினாள். அரசர் எழுந்து வந்து வீரசேனனைத் தழுவிக் கொண்டார்.

அரசருக்கு ஆனந்தம் தாங்க முடியவில்லை. அன்றே அமுதவல்லிக்குத் திருமணம் நடத்தவேண்டும் என்றார். வீரசேனனுக்கு உடனே யுவராஜா பட்டம் சூட்டவேண்டும் என்றார்.

வீரசேனன் அதை மறுத்தான். கல்யாணமும் யுவராஜா பட்டாபிஷேகமும் இப்பொழுது வேண்டாம் என்று சொன்னான். இதைக் கேட்டவுடன் அரசர் திடுக்கிட்டார். அமுதவல்லி இடி ஓசை கேட்ட நாக சர்ப்பம் போல நடுநடுங்கினாள். (தொடரும்)

நல்ல அநுபவம்

சங்கர சுப்பு

‘பம்பாய் விக்டோரியா டெர்மினஸ்’ ஸ்டேஷனுக்குள் நானும் என் மனைவி ஹேமாவும் நுழையும்போது மணி ஐந்தடித்து முப்பத்திரண்டு நிமிஷங்கள் ஆகியிருந்தன. புனாவுக்குச் செல்லும் மெயில் கிளம்ப இன்னும் நாலு நிமிஷங்களே இருந்தன.

கூட்டம் சற்றுக் குறைவாக இருந்த ஒரு மூன்றாம் வகுப்புப் பெட்டியில் அவசர அவசரமாக ஏறினோம். உட்காருவதற்குப் போதிய இடமிருந்தது. ‘போர்ட்டரி’டமிருந்து பெட்டி படுக்கையை இறக்கி வைத்து அவனுக்குச் சில்லறையைக் கொடுத்தனுப்பிவிட்டு நான் உட்காரும் போது வண்டி கிளம்பிவிட்டது.

“இன்னும் கொஞ்சம் சீக்கிரம் வந்திருக்கலாம். ஜன்னல் ஓரமாக இடம் கிடைத்திருக்கும்” என்றாள் ஹேமா.

ஹேமா ஆறுமாத கர்ப்பிணி. வசதியாக இடம் கிடைக்காததினால் சற்று ஆயாசப் பட்டாள். இதைக் கவனித்துத்தானோ என்னவோ ஜன்னலோரமாய் உட்கார்ந்திருந்த ஒரு மகாராஷ்டிரன் எழுந்து, “நீங்கள் இங்கே உட்காருங்கள்” என்றான்.

ஹேமா, “பரவாயில்லை, நீங்கள் உட்காருங்கள்” என்று மராத்தியில் சொல்லிக்கொண்டே ஜன்னலோரத்திலிருந்த இடத்தில் உட்கார்ந்தாள்.

மகாராஷ்டிரன் பக்கத்தில் அமர்ந்திருந்த கிழவன் ‘புருஷனும் மனைவியும் சேர்ந்தே உட்காரட்டும்’ என்று நினைத்தான் போலும். “நீங்களும் இங்கே வந்து உட்காருங்கள்” என்றான் என்னைப் பார்த்து. நான் ஹேமாவின் பக்கத்தில் போய் உட்கார்ந்தேன்.

தாதரில் வண்டி நின்றது. உடனே ஒரு ஜனப்பிரளயம் வண்டியில் ஏறியது.

வண்டி கிளம்ப மணி யடித்து விட்டது. கதவுப் பக்கமாக வெகு வேகமாக ஏறி வந்த ஒரு பையன் என் முன் நின்று, “ஸார்! சற்று நகருகிறீர்களா! என் பெட்டி படுக்கையைக் கூலியிடமிருந்து வாங்கிக் கொள்கிறேன்” என்றான், மராத்தியில்.

ஜன்னலருகில் உட்கார்ந்து வெளியில் நீட்டியிருந்த தலையை உள்ளுக்கிழுத்தேன்.

போர்ட்டரொருவன் ஜன்னல் வழியாக ஒரு பெட்டி, படுக்கை, ‘கிரிக்கட் பாட்,’ பெரிய நிலைக் கண்ணாடி இவைகளை உள்ளே திணித்தான்.

அந்த இளைஞனைப் பார்த்தேன். முகத்தில் கல்ல களை. சுமார் பதினாறு வயதிருக்கும். அவன் மராத்தி பேசியதினால் அவனை மகாராஷ்டிரன் என்று நிதானம் செய்தேன்.

“நிற்கிறாயே அப்பா, வேறு பெட்டியில் பார்க்கிறதுதானே இடமில்லையா!” என்று மராத்தியில் வினவினேன்.

“வேறு பெட்டியிலா! இந்தப் பெட்டியில் இந்த மட்டும் நிற்க இடம் கிடைத்ததே என்று நான் சந்தோஷப்படுகிறேன். பாதகமில்லை. நான் சிறுவன்தானே!” என்றான்.

ஹேமாவுக்கு அவனைப் பிடித்து விட்டது போலும். “பாவம்! கொஞ்சம் நீங்கள்தான் இந்தப் பக்கம் தள்ளி உட்காருங்களேன். அவன் ஒண்டிக் கொள்ளட்டும்” என்றாள்.

சற்று நெருக்கி உட்கார்ந்தேன். அந்த இளைஞனும் தன் வந்தனத்தைத் தெரிவித்துக் கொண்டே நான் ஒதுக்கிவிட்ட ஒரு சிறிய இடத்தில் உட்கார்ந்தான்.

தாதர்ஸ்டேஷனை விட்டுக் கிளம்பி வண்டி ஓடிக்கொண்டிருந்தது.

காற்று சுகமாக வந்து கொண்டிருந்தது. ஹேமாவின் தலை மயிரின் பிரி காற்றில் விளையாடின. அவளே அழகு. அது இன்னும் அவளுக்கு அழகைக் கூட்டியது.

என்ன நினைத்தானோ தெரியவில்லை. திடீரென்று அந்தச் சிறுவன் தன் கோட்டுப் பைகளுக்குள் கை விட்டுத் துழாவ ஆரம்பித்தான்.

ஒவ்வொரு பையாக ஆராய ஆரம்பித்தான். ஒவ்வொரு பையினின்றும் கையை எடுக்கும்போது சிறுவனின் முகத்தில் அதிருப்தி காணப்பட்டது. உட்கார்ந்திருந்தவன் எழுந்து தன் ‘பைஜாமா’வின் ‘பாக்கெட்’களுக்குள் எதையோ தேடினான்.

பிறகு கீழே குனிந்து, பூணூலில் முடிந்திருந்த சாவியினால் பெட்டியின் பூட்டைத் திறந்து பெட்டியில் எதையோ தேடினான். எனக்குச் சந்தேகம் எழுந்தது.

நான் கேட்டேன்: “என்னப்பா தேடுகிறாய்! ‘டிக்கெட்’ பத்திரமாயிருக்கிறதல்லவா!”

“என் மணிபர்ஸைக் காணோம். அதில்தான் டிக்கெட்டை வைத்திருந்தேன்” என்று கூறிக்கொண்டே பெட்டியைக் குடைய ஆரம்பித்தான் அந்த வாலிபன்.

“எங்கேயும் போயிருக்காது. எல்லா ஜேபிகளையும் மெதுவாகப் பார். அவசரப்படாமல் தேடு. கிடைக்கும்” என்றேன்.

“எனக்குத் தெரியும், இந்தக் கும்பலில் இதுமாதிரி நேருமென்று. அதற்காகத்தான் பிளாட்பாரத்தில் நுழைந்தவுடனே போர்ட்டருக்குக் கொடுக்க நாலணாவை மாத்திரம் எடுத்துத் தனியாக மேல் பையில் போட்டுக் கொண்டேன். ‘பர்ஸ்’க்குள் டிக்கட்டை வைத்து அதைக் கோட்டின் உள் பைக்குள் வைத்துக் கொண்டேன். அது இப்போது காணோம். எல்லாப் பணமும் அதில்தான் வைத்திருந்தேன்” என்று பதில் சொன்னான்.

அவனுடைய குரல் கம்மிவிட்டது. அதில் துக்கம் இழைந்து விட்டிருந்தது.

ஹேமாவின் முகபாவத்தைப் பார்த்தேன். ராவமாக இருந்தது.

"நீ கொஞ்சம் ஜாக்கிரதையாக இருந்திருக்கலாம் அப்பா!" என்றேன் நான் அந்தச் சிறுவனை நோக்கி.

நான் சொன்னது அவனுக்கு எப்படிப் பட்டதோ! அவன் சொன்னான்:

"பர்ஸ் தொலைந்து போன பிற்பாடுதான் நான் அஜாக்கிரதையாக இருந்து விட்டேன் என்று எனக்கே தெரிந்தது. இப்போது என்ன செய்கிறது! டிக்கட் இன்ஸ்பெக்டர் வந்து கேட்டால் நான் என்ன சொல்லுவேன்!"

"நீ எங்கு போகிறாய்! எவ்விடத்திற்கு டிக்கட் வாங்கியிருந்தாய்!"

"கோலாப்பூருக்குப் போகிறேன். பம்பாயில் படித்துக் கொண்டிருந்தேன். இந்த வருஷம் 'எஸ் எஸ். எல். ஸி.' பரீக்ஷை எழுதி யிருக்கிறேன். இப்போது விடுமுறை. என் சொந்த ஊருக்குப் போகிறேன். என் தாய் தந்தையர் கோலாப்பூரில் தானிருக்கிறார்கள்" என்று பதில் சொன்னான் சிறுவன்.

பெட்டியிலிருந்த அனைவரும் அனுதாபப் பட்டனர்.

கல்யாண் ஸ்டேஷனில் வண்டி நின்றுவிட்டுக் கிளம்பும்போது ஓடும் வண்டியில் டிக்கெட் இன்ஸ்பெக்டர் ஒருவர் ஏறினார்.

அந்த வெள்ளை உடை அணிந்திருந்த பரிசோதகரைப் பார்த்ததும் சிறுவனின் முகம் வெளிறி விட்டது.

"அதோ வந்து விட்டார். நான் என்ன செய்கிறது என்று தெரியவில்லை" என்று சற்று பயந்த வண்ணம் சொன்னான்.

ஹேமாவைப் பார்த்தேன். அவள் முகத்தில்பரிதாபம் படர்ந்திருந்தது.

டிக்கெட் பரிசோதகர் ஒவ்வொருவரிடமிருந்தும் டிக்கெட்டை வாங்கிச் சோதித்து விட்டு என்னிடம் வந்தார். நான் எங்கள் இரண்டு டிக்கெட்டுகளைக் காண்பித்தேன்.

"தம்பி! உன் டிக்கெட்!" என்றார். அந்தச் சிறுவன் பேச முயன்றான். துக்கம் தொண்டையை அடைத்து வார்த்தைகளை வெளிவிடவில்லை.

நான் சமயத்தைத் தெரிந்து கொண்டு பரிசோதகரிடம் சமாசாரத்தைச் சொன்னேன்.

"நான் என்ன ஸார், செய்கிறது! இவன் டிக்கெட்டைத் தொலைத்து விட்டதற்காக ரயில்வேயை நஷ்டப்படச் சொல்கிறீர்களா!" என்றார்.

"ரயில்வேக்கு நஷ்டமேது ஐயா! ஏற்கனவேதான் 'அவன் பணம் கொடுத்து டிக்கெட் வாங்கி விட்டானே!"

"இப்போது இவன் தொலைத்து விட்ட டிக்கெட்டுக்குப் பணம் கட்டவில்லை யென்றால் அது நஷ்டந்தானே, ஸார்! உம். தம்பி, நேரம் ஆகிறது. பணத்தை எடு!"

"ஐயா, என்னிடம் காலணாக் கூட இல்லை. என் பர்ஸை பறி போய்விட்டது!"

"அது சரிதானப்பா, எனக்கும் மனம் சங்கடமாகத்தானிருக்கிறது. நான் என்ன பண்ணட்டும் சொல். யாரிடமாவது வாங்கிக் கொடு இல்லையெனில் அடுத்த ஸ்டேஷனில் இறக்கி விட்டுவிடுவேன்" என்று கூறிய வண்ணம் பையிலிருந்த ரசீதுப் புத்தகத்தையும் காதில் செருகியிருந்த பென்சிலையும் கையில் எடுத்துக் கொண்டு ரசீது எழுதத் தயாரானார்.

பையனுக்குக் கண்ணில் ஜலம் கண்டது. என்னைப் பரிதாபமாகப் பார்த்தான்.

நான் என்ன பண்ண முடியும்! எனக்கு ஏதும் தோன்றவில்லை.

"என்ன தம்பி, நிற்கிறே! உனக்காக பம்பாயிலிருந்து கூட சார்ஜ் பண்ணவில்லை. 'கல்யாண்' ஸ்டேஷனிலிருந்தே ரசீது போட்டுத் தருகிறேன். இங்கிருந்து புனாவுக்கு ரசீது தருகிறேன். பிறகு புனாவிலிருந்து கோலாப்பூருக்குத் தனியே டிக்கெட் வாங்கிக் கொள். இல்லை யென்றால் இங்கிருந்து இரட்டிப்புச் சார்ஜ் செலுத்த வேண்டும்" என்று கண்டிப்பாகச் சொன்னான் இன்ஸ்பெக்டர்.

"என்னிடம் பணமே இல்லையே!"

"சரி, பின்னே கீழே இறங்கத்தான் வேண்டும். இதோ 'கர்ஜத்' ஸ்டேஷன் வந்து விட்டது" என்று அவன் கையைப் பிடித்தான்.

ஹேமாவுக்குப் பொறுக்கவில்லை. "மிஸ்டர், ஒரு நிமிஷம்" என்றாள்.

நான் விழித்தேன்.

"என்ன, உங்க மணிபர்ஸைக் கொடுங்கோ, கொஞ்சம்!" என்றாள் ஹேமா.





எனக்குத் தூக்கி வாரிப்போட்டது.

"அந்தச் சிறுவனுக்குப் புனாவுக்கு ரசீது எழுதிக் கொடுங்கள்" என்றாள் பரிசோதகரை நோக்கி. பிறகு பர்ஸைத் திறந்து ஐந்து ரூபாய் நோட்டை யெடுத்துப் பரிசோதகரிடம் கொடுத்தாள்.

"தம்பி, இதை ஜாக்கிரதையாக டைரிக்குள் வைத்துக் கொள்." என்று சிறுவனிடம் ரசீதைக் கொடுத்தாள்.

"ஹேமா......நீ......எதற்கு......!"

"நான் எதற்கா! பாவம்! அவனை வழியில் இறக்கி விட்டுவிட்டால் அவன் என்ன பண்ணுவான்! போனால் போகிறது. நமக்கு இந்த மாதிரி ஒருவனுக்கு உதவி செய்யச் சந்தர்ப்பம் கிடைத்தத" என்றாள்.

"நீ பேசுவது எனக்குப் புரியவில்லை, ஹேமா! முன் பின் தெரியாதவனுக்கு வெகு அநாயாசமாக மூணேமுக்கால் ரூபாயைத் தூக்கிக் கொடுத்துவிட்டாயே! அவன் திருப்பித் தருவானா! அவனுக்கு நம் விலாஸத்தைக் கொடு. ஊர் சேர்ந்ததும் மணியார்டர் செய்யச் சொல்லு."

"இந்தாருங்கள், பேசாமலிருக்க மாட்டீர்கள்!" என்று என்னை அதட்டிவிட்டு ஹேமா, "தம்பி! புனாவுக்குத்தானே ரசீது கொடுத்திருக்கிறார்! புனாவிலிருந்து உன் ஊருக்குப் போகப் பணத்துக்கு என்ன செய்வாய்!" என்று சிறுவனைக் கேட்டாள்.

"அதுதானம்மா எனக்கும் தெரியவில்லை. உங்களுக்கு நான் மிகவும் சிரமம் கொடுத்துவிட்டேன். என்னை மன்னியுங்கள்" என்றான்.

"புனாவிலிருந்து கோலாப்பூருக்கு என்ன சார்ஜ்!" என்று கேட்டாள் ஹேமா.

"ஆறு ரூபாய்!"

"சரி, நீ ஒன்று செய். இந்தா. இந்தப் பத்து ரூபாய் நோட்டை வைத்துக் கொள். புனாவிலிருந்து உன் ஊருக்கு டிக்கெட் வாங்கிக் கொண்டு பாக்கியை வழிச் செலவுக்கு வைத்துக் கொள்" என்று தாராளமாய் என் பர்ஸைத் திறந்து பத்து ரூபாயை எடுத்துக் கொடுத்தாள்.

அந்த இளைஞன் இதை எதிர்பார்த்தானோ என்னவோ! நான் எதிர்பார்க்கவில்லை.

★

சிறுவன் அழுது விட்டான், நன்றியால்.

"உங்களுக்கு ரொம்பப் புண்ணியம் உண்டம்மா. இந்தமாதிரி தயை உள்ளவரை நான் இதுவரையில் பார்த்ததில்லை. பணம் எல்லோரிடமும் தான் இருக்கிறது. ஆனால் சிலருக்குத்தான் பிறருக்குக் கொடுத்து உதவ மனமிருக்கிறது" என்று சொன்னான்.

நான் குறுக்கிட்டேன்.

"ஹேமா, பரோபகார சிந்தனை வேண்டியதுதான். ஆனா அது இவ்வளவு 'லிபரல்'ஆனதாக இருக்க வேண்டாம். நமக்குக் கட்டாது. நீ போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலின் மகளாய்ப் பிறந்து உனக்கு இவ்வளவு இளகிய இருதயம் இருப்பது ஆச்சரியம்தான்! ஆனாலும் உன் இந்த தயாள குணம்—நீ, உன் தகப்பனாரின் குமாரியாய் இருந்தபோதுதான் இருந்திருக்க வேண்டும். அது நியாயம். அப்போது கட்டுபடியாயிருக்கும். நீ இப்போது என் மனைவி. என் வருமானத்திற்கும் உன் தயாள குணத்திற்கும் சரிப்பட்டு வராது."

"நீங்கள் பேசாமலிருங்களேன். பத்து ரூபாய் போய்விட்டதா!"

"ஹேமா! அவனுக்கு நம் விலாசத்தை மாத்திரம் கொடுத்து விட்டாய். ஆனால் அவன் விலாசத்தை வாங்கிக் கொள்ள வில்லையே! அவன் ஊர் சென்றதும் திருப்பி யனுப்பா விட்டால்!"

"ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்! அனுப்பா விட்டால்தான் என்ன! குடியா முழுகிவிடும்!"

நான் பதில் பேசவில்லை. ஜன்னலுக்கு வெளியில் பார்வையைத் திருப்பினேன்.

நாங்கள் என்ன பேசினாலும் அந்த மஹாராஷ்டிரச் சிறுவனுக்குப் புரிய நியாயமில்லை. என்றாலும் அவன் பேச்சு நாங்கள் பேசினதைப் புரிந்து கொண்டதாகத்தான் இருந்தது. அவன் ஹேமாவிடம் சொன்னான்:

"உங்கள் விலாசத்தை மாத்திரம் கொடுத்தீர்களே! இந்தாருங்கள் என் விலாசம்" என்று தன் கையிலிருந்த டைரியிலிருந்து ஒரு தாளைக் கிழித்து அதில் அவன் ஊர் விலாசத்தை எழுதிக் கொடுத்தான்.

அதை நான் வாங்கிப் பத்திரமாக வைத்துக் கொண்டேன்.

✱

வண்டி ஓடிக் கொண்டிருந்தது. கைக் கடிகாரத்தைப் பார்த்தேன். மணி எட்டாகி யிருந்தது. இன்னும் நாற்பது நிமிஷத்தில் புனா வந்துவிடும்.

ஹேமா பேச்சைத் துவக்கினாள்.

"ஏன் 'உர்' என்று உட்கார்ந்திருக்கிறீர்கள்! ஒருவனுக்கு உபகாரம் செய்து விட்டால் பொறுக்க வில்லையா! எங்கே ஓடிப் போய் விட்டது பணம்! ஊர் சென்றதும் திருப்பி யனுப்பி விடுவான்."

"திருப்பியா! எனக்குத் தோன்றவில்லை."

"ஏன் இப்படி அவநம்பிக்கை! பையனுக்குத் தெரியா விட்டாலும் நீங்கள் சொல்லிக் கொடுத்து விடுவீர்கள் போலிருக்கிறதே!"

"எனக்குத் தெரியும் பணத்தின் அருமை, நாளெல்லாம் ஓடாய் உழைத்துவிட்டு வாங்கும் ஊதியத்தின் அருமை! நீ அந்த நிமிஷத்திலே அலக்காக தூக்கிக் கொடுத்து விட்டாய்!"

"இந்தாருங்கள். வேண்டுமானால் உங்கள் பணத்தை என் தகப்பனாருக்கு எழுதி ஊரிலிருந்து வருவித்துத் தருகிறேன்."

"இதுதான் பதிலா!"

"பின்னே என்ன! என்னமோ பதினாயிரத்தைப் பறி கொடுத்து விட்ட மாதிரிதான் பேசுகிறீர்கள்! நீங்கள் இம்மாதிரி ஒரு சமயம் அகப்பட்டுக் கொண்டு விழிக்க வேண்டும். ஒருவரும் உங்களுக்கு உதவ முன் வராமலிருக்க வேண்டும். அப்போது தெரியும்."

"அட, அதற்குச் சொல்லவில்லை, நான்! இந்த சின்ன வயசிலேயா இவ்வளவு அஜாக்கிரதை! பின்னாலே இதுகளெல்லாம் எப்படி இந்த லோகத்துலே வாழப் போறது! என்னத்தைக் கொழித்துக் கொட்டப் போறதுகள்!"

"உங்களுக்குப் பிறக்கும் போதே 'ஜாக்கிரதை' தெரிந்து விட்டதாக்கும்! நீங்க எவ்வளவு தடவை ஜாக்கிரதைக் குறைவாக நடந்து கொண்டிருக்கிறீர்கள் என்று சொல்லட்டுமா! அது பெரிய அத்தியாயம்! ஏதோ சின்னப் பையன்! தெரியாத்தனமாகப் மணி பர்ஸைத் தொலைத்து விட்டான்......இனிமேல் தெரிந்து கொள்வான். தப்புக்கள் செய்யச் செய்யத் தான் அவைகள் குறையும்."

"உன்னோடு பேசி மாளாது!"

★

புனா நெருங்கியது.

வண்டி நின்றதும் நாங்கள் கீழே இறங்கினோம். அந்தச் சிறுவனும் தன் சாமான்களுடன் வண்டியிலிருந்து இறங்கினான்.

ஹேமா சொன்னாள்: "தம்பி, ஜாக்கிரதையாகப் போ. பணத்தை ஜாக்கிரதையாக வைத்துக் கொள். டிக்கெட் வாங்கி, அதையும் பத்திரமாக வைத்துக் கொள்."

"சரி, அம்மா. நான் ஊர் போய்ச் சேர்ந்ததும் உங்கள் பணத்தை அனுப்பிவிடுகிறேன்."

"பணத்துக்கு இப்போ அவசரமில்லை. உனக்குச் சௌகரியப்பட்ட போது அனுப்பு, போதும்" என்றாள்.

பிறகு எங்களிருவருக்கும் கைகூப்பி அன்போடு வணக்கம் செய்துவிட்டு அந்தப் பையன் விடை பெற்றுக்கொண்டான்.

வண்டி ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு என் தங்கை வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்தோம்.

நான் வழியில் முனகினேன்: "அந்தப் பையனுக்குச் சௌகரியப்படவே படாது!"

"சௌகரியப் படவே வேண்டாம். அதையே நினைத்து நீங்கள் உருகவும் வேண்டாம். பத்து ரூபாய் போய்விட்டது என்றால் உங்கள் ஜென்மம் முழுவதும் விடமாட்டீர்கள் போலிருக்கிறதே! அதைப் பற்றிப் பேசவேண்டியதெல்லாம் இப்பவே பேசித் தீர்த்து விடுங்கள்! அங்கே வந்து உங்கள் தங்கையிடமும் அவள் கணவரிடமும் இதைப் பற்றி ஒன்றும் பேச வேண்டாம்!" என்று எச்சரித்தாள்.



ஹோட்டல் முதலாளி:—நான், மற்ற ஹோட்டல் முதலாளிகள் மாதிரி அல்ல. உண்மையைச் சொல்லி விடுகிறேன். இங்கு தயாரிப்பவை எல்லாம் எண்ணெயில் தான் தயாரிக்கிறோம். நெய் அல்ல.

சாப்பிட்டவர்:—அது சரி, காப்பியை மட்டும் தயவு செய்து பாலில் தயாரித்து விடுங்களேன்! ஒரே எண்ணெயாக மிதக்கிறது.

புனாவில் நாங்கள் நான்கு நாட்கள் தங்கினோம். அங்கு என் தங்கைக்குச் சீமந்தக் கலியாணம் நடந்தது. அதற்காகவேதான் நானும் ஹேமாவும் புனாவுக்குச் சென்றோம்.

பம்பாய்க்கு வந்து சேர்ந்ததும் நான் தினமும் மணியார்டரின் வரவை எதிர்பார்த்தேன். அவனுக்குத் திருப்பி அனுப்பும் உத்தேசம் இருந்திருந்தாலல்லவா!

அந்தப் பையன் கொடுத்த விலாசத்திற்குக் கடிதம் எழுதுவதாகக் கூறினேன். அவள் 'கூடாது' என்று சொல்லிவிட்டாள்.

பணம் திரும்பி வரும் என்று மாதம் ஒன்று சென்றது. கொஞ்சநஞ்சம் இருந்த நம்பிக்கையும் இப்போது அகன்றது.

★

ஒருநாள் வழக்கமாக ஆபீஸுக்குச் செல்ல எலக்ட்ரிக் ரயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்தேன். என் ஜாகைக்கும், ஆபீஸுக்கும் பத்து மைல் தூரம். நான் 'மதுங்கா'விலிருந்தேன். நான்கு ஸ்டேஷன்கள் தாண்டினதும் ஒரு டிக்கெட் பரிசோதகர் நான் ஏறியிருந்த பெட்டியில் ஏறினார்.

எல்லாரும் தங்கள் ஸீஸன் டிக்கெட்டுகளைக் காண்பித்தார்கள். நானும் என் 'பாஸை' எடுத்துக் காண்பிக்கக் கோட்டுப் பையில் கையை விட்டேன்.

திடுக்கிட்டேன்.

மற்ற பைகளிலும் தேடினேன். என் பர்ஸையும் 'பாஸை'யும் காணோம்.

எனக்கு மானமே போய் விட்டதுபோல் தோன்றியது.

டிக்கெட் பரிசோதகரிடம் "பாஸ் கொண்டு வர மறந்து விட்டேன். நாளைக்குக் காண்பித்து விடுகிறேன்" என்றேன்.

"அதற்கென்ன செய்வது? மறதிக்கு இன்று அபராதம் கட்டி விடுங்கள். பிறகு மறக்க மாட்டீர்கள்" என்று அழுத்தமாகச் சொன்னார்.

என் பர்ஸைக்கூடக் கொண்டு வரவில்லை. என்னை இந்த பூமி வெடித்து விழுங்கக் கூடாதா! ஆபீஸ் போகும் நபர்கள் முன்னிலையில் இப்படி மானத்தை வாங்குகிறானே என்று எனக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது.

திடீரென்று, "என்ன, சங்கரசுப்பு! ஏன் பாஸ் கொண்டுவர மறந்து போயிட்டேளா! அதனாலென்ன! இந்தாருங்கோ இதைக் கட்டும்" என்று என் நண்பர் கிருஷ்ணமூர்த்தி இரண்டு ரூபாய் நோட்டைக் கொடுத்தார்.

"அப்பா!" என்று பெருமூச்செறிந்து விட்டுப் பரிசோதகரிடம் பணத்தைக் கட்டினேன்.

'சர்ச்கேட்' ஸ்டேஷன் வந்ததும் நண்பருக்கு வந்தனம் சொல்லிவிட்டு நான் என் ஆபீஸுக்கு விரைந்தேன்.

★

அன்று ஆபீஸில் வேலையே ஓடவில்லை. புனா சென்றபோது ரயிலில் நடந்த சம்பவம் தான் என் மனசில் நர்த்தனமாடியது.

ஹேமாவைக் கோபித்துக் கொண்டோமே, இன்றைக்குக் கிருஷ்ணமூர்த்தி அங்கே இல்லாது போயிருந்தால் என் கதி என்னவாயிருக்கும்! மானம் போய்விட்டிருக்குமே!

மாலை வீடு திரும்பும்போது சுரத்து இல்லை. ஹேமாவிடம் நடந்த சம்பவத்தைச் சொல்லுவதா வேண்டாமா என்று தவித்தேன்.

'சொன்னால், பரிகசிப்பாள்' என்று எண்ணமிட்டவனாய் வீட்டிற்குள் நுழைந்தேன். நுழைந்தவுடனே, "என்ன, இன்றைக்கு எனக்கு ஒரு பார்ஸல் வந்தது. அன்றைக்கு அந்தப் பையனுக்குப் பத்து ரூபாய் கொடுத்து விட்டதற்குக் குதியாய்க் குதித்தீர்களே! இதோ பாருங்கள்" என்று பார்ஸலிலிருந்து ஒரு பட்டுச் சொக்காயைக் காண்பித்தாள்.

அந்தச் சொக்காய் இருபத்தைந்து ரூபாய்க்குக் குறையாமலிருக்கும். 'பளபள' வென்று கண்ணையே பறிக்கும்படி 'ஜிகினா' வேலை பிரமாதமாக இருந்தது.

அந்தப் பையன் எழுதியிருந்த லிகிதத்தை ஹேமாவே படித்தாள். அதில் அவள் பெருமை கொண்டாள்!

அவன் ஆங்கிலத்தில் எழுதியிருந்தான். அதன் சாராம்சம் இதோ:—

கோலாப்பூர்

அன்புள்ள அக்காவுக்கு,

நான் உங்களுக்கு உடனே கடிதம் எழுதாததற்கு மன்னிக்கவும். என் நமஸ்காரத்தைத் தங்கள் கணவருக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

நான், தாங்கள் எனக்கு கொடுத்துதவிய பணத்தை திருப்பியனுப்பினால் நீங்கள் ஏற்க மாட்டீர்களென எனக்குப் பட்டது.

ஆகையினால் தங்களுக்குப் பிறக்கப் போகும் 'பாப்பா'வுக்கு—என் மருமானுக்கு—இத்துடன் ஒரு நல்ல பட்டுச் சட்டையைப் பரிசாக அனுப்பியிருக்கிறேன். இதை ஏற்றுக் கொள்ளவும்.

நான் பம்பாய்க்கு வந்தால் தங்களை அவசியம் சந்திக்கிறேன்.

தங்கள் பிரியமுள்ள
ஸதானந்த் ரீகே.

"நீ அன்றைக்குச் செய்தது ரொம்ப சரி. நமக்கு அந்தப் பையன் திருப்பி யனுப்பாமல் கூட இருந்திருக்கலாம்!" என்று கூறிவிட்டு ஹேமாவுக்கு அன்று ரயிலில் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தைச் சொன்னேன்.

ஏதோ எதிர்பார்த்தவள் போல் அவள் விழுந்து விழுந்து சிரித்தாள்.

"நன்றாய் வேணும். நான் தான் அதை ஏற்பாடு பண்ணினேன். எல்லாம் பட்டால்தானே தெரியும்!" என்று சொல்லி விட்டு அலமாரியைத் திறந்து என் பாஸையும் பர்ஸையும் எடுத்துக் காண்பித்தாள்.

எனக்குக் கோபம் வந்து விட்டது. இவளிடம் ஏமாந்து விட்டோமே என்ற ரோசம் வேறு!

ஆனாலும் நான் அவளிடம் என் கோபத்தைக் காட்டிக் கொள்ள முடியவில்லை.

படித்துப் பாருங்கள்!

இரு நண்பர்கள்

நந்தகிசோரும் வித்தியாசங்கரும் நண்பர்கள். வேற்றுமை ஒரு சிறிதும் இன்றிப் பழகிய அந்த இரு நண்பர்களுக்குள் ஒரே ஒரு விஷயத்தில் வேற்றுமை இருந்தது. நந்தகிசோர் பணக்காரன். வித்தியாசங்கர் பரம ஏழை. நந்தகிசோர் வித்தியா சங்கரை வறுமையில் வாழும்படி விடவில்லை. அவனுடைய பள்ளிப் படிப்புக்கு அள்ளி வழங்கினான்; அவன் குடும்பத்துக்கு வேண்டிய உதவி செய்தான். வித்தியாசங்கரும் அதற்குப் பிரதியாக அன்பையும் நன்றியையும் நண்பனுக்கு வழங்கினான்.

அவர்கள் நட்பில் புரையோட ஆரம்பித்தது கலாசாலையில் ரூபராணி வந்து சேர்ந்த பிறகு தான். அவள் வித்தியாசங்கருக்குத் தன் இருதயத்தில் இடம் கொடுத்தாள். நந்தகிசோர் ரூபராணியின் இருதயத்தில் இடம் பிடிக்க முயன்றான். அது முடியவில்லை.

நந்தகிசோர் அவளை நேரில் கண்டு காதல் பிச்சை கேட்டான். கலாசாலையில் முதலாவதாகப் பரீட்சையில் தேறினால் அவனையே மணந்து கொள்ளுவதாக ரூபராணி தெரிவித்தாள்.

வித்தியாசங்கர் தன்னுடைய நண்பனுக்காகத் தான் பரீட்சையில் தோல்வியடைந்தான்; தனது வெற்றியை அவனுடையதாக்கினான். அது மட்டுமா! செயற்கரும் செயல் ஒன்றையும் செய்தான். ஆம், ரூபராணியின் மேல் கொண்ட காதலையும் நண்பனுக்காகத் தியாகம் செய்து ஊரை விட்டே போய் விட்டான். பழைய நண்பர்கள் மீண்டும் சந்திக்கின்றனர். மீண்டும் காதற்புயல் வீசுகிறது.

உள்ளம் உருகும் உணர்ச்சி மிகுந்த இந்தக் கதையை ஸ்ரீ சுதர்சன் ஹிந்தியில் எழுதினார். மூலக் கதையின் சுவை சிறிதும் குன்றாமல் ஸ்ரீ ரா. வீழிநாதன் அழகாகத் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார்.

"கல்கி" ஆசிரியர் இந் நூலுக்கு அளித்திருக்கும் முன்னுரையில், "ஸம்ஸ்கிருத பாஷையை நன்கு உச்சரிக்கவும் வேதத்தை முறைப்படி ஓதவும் அறிந்தவர்கள் தென்னாட்டில்தான் இன்று இருக்கிறார்கள்...... ஆறாயிரம் மைலுக்கு அப்பாலிருந்து வந்த ஆங்கில பாஷையில் நம்மவர்கள் பலர் அசாதாரணத் தேர்ச்சி அடைந்தார்கள்......இப்போது ஹிந்தி பாஷை தமிழர்களுக்குக் கிடைத்திருக்கிறது; அல்லது ஹிந்தி பாஷைக்குத் தமிழர்கள் கிடைத்திருக்கிறார்கள் என்றும் சொல்லலாம். இதன்மூலம் தமிழர்களும் நலமடைவார்கள்; ஹிந்தியும் லாபம் அடையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை" என்று குறிப்பிட்டிருக்கிறார். புத்தகம் அதை நன்கு வலியுறுத்துகிறது.

ஆசிரியர்: சுதர்சன். மொழி பெயர்ப்பு: ரா. வீழிநாதன். விலை ரூ. 2.

பூவின் சிரிப்பு

இந்நூலில் சுவை மிகுந்த பதினேழு கட்டுரைகள் அடங்கியிருக்கின்றன. அவற்றில் தமிழ் வளம் சிறந்து நிற்கிறது; பொருள் வளம் மிகுந்து பொலிகின்றது; கருத்து வளம் கவினுற விளங்குகிறது.

"காலம்", "கார்த்திகைப் பிறை" என்னும் இரண்டு கட்டுரைகளும் நம் சிந்தனையில் லயித்து விடுகின்றன. மற்றக் கட்டுரைகளும் ஒன்றை யொன்று போட்டி யிடுகின்றன.

ஆசிரியர்: பெ. தூரன்; விலை ரூ. 1—9—0.

விடுதலை

ஸ்ரீ சந்திர சேகர சர்மா தமது பெண் நிர்மலாவுக்கு நிறையக் கல்வி யறிவைப் புகட்டினார். அவளும் ஆராய்ச்சித் துறையில் சிறந்து விளங்கினாள். ஆனால் உலகியல் அறிவைப் பொறுத்த வரையில் அவள் ஒரு பேதை. அதனால் பல சங்கடங்களை அவள் அநுபவிக்க நேர்ந்தது. அத்தனை சங்கடங்களையும் வாசகர்களும் அநுபவிக்க வேண்டியிருக்கிறது. அவ்வளவு உணர்ச்சியுடன் இருக்கிறது நூல்.

ஆசிரியர்: த.நா. குமாரசாமி; விலை ரூ. 1-8-0.

ஒரே ஒரு வார்த்தை

குடும்பத்தில், தம்பதிகளுள் அற்ப விஷயத்தின் காரணமாக ஏற்படும் மனக் கலக்கத்தை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட இந்த



வேறு ஹோட்டல் முதலாளி:— ஜோதி பவனில் காப்பி சாப்பிடப் போகிறேன். நீங்களும் காப்பி சாப்பிட வருகிறீர்களா?

கஸ்தூரி பவன் முதலாளி:— நான் இன்றைக்கு உங்களுடன் வருவதற்கில்லை. தயவு செய்து நீங்கள் திரும்பி வரும்போது எனக்கு ஒரு கப் காப்பி இந்த 'பிளாஸ்'கில் வாங்கிக் கொண்டு வந்து விடுங்களேன்!

"ஒரே ஒரு வார்த்தை" என்ற நாவலைப் பற்றி இரண்டே இரண்டு வார்த்தை சொல்ல விரும்பு கிறோம்; நன்றாயிருக்கிறது!

எழுதியவர்: அநுத்தமா; விலை ரூ. 5—8—0.

கதையும் கற்பனையும்

இந்த நெடுங் கதையில் உண்மையாக நடக்கும் வரலாறாக ஒன்று வருகிறது. அதனிடையே கதாசிரியனுடைய கற்பனை ஒன்று வருகிறது. கதையும் கற்பனையும் சேர்ந்து பல முடிச்சுகளை இடை யிடையே ஏற்படுத்தி விடுகின்றன. கதையைப் படிக்கப் படிக்க முடிச்சுக்கள் தாமே அவிழ்ந்து விடுகின்றன.

ஆசிரியர்: "மாயாவி"; விலை ரூ. 1—8—0.

இந்நூல்களை வெளியிட்டோர்: அமுத நிலையம் லிட்., தேனாம்பேட்டை, சென்னை-18

ஜெய் பாரத்

தமிழ் நாட்டின் புகழ் பெற்ற தியாக வீரர்களில் ஒருவரான ராணிப்பேட்டை ஸ்ரீ கே. ஆர். கல்யாணராமன் இந்த வாரப் பத்திரிகையின் மூலம் தமிழர்களுக்குத் தொண்டு செய்ய முன் வந்திருக்கிறார். காந்தீயத்தையும் தேசாபிமானத்தையும் அடிப்படையாகக் கொண்ட சீரிய கருத்துக்கள் இப் பத்திரிகையில் எளிய தமிழ் நடையில் வெளியாகி வருகின்றன. பொதுவாகத் தமிழ் மக்களும் சிறப்பாக வடார்க்காடு ஜில்லா வாசிகளும் இப் பத்திரிகையை வரவேற்று ஆதரிப்பார்கள் என்று நம்புகிறோம்.

காரியாலயம்: "ஆஸாத்", ராணிப்பேட்டை.

கர வருஷத்துத் திருமூர்த்தி பஞ்சாங்கம்

நாள், நட்சத்திரம் பார்ப்பவர்களுக்கு இன்றியமையாத எல்லா விவரங்களும் இப் பஞ்சாங்கத்தில் அடங்கி யிருக்கின்றன.

கணித்தவர்:- கா. க. ஸ்ரீநிவாசன்; பிரசுரம்: கருணை பப்ளிஷிங் ஹவுஸ், சென்னை—1. விலை: 0—10—0

இந்திய நாட்டு விலங்குகள்

அழகிய வர்ணச் சித்திரத்தைக் கண்டால் குழந்தைகள் குதூகலப்படுவது போல் வயது வந்தவர்கள் மகிழ மாட்டார்கள். சித்திரங்களின் மூலம் சிறுவர்களுக்குப் பல விஷயங்களை வெகு எளிதில் போதித்து விடலாம். இந்தியாவிலுள்ள விலங்குகளைப் பற்றி இந்தச் சிறு புஸ்தகத்தில் வர்ண சித்திரங்களுடன் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. இதன் மூல ஆசிரியர், ஆர்ன்ரிட் ஜான்ஸ்டன். அவர் எழுதியதை நல்ல தமிழில் மொழி பெயர்த்தவர் 'குழந்தைக் குலத்துக்கு இது போன்ற பல தொண்டுகள்' புரிந்திருக்கும் ஸ்ரீ பெ. தூ. அப்புஸ்வாமி அவர்கள். தமிழ் நாட்டுப் பெற்றோர்கள் யாவரும் தங்கள் குழந்தைகளுக்கு இந்தப் புஸ்தகத்தை வாங்கிப் பரிசளிக்கலாம். விலை அணா 12 தான்.

பிரசுரம்: ஆக்ஸ்போர்ட் யூனிவர்ஸிடி அச்சகத்தார், சென்னை.



நிழலும் வெய்யிலும்

ரா. வீ.

''அடியே! நான் கொஞ்சம் வெளியில் போய்விட்டு வருகிறேன்!''

முற்றத்தில் கைக்காரியமாக இருந்த என் மனைவி கமலாவைப் பார்த்து நான் சொன்னேன். நான் சொன்னபொழுது மணி மூன்று தான் இருக்கும். அன்று சனிக்கிழமை. நண்பர்கள் கடற்கரைக்குப் போவதாகத் திட்டமிட்டிருந்தனர். எனக்கும் கடற்கரைக்குப் போய் வரவேண்டும் என்று ஆசையாக இருந்தது. ஆகவே, டிரஸ் செய்துகொண்டு புறப்படத் தயாரானேன். ஆனால் கடற்கரைக்குப் போகிறேன் என்று நாம் சொல்லி, அவள் ஒன்றுக்கொன்று ஏதாவது சொல்ல ஆரம்பித்து விட்டால் என்ன செய்வது என்று பயந்துதான் மேலே சொன்ன விதம் கூடமாகச் சொல்லி வைத்தேன்.

''இதைக் கேளுங்கோ! இன்றைக்குப் போகவேண்டாம். குழந்தைகள் நாலு நாளாகப் பிராணனை வாங்கிக் கொண்டிருக்கின்றன. இன்று வெங்காய வடை தட்டுவதென்று பருப்பு எல்லாம் கூட நனைத்து விட்டேன். ஆகவே நான் சொல்வதைக் கேளுங்கள். இன்றைக்கு எங்கும் வெளியில் போகவேண்டாம். நாளைக்கு உங்கள் இஷ்டப்படி எங்கு வேண்டுமானாலும் போங்கள்!'' என்று கமலா தலையை நிமிர்த்தி என்னைப் பார்த்துச் சிரித்தவாறே சொன்னாள்.

'அட கடவுளே! நாம் நினைத்ததுபோலவே இவள் நமக்கு விலங்கு பூட்ட ஆரம்பித்து விட்டாளே! என்ன செய்வது!' என்று யோசித்தேன். ஆனால் அடுத்த கணமே குரலில் குழைவை வரவழைத்துக் கொண்டு, ''இல்லை, இல்லை! இதோ போனதும் வந்ததுமாகத் திரும்பி வந்து விடுகிறேன்!'' என்றேன்.

''நீங்கள் தானே! போய் விட்டால் அப்புறம் வந்தாற் போலத்தான்! தினம் வருகிறீர்களே, தெரியாதா! திங்கட்கிழமை யாரோ வந்தான், எங்கேயோ கூட்டம் கூடிற்று. செவ்வாய்க்கிழமை ஏதோ ரொம்ப அவசர ஜோலி என்றீர்கள். புதன்கிழமை ஆபீஸர்களைப் பார்க்கவேண்டியிருந்தது என்றீர்கள். வியாழக்கிழமை வேறு ஏதோ சொன்னீர்கள். நேற்று வெள்ளிக்கிழமை பிச்சைக்காரனைப் போல வந்து கெஞ்சிக் கொண்டு, ''நாளையிலிருந்து இல்லையென்றால் என் என்று கேள்!'' என்று சொல்லி விட்டுப் போய் விட்டீர்கள். இதுமாதிரியே தினம் உங்களுக்கு ஏதாவது சாக்குப் போக்குக் கிடைத்து விடுகிறது. அப்படி யிருக்கும் பொழுது நீங்கள் போனால் போனதுதான். அப்புறம் உங்களுக்கு வீட்டு நினைவு எதற்கு வரப் போகிறது! இப்படி யிருக்கும்பொழுது தான் என்னை நம்பு என்று சொல்லுகிறீர்கள். உங்களை எப்படி நம்புவது என்று கேட்கிறேன்!'' என்று முகத்தைச் சிணுக்கிக் கொண்டு கேட்டாள் கமலா.

''இன்றைக்கு ஒருநாள் என்னைப் பரீக்ஷை செய்து பார்த்து விடேன். சரியாக ஆறு மணிக்குள்ளே வரவில்லை என்றால் கேள்!''

''ஆறு மணிக்குக் கட்டாயம் வந்து விடுவீர்களோ, இல்லையோ?''

''கட்டாயம்!''

''நான் அதற்குள் குழந்தைகளைக் குளிப்பாட்டி, தலைவாரிப் பின்னி டிரஸ் செய்து வைத்துக்கொண்டு தயாரா யிருப்பேன். ஆறு மணிக்கு வந்து விடணும். ஆமாம், இப்பொழுதே படித்துப் படித்துச் சொல்லி விட்டேன்.''

''இத்தனை தடவை சொல்லுவானேன்! நான் ஆறுமணிக்குள் வரவில்லை என்றால் கேள்!''

''உங்கள் குணம் தெரிந்திருப்பதனால்தான் சொல்லவேண்டி யிருக்கிறது. பருப்பு நனைத்து வைத்து விட்டேன்.—உங்களுக்கு வெளியிலே போய் விட்டால் குழந்தை, குட்டி, குடும்பம் இதெல்லாம் எங்கே நினைவிருக்கிறது!'' என்றாள் கமலா அழுத்தந் திருத்தமாக.

''அப்பா! என் வார்த்தையில் உனக்கு நம்பிக்கையே வரமாட்டேன் என்கிறதே! எத்தனை தடவை சொல்லணும்! வந்து விடுகிறேன். வந்து விடுகிறேன். போதுமா! உனக்கு என்மேல் ஏன்தான் இத்தனை அவநம்பிக்கையோ!''

நானும் ஒவ்வொரு வார்த்தையையும் அழுத்தந் திருத்தமாகச் சொல்லிவிட்டு நிலைப்படியைத் தாண்டி இரண்டு அடி எடுத்து வைத்தேன். அதற்குள்ளாகக் கமலா, ''இந்தாருங் கோன்னு!'' என்றாள். நான் திரும்பிப் பார்த்தேன். ''கட்டாயம் வந்து விடுங்கள். வராவிட்டால் எனக்குக் கடுங்கோபம் வரும்! இப்பொழுதேசொல்லி விட்டேன்'' என்றாள்.

மெதுவாக அவளிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு நான் வெளியே வந்தேன். நான் தெருத் திருப்பத்தைத் தாண்டும் வரை கமலா என்னையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். என் உள்ளத்துக் கள்ளத்தை என் நடையிலிருந்தே



கண்டு பிடித்து விட வேண்டும் என்பது அவள் எண்ணம் போலும்! நான் பின் திரும்பிப் பாராமலேயே சென்று விட்டேன். கடைத் தெருவுக்குப் போய் ஒரு ஹோட்டலில் நுழைந்து ஒரு 'கப்' காப்பி சாப்பிட்டேன். பிறகு அங்கிருந்து நண்பர்களுடன் கடற்கரையை நோக்கி நடந்தேன்.

* * *



நாங்கள் கடற்கரைக்குச் சென்று மணற் பரப்பில் உட்கார்ந்தோம். கடற்கரையின் சீர்க் காற்று, நெளிந்து நெளிந்து எழும்பிவிழும் அலைகள், மாலை நேரத்திலே வானம் காட்டிய வர்ண ஜால வித்தைகள், கடற் பறவைகளின் கலரவ கானம் எல்லாம் மனத்தை ஆனந்த சாகரத்திலே ஆழ்த்தின. வயிறு வளர்ப்பதற்காகப் பகல் முழுவதும் பறந்து திரிந்து களைத்துப் போய்ப் பறவைகளும் கூட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தன.

இந்த ஆண் பறவைகள் காலா காலத்துக்கு கூட்டை அடையாவிட்டால் பெண் பறவைகள் தங்கள் அலகினால் கொத்திக் கோபத்தைக் காட்டக் கூடும் அல்லவா! சூரியன் கூடச் சரியாக ஆறு மணிக்குப் போகிறானே! ஒருவேளை அவனுக்கும் பெண்டு — பிள்ளைகள் இருக்கலாமோ!— இவ்வாறு என் மனம் சிந்தனையில் ஆழ்ந்தது.

என் நண்பர்களில் சிலர் கல்யாணம் ஆகிக் குடியும் குடித்தனமுமாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் வீட்டுக்குப் போக வேண்டும் என்ற பேச்சையே எடுப்பதில்லையே, ஏன்!—ஒருவன் ராக ஆலாபனம் செய்தால், இன்னொருவன் வானத்தின் எழிலைப் பார்ப்பதில் மூழ்குகிறான். மற்றொருவன் ஆகாயத்தில் இருக்கும் தாரகைகளைக் கண்டு மகிழ்கிறான். இம்மாதிரியாக ஒவ்வொருவரும் வீடு வாசல் எல்லாவற்றையும் மறந்து 'ஜாலி'யாக இருக்கிறார்களே! நமக்கு மட்டும் ஏன் 'வீடு, வீடு!' என்று வீட்டு நினைவாகவே இருக்கிறது! எனக்குக் கமலாவே அல்லவா உலகமாகி விட்டாள்!

இப்படி நான் சிந்தனை செய்து கொண்டிருக்கும்பொழுது கவியுள்ளம் படைத்த என் நண்பன் ஒருவன், "ஏன் அப்பா! இன்று இரவுப் பொழுதை இங்கேயே கழித்து விட்டால் என்ன!" என்றான். அதைக் கேட்டதும் என் இருதயம் சிறிது நேரம் ஸ்தம்பித்து விட்டது. எல்லோரும் சம்மதம் தெரிவித்து விட்டனர்.

பக்கத்திலேயே தயிர், காய் கறி, அரிசி, விறகு எல்லாம் கிடைத்துவிடும். இங்கேயே சமையல் செய்து சாப்பிட்டு விட்டு நிலவு இரவை ஆனந்தமாகக் கழிக்கலாம் என்று அவர் அவர்களுக்குத் தோன்றியதைச் சொன்னார்கள். ஆதரிப்பவர்களுக்கும் ஆமோதிப்பவர்களுக்கும் குறைவில்லை. உடனே என் இருதய இயந்திரம் வேலை செய்ய ஆரம்பித்து விட்டது.

கடையில் சத்திய நாராயணன் என் பக்கம் திரும்பி, "என்ன அப்பா யோசித்துக் கொண்டிருக்கிறாய்!" என்றான். நான் ஒன்றும் பதில் சொல்லவில்லை. 'கவிதை கட்டுவதில் ஈடுபட்டிருக்கிறாற் போலிருக்கிறது!' என்றான் ஒருவன். 'இயற்கையின் எழிலில் மூழ்கியிருக்கலாம் அல்லவா!' என்றான் இன்னொருவன். அவர்களுக்கு என் நிலைமையைப் பற்றி என்ன தெரியும்!

"கவிதையும் இல்லை, கட்டுரையும் இல்லை. என்னைப் பார்க்க ஆறு மணி வண்டிக்கு ஒருவன் வரப் போகிறான். அவனிடம் சில முக்கியமான சமாசாரங்கள் பேச வேண்டியிருக்கிறது. அதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்!" என்றேன்.

அவர்கள் அதற்குவேண்டிய இடையூறுகள் செய்ய ஆரம்பித்தனர். தனக்குத் தோன்றியதை எல்லாம் சொல்லி என்னை நிறுத்த முயற்சித்தனர். "முக்கியமான காரியமாக இருந்தால் அவன் தானே தங்குகிறான். ஒரு இரவிலே என்ன குடிமுழுகிவிடப் போகிறது!" என்றான் ஒருவன்.

"அதற்கில்லை. நான் சில புத்தகங்கள் எழுதியிருக்கிறேன். அதற்குக் கொஞ்சம் பணம் பாக்கி வரவேண்டும். நான் பார்க்காவிட்டால் எனக்குத்தான் நஷ்டம்!" என்று எத்தனையோ பொய்யையும் மெய்யையும் கலந்து அவர்களை அங்கிருந்து கிளப்பியது பெரும்பாடாகப் போய் விட்டது.

'எழுத்தாளன் என்ன பேனாவில் மையை ஊற்றியா எழுதுகிறான்! பொய்யை ஊற்றி அல்லவா எழுதுகிறான்!' என்று என் நண்பர் ஒருவர் அடிக்கடி கேலியாகச் சொல்லுவது உண்டு. அவர் சொல்லுவது போல, என்னுடைய இந்தப் பாழாய்ப் போன வாழ்க்கை இருக்கிறதே, இது பொய் பேசிப் பேசித்தான் கழிந்திருக்கிறது. அங்கே அகத்துக்காரியிடம் சொன்னது அவ்வளவும் பொய். இங்கே நண்பர்களிடம் சொன்னது இவ்வளவும் பொய். என்ன வறட்டு வாழ்க்கை வேண்டிக் கிடக்கிறது! உண்மையைக் கேட்டால் இதுவரை நான் இரண்டு பிராமிஸரி நோட்டைத் தவிர வேறு ஒன்றும் எழுதியதே இல்லை.

அவர்களை எப்படியோ அங்கிருந்து கிளப்பினேன் என்பது என்னவோ வாஸ்தவம்தான்!

ஆனால் அவர்களுடைய நடையிலே என்னால் வேகத்தைப் புகுத்த முடியவில்லையே! அதற்கு நான் என்ன செய்ய! அவர்கள் வம்புப் பேச்சுப் பேசிக் கொண்டு, ஆனந்தமாகக் காற்று வாங்கிக்கொண்டு, புதுமாட்டுப் பெண்ணைப்போல மெதுவாக நடைபோட்டுக் கொண்டு முன்னேறிக் கொண்டிருந்தார்கள். ஆனால் என் மனமோ முன்னால் தத்திக் குதித்துக்கொண்டு போக விரும்பியது. கமலா என் வரவை வழிமேல் விழி வைத்துப் பார்த்துக் கடைசியில் களைத்துக்கூடப் போயிருப்பாள். அலுத்துச் சலித்துக் கொண்டிருப்பாள். 'எத்தனை தடவை சீக்கிரம் வந்து விடுங்கள் என்று படித்துப் படித்துச் சொன்னேன். பொய்யே பேசி அறியாதவர் போலப் பேசினாரே! இப்பொழுது இப்படிக் கழுக்காய் கொடுத்து விட்டுப் போய்விட்டாரே!' என்று மனத்துள்ளே என்னைத் திட்டிக் கொண்டிருப்பாள். சீக்கிரம் போகாவிட்டாலும் போய்த் தொலைகிறது. தினம் போகிற நேரத்துக்குக் கூடப் போகவில்லை என்றால் என்ன என்ன விதமான புயலை எழுப்புவாளோ!—இம்மாதிரியெல்லாம் என் உள்ளத்திலே கிளர்ச்சி வலுத்துக் கொண்டிருந்தது.

என் நண்பர்கள் தங்கள் சிந்தனையில் மூழ்கியிருந்தார்கள். நான் என் கவலையில் ஆழ்ந்திருந்தேன். அவர்களும், 'இந்த மாதிரிப் போக்கிடம் கெட்ட பயலைப் பின்னோடு அழைத்துக் கொண்டு வந்திருக்கக்கூடாது' என்று என்னைத் திட்டிக் கொண்டு தான் வந்திருப்பார்கள். இம்மாதிரியெல்லாம் மனத்திலே பிறர் மனத்தைச் செலுத்தி அவர்கள் யோசிப்பது போல் எல்லாம் கற்பனை யோசனை செய்து கொண்டு பத்து மணி சுமாருக்கு வீட்டை அடைந்தேன்.

*　　　　*　　　　*

கதவு திறந்தது. நான் உள்ளே காலடி எடுத்து வைத்தேன். இம்மாதிரி சமயங்களில் நான்கைந்து திட்டுக்கள் திட்டி விடுவதோ அல்லது கேட்டுக் கொள்ளுவதோ எங்கள் இருவருக்குமே வழக்கம். கதவு திறந்ததும், முகத்தைத் தோள்பட்டையில் இடித்துக் கொண்டு, சிரித்தவாறோ கோபித்தவாறோ, "ஏன் இவ்வளவு நேரம் ஆக்கினீர்கள்! தினம் இப்படிச் செய்வது தானே உங்கள் வழக்கம்! உங்களுக்காக இவ்வளவு நாழிகை யார் காத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பது!" என்பது போன்ற கேள்விகள் எழுவது தினசரி வழக்கமாகவே ஆகிவிட்டது. தினத்தைவிட நேரம் கழித்து வந்தும் இன்று நினம் கேட்கும் கேள்விகள் என் காதுகளில் விழாமற்போகவே, எனக்கு என்னவோ போலிருந்தது; என்றும் இல்லாத புதுமையாக இருந்தது.

அவ்வளவு நேரம் கழித்து வந்ததற்கு அன்று எனக்கு இரட்டிப்புச் சாற்றுப்படி கிடைத்திருக்க வேண்டும். ஆனால் அன்று கமலா கதவைத் திறந்துவிட்டு என்னிடம் ஏதும் பேசாமல் அறைக்குள் சென்று படுத்து விட்டாள். எனக்கு அது வியப்பை அளித்தது.

குழந்தைகள் எல்லாம் தூங்கிக் கொண்டிருந்தன. சின்னப் பெண் மட்டும் தான் விழித்துக் கொண்டிருந்தாள். கமலா பொதுவாகச் சாதம் பரிமாறி விட்டு என் எதிரிலேயே உட்காருவது வழக்கம். ஆனால் அன்று அவள் என் பக்கமே தலை நிமிர்ந்து பார்க்கவில்லை.

சமையலறையிலே வெள்ளித் தட்டும் பலகையும் தயாராக எடுத்து போடப் பட்டிருந்தன. உணவுப் பொருள்களும், தானே எடுத்துப் போட்டுக் கொள்ளுவதற்குச் சௌகரியமாக வைக்கப்பட்டிருந்தன. பக்கத்திலேயே விளக்கின்மேல் தானாகவே உடைந்து உருகுவதற்கேற்றவாறு நெய் கன ஜாக்கிரதையாக வைக்கப் பட்டிருந்தது. தூக்கம் காரணமாகவோ கோபம் காரணமாகவோ அவள் வரவில்லை என்று நான் எண்ணினேன். பெண் மட்டும் என்னிடத்தில் வருவதற்காக முரண்டு செய்து கொண்டிருந்தாள். ஆனால் அவளையும் பிடித்து இழுத்துப் பக்கத்தில் போட்டுக் கொண்டு தூங்கப் பண்ணுவதற்குப் பிரயாசைப் பட்டுக் கொண்டிருந்தாள் அவள். பெண் என்னிடத்தில் வருவதற்காக அடம் பிடித்து அழுவதும், 'பகல் முழுதும் தூங்கவில்லை. இன்னும் விழித்துக் கொண்டிருக்கிறாய், தூங்கு!' என்று கமலா திட்டுவதும் தெளிவாக என் காதில் விழுந்து கொண்டிருந்தது.



நான், "அவனையாவது விடேன். குடிக்கத் தண்ணீர்—கிண்ணீர் கொடுப்பான்!" என்றேன்.

நான் சொன்னதைக் கேட்டதும் மறுபடியும் குழந்தை எழுந்திருந்தாள். ஆனால் கமலா அவளை அதட்டிப் படுக்க வைத்து விட்டாள்.

இவையெல்லாம் இன்று எனக்குப் புதுமையாகவே இருந்தது. முன்பெல்லாம் கமலாவுக்குக் கோபம் வந்தால், அவள் எழுந்து வர மாட்டாள். குழந்தையைக் கொண்டு எல்லாம் செய்யச் சொல்லுவாள். ஆனால் இன்று என்றும் இல்லாத திருநாளாகப் புதுமுறை ஒன்றையல்லவா கையாண்டிருந்தாள்! எப்படியோ 'காமாசோமா'வென்று சாப்பாட்டை முடித்துக் கொண்டு எழுந்தேன். வெற்றிலைத் தட்டுடன் சமாதானம் நிலவிவிடும் என்ற நம்பிக்கையுடன் அறையை அடைந்தேன்.

ஆனால் நான் எதிர்பார்த்தபடி சமாதானம் நிலவவில்லை. வெற்றிலைப் பாக்கைப் பற்றிய பேச்சு எழுந்தால்தானே! பெண், "அப்பா!" என்று கூப்பிட்டு ஏதோ சொல்ல வாய் திறந்தாள். ஆனால் கமலா சட்டென்று அவள் வாயைப் பொத்தி விட்டாள்.

"அட! அவள் வாயை ஏன் பொத்துகிறாய்! சொல்லுவதைச் சொல்லட்டுமே!" என்றேன்.

"என்னத்தைச் சொல்லுவது!" என்று கன கடுமையாகக் கேட்டாள் கமலா.

"நீதான் பேசவில்லை. அவளை எதற்காகத் தடுக்க வேண்டும்!" என்றேன்.

அதற்கு ஒன்றும் பதில் வரவில்லை.

"வெற்றிலை..." என்று இழுத்தேன் நான்.

"இல்லை!" என்று ஒரே சொல்லில் பதில் வந்து விட்டது.

"சரி. சற்று எழுந்திரு!" என்று பாக்கைப் பற்களால் கடித்துக் கொண்டே சொன்னேன். கமலா இலவம் பஞ்சு அடைத்த வெல்வெட்டுத் தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு படுத்து விட்டாள். நான் நாற்காலியில் உட்கார்ந்தேன். அவள் தலை தூக்கினால்தானே! பெண் மட்டும் தாயாரின் கை சற்றுத் தளர்ந்தால் உடனே "அப்பா!" என்று கூப்பிடுவாள். அடுத்த கணம் கமலா அவள் வாயைப் பொத்தி விடுவாள்.

கமலா சுபாவமாகவே தைரியசாலி. சங்கோசம் நாணம் முதலியவை அவளிடம் தலை காட்டியதே இல்லை. எங்களுக்குச் சாந்திக் கல்யாணம் ஆகி எட்டு வருஷங்கள் ஆகிவிட்டன. ஆனால் இதுவரை அவள் தலையணையில் தலையைப் புதைத்துக் கொண்டு வெட்கப்பட்டு நான் பார்த்ததேயில்லை. அதுமட்டுமா! ஏதோ சொல்ல வாய் எடுக்கும் பெண்ணின் வாயை, ஒன்றும் சொல்ல வொட்டாமல் அவள் பொத்தியது எனக்கு இன்னும் ஆச்சரியத்தையும் திகைப்பையும் விளைவித்தது.

உடம்பைப் பார்த்தால் உடம்புக்கும் ஒன்றும் இல்லை என்று தான் தோன்றியது. அவள் கன்னங்கரிய பின்னலில் பிறைச் சந்திரன் போல மல்லிகைப் பூ தொடுத்துக் கட்டப்பட்டிருந்தது பார்ப்பதற்கு மிகவும் அழகாகத்தான் இருந்தது. வெள்ளைப் புடவையும் ஊதாக் கலர் ரவிக்கையும் அவளுக்கு உடம்புக்கு ஒன்றும் ஏற்படவில்லை என்பதைப் பறை சாற்றிக் கொண்டிருந்தன.

என்ன இருந்தாலும் கோபம் வந்தால் கூடக் கமலா இப்படியெல்லாம் நடந்து கொண்டதில்லையே! மாமியாராயிருந்தாலும் சரி, மாமனாராயிருந்தாலும் சரி, பெரியவர்கள்-சின்னவர்கள் என்று கமலா பார்ப்பதில்லை. தனக்கு மனத்தில் சரி என்று பட்டதைப் பயமின்றிச் சொல்லும் சுபாவம் வாய்ந்தவள். ஒருநாள், இரண்டு நாள் இல்லை; எட்டு வருஷமாகப் பார்த்துக் கொண்டு வருகிறேன். கோபம் வந்தால் அவள் நடந்து கொள்ளுவதே வேறு விதமாகத் தான் இருக்கும். ஆனால் இன்று புது மாட்டுப் பெண்ணைப் போல முகத்தை மறைத்துக் கொண்டு அவள் படுத்திருந்ததன் கருத்து எவ்வளவோ மூளையைச் செலவிட்டும் எனக்குச் சரியாக விளங்கவில்லை.

காரணம் என்னவாயிருக்கலாம் என்பதை அறிவதற்காக அவள் மோவாய்க் கட்டையை நிமிர்த்தினேன். ஆனால் ஊஹூம், என் ஜபம் சாயவில்லை. முகத்தைச் சிணுங்கிக் கொண்டு முனகினாளே தவிர, என்னைத் தலை நிமிர்ந்து பார்க்கவில்லை. துயரம் ஏற்பட்டிருந்தாலோ, அழுகை வந்தாலோ அழட்டுமே! அவளை யார் தடுக்கிறார்கள்! விரகதாபமோ என்றால் அதற்கும் நியாயம் இல்லை. அப்படியிருக்கும் பொழுது இந்த வெட்கமும் சங்கோசமும் ஏன்! பெண்ணைக் கூட அல்லவா பேச விடமாட்டேன் என்கிறாள்!

என் மனத்தில் விதவிதமான சந்தேகங்கள் எழலாயின. எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. பாவி மனம் சும்மா இருந்தால் தானே! இல்லாத குதர்க்கங்களுக்கும் கற்பனைகளுக்கும் சந்தேகங்களுக்கும் இடம் கொடுத்துவிட்டது. கமலா ஏதாவது தீய செயல் செய்திருப்பாளோ! அதைப் பெண் பார்த்திருப்பாளோ! இல்லாவிட்டால் என்னிடம் அவள் ஏதோ சொல்ல வரும்பொழுது வாயை இப்படிப் பொத்துவானேன்! (அடுத்த இதழில் முடியும்)



சௌடி அரேபியா—2

பிரிட்டிஷாரின் தூண்டுதலுக்கிணங்க, துருக்கி சுல்தான் கலீபாவுக்கு விரோதமாக ஹுஸேன் புரட்சியை ஆரம்பித்தார் அல்லவா? இந்தியா முதலிய நாடுகளில் ஹுஸேனின் செல்வாக்கு குறைந்ததற்கு அதுதான் காரணம். அதற்கு மாறாக இபின் சௌத் சாமர்த்தியமாக நடுநிலைமை வகித்ததால் ஆசியா நாடுகளில் அவரது செல்வாக்கு அதிகமாயிற்று.

யுத்தம் முடிந்த பின் ஹுஸேன், இபின் சௌத் இவ்விரு மன்னர்களையும் தங்களுடைய கருவிகளாக உபயோகிக்கப் பிரிட்டிஷார் முயற்சித்தனர். ஆனால் அவர்களுடைய வலையில் தந்திரசாலியான இபின் சௌத் மன்னர் விழவில்லை.

1918-ம் ஆண்டில் ஏற்பட்ட எல்லைத் தகராறு மேற்படி இரண்டு மன்னர்களுக்கும் ஏற்கெனவே இருந்து வந்த புகைச்சலை அதிகமாக்கியது. எனவே ஹுஸேன் மன்னர் பிரிட்டிஷாரின் உதவியை நாடினார். ஹுஸேனின் கையைப் பலப்படுத்துவதற்காகப் பிரிட்டிஷார் அவருடைய புதல்வர்களில் ஒருவரான பெய்ஸலைச் சிரியா நாட்டின் மன்னராகவும், மற்றொருவரான அப்துல்லாவைத் திரான்ஸ் ஜார்டன் மன்னராகவும் நியமனம் செய்வதில் வெற்றி பெற்றார்கள்.

ஆனால் அந்த வெற்றி நீடிக்கவில்லை. ஏனெனில் சிரியா மன்னரான பெய்ஸலைப் பிரஞ்சுக்காரர்கள் அங்கிருந்து விரட்டியடித்து விட்டார்கள். தங்களுக்கு ஏற்பட்ட மேற்படி தோல்வியை மறைப்பதற்காகவே பிரிட்டிஷார் பெய்ஸலை பிறகு ஈராக் மன்னராக நியமித்தனர். (அவ்விதம் ஈராக் மன்னராக நியமிக்கப்பட்ட பெய்ஸல் சம்பந்தமான மற்ற விவரங்கள் 'ஈராக் நாட்டைப் பற்றிய கட்டுரைகளிலே வெளியாகியுள்ளன.)

அப்போது பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரியாக இருந்த லார்டு கர்ஸன், ஹுஸேன் மன்னருக்குப் பரிந்துகொண்டு இபின் சௌத்தை எச்சரித்தார். எனினும் இபின் சௌத் அந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல், போர் தொடர்ந்து ஹுஸேனின் படைகளை முறியடித்தார்.

• • •

ஹுஸேன் அரேபியாவின் ஒரு பகுதியான ஹெஜாஸ் மன்னராக இருந்த போது, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அதாவது 1924-ம் வருஷம் அங்கோராவில் நடந்த துருக்கி பார்லிமெண்டு, முஸ்லிம்களுக்கெல்லாம் குருவாகவும் மன்னராகவும் திகழ்ந்த கலீபாவின் பதவியையும் பட்டத்தையும் ரத்து செய்தது.

அந்தச் சமயத்திலே ஹுஸேன் தாம்தான் இனி கலீபா என்று தம்மைத்தாமே பிரகடனம் செய்து கொண்டார். ஆனால் இபின் சௌத் மன்னரின் பிரசாரத் திறமையினால், ஹுஸேனின் பிரகடனம் செவிடன் காதில் சங்கு ஊதிய கதையாக முடிந்தது. அவரது பிரகடனத்தை முஸ்லிம் நாடுகள் ஏளனம் செய்தன. ஹுஸேனின் வேஷத்தை அம்பலமாக்கும் முயற்சியில் ஈடுபட்ட இபின் சௌத்தைப் பாராட்டின. அப்போது இந்தியாவிலிருந்து கிலாபத் கமிட்டி கூட இபின் சௌத் மன்னரின் முயற்சியைப் பாராட்டி அவருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியது.

தாங்கள் எதிர்பார்த்ததற்கு விரோதமாகக் காற்று வேறு பக்கம் அடிக்கவே, பிரிட்டிஷாரும் ஹுஸேன் விஷயத்தில் கையை விரித்து விட்டார்கள். அவருக்கு மேற்கொண்டு ஆதரவு அளிக்க மறுத்ததுடன், அவருக்குக் கொடுத்து வந்த உதவித் தொகையையும் நிறுத்தி விட்டார்கள். எனவே ஹுஸேன் நிர்க்கதியாகத் தவிக்க நேர்ந்தது. அதன்பின் நிகழ்ந்த பல்வேறு சம்பவங்களும் இபின் சௌத் மன்னருக்குச் சாதகமாக இருந்ததால் அரேபியாவில் பெரும் பகுதியும் அவர் வசமாகி சௌடி அரேபியா என்று வழங்கலாயிற்று.

பிரிட்டிஷ் பாதுகாப்பின் கீழ் உள்ள அரபு நாடுகளைத் தாக்குவதில்லை என்று இபின் சௌத் உறுதி கூறியதன் மீது பிரிட்டிஷார் சௌடி அரேபியாவின் சுயேச்சையை அங்கீகரித்தனர். இவ்வாறாக அரேபியாவில் சிதறிக் கிடந்த சிற்றரசுகளை ஒன்று சேர்த்துத் தன் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வருவதில் இபின் சௌத் இறுதியாக வெற்றி பெற்றார்.

இரண்டாவது உலக மகாயுத்தத்தின் போது சௌடி அரேபியா நேச நாடுகள்

விஷயத்தில் அனுதாபம் காட்டியது. எனினும், 1945—ம் வருஷம் வரையில் அது போரில் நேரடியாக ஈடுபடவில்லை.



இபின் சௌத் மன்னர்

* * *

இபின் சௌத் மன்னர் தமக்குப் போட்டியாக இருந்த சிற்றரசர்களைச் சிதறடித்த பிறகு, ஆக்க வேலைகளில் ஈடுபட்டார். அவரது ஆட்சியில்தான் அரேபியாவிலே விமானங்கள், மோட்டார்கள், டெலிபோன்கள் முதலிய நவீனவசதிகள் ஏற்பட்டன. பண்டைய பழக்க வழக்கங்களில் ஊறிய அராபியர்கள் மேற்படி நவீன வசதிகள் ஏற்படுவதைக் கூட விரும்பவில்லை. எனவே அவர்கள் இபின் சௌத் மன்னருக்கு விரோதமாகப் புரட்சி செய்யலாயினர்!

1929-ல் ஏற்பட்ட மேற்படி புரட்சியை அடக்கியதும் அடக்காததுமாக இபின் சௌத் மற்றொரு பெரிய நெருக்கடியைச் சமாளிக்க வேண்டியிருந்தது.

முதலாவது மகாயுத்தத்தின் விளைவாக 1930-ம் வருஷத்திலிருந்து உலகம் முழுதும் வர்த்தக மந்தம் உண்டாகி எல்லா நாடுகளும் திக்குமுக்காடின அல்லவா? அந்த நெருக்கடி சௌடி அரேபியாவையும் ஆட்கொண்டது.

சௌடி அரேபியாவின் தலைநகரும் முஸ்லிம்களின் புனித ஸ்தலமுமான மெக்காவுக்கு வருஷா வருஷம் வெளி நாடுகளிலிருந்து லட்சக்கணக்கான யாத்ரீகர்கள் வருகிறார்கள். அவர்கள் மூலம் கிடைக்கும் வருமானமே அரேபியா சர்க்காரின் முக்கிய வருமான இனமாக இருந்து வருகிறது. அப்போது அரேபியாவில் எண்ணெய் கண்டு பிடிக்கப்படாததால், மேற்படி வருமானமே அந்த நாட்டின் ஜீவநாடியாக இருந்தது.

ஆனால் உலகம் முழுவதும் ஏற்பட்ட வர்த்தக மந்தம் காரணமாக மெக்காவுக்கு வரும் யாத்ரீகர்களின் தொகை மிகவும் குறைந்து விட்டதால், வருமானமும் விழுந்து விட்டது. அதனால் அரேபியாவின் பொருளாதார நிலைமை அடியோடு சீர்குலைந்து எங்கும் வறுமையும் துன்பமும் தாண்டவமாடின.

அந்தச் சந்தர்ப்பத்தை வெளிநாடுகளில் சில தங்களுக்குச் சாதகமாக உபயோகப்படுத்திக் கொள்ள முயற்சித்தன. அரேபியாவில் அபரிமிதமாக மூலதனம் போட்டுத் தொழில் நடத்துவதன் மூலம் அரேபியாவின் பணக் கஷ்டமும் வறுமையும் தீர வழியுண்டு என்று ஆசை வார்த்தைகள் கூறின. ஆனால் இபின் சௌத் மன்னர் அந்த வார்த்தைகளைக் கேட்டு மயங்கவில்லை.

வெளி நாட்டினரின் மூலதனத்தை வரவேற்பதன் மூலம் உடனடியாகக் கஷ்டங்கள் குறையும் என்பது உண்மைதான். எனினும் அதன் விளைவாக நாளடைவில் பொருளாதாரத் துறையிலே வெளி நாட்டினரின் ஆதிக்கம் ஏற்படும். பிறகு அந்த ஆதிக்கம் அரசியல் துறைகளிலும் பரவக் கூடும். இறுதியில் அரேபியாவின் சுதந்திரத்துக்கே ஆபத்து நேரலாம் என்று இபின் சௌத் கருதினார். உலகில் சுதந்திரத்தை இழந்த பல நாடுகளின் சரித்திரங்களும் இபின் சௌத் மன்னருக்கு எச்சரிக்கையாக அமைந்தன. எனவே வெளி நாட்டினர் மூலதனத்தைப் போட்டு அரேபியாவின் சுதந்திரத்தை விலைக்கு வாங்குவதை அவர் விரும்பவில்லை. வறுமையாயினும் துன்பமாயினும் சுதந்திரத்தை இழந்து விடக்கூடாது என்று அவர் உறுதி கொண்டார்.

இபின் சௌத்தின் உறுதி கடைசியில் மகத்தான பலனைக் கொடுத்தது. 1933-ம் வருஷம் அரேபியாவில் எண்ணெய் கண்டு பிடிக்கப்பட்டதிலிருந்து அதன் பொருளாதார நிலைமை யாரும் எதிர்பாராதவிதமாக அபிவிருத்தியடைந்தது. பிறகு எப்போதும் போல் யாத்ரீகர்கள் மூலமும் ஏராளமான வருமானம் கிடைக்கத் தொடங்கியது.

எனவே, நாகரிகமற்ற ஜனங்கள் அடங்கிய வறண்ட பாலைவனப் பிரதேசத்தை இவ்வளவு தூரம் அபிவிருத்தியடையும்படி செய்த இபின் சௌத் மன்னரை அராபியர் உலகம் மிகவும் பாராட்டுவதில் ஆச்சரியம் இல்லை.

சௌடி அரேபியாவிலே ஜனநாயக அடிப்படையில் மந்திரி சபையோ, பார்லிமெண்டோ இல்லாததால் இபின் சௌத் மன்னரே இன்றும் அந்த நாட்டின் சர்வாதிகாரியாக விளங்கி வருகிறார்.

மன்னி நல்லவள்

புஷ்யன்

அநசூயாவுக்கு உவகை பொங்கிக் கொண்டிருந்தது. அன்று முதல் தேதி. அவளுடைய கணவன் சம்பளம் வாங்கி வரப் போகிறான். அவளிடம் அதைத் தரப் போகிறான். அவள் புக்ககத்திற்கு வந்து இருபது நாட்கள்தான் ஆகின்றன. அவளுக்கு மாமியாரும் மாமனாரும் கிடையாது. அவள் கணவனுடைய மூத்த சகோதரனும், அவனது மனைவியும்தான் அவளுக்குப் புக்கத்து மனிதர்கள்.

மன்னி ரங்கநாயகி பத்தரைமாற்றுத் தங்கம். அவள் அநசூயாவுடன் மிகவும் அந்நியோன்னியமாகப் பழகி வந்தாள். ரங்கநாயகியிடம் அநசூயாவுக்கு அளவற்ற மதிப்பு ஏற்பட்டு விட்டது. புக்ககம் வந்து இருபது நாட்களே ஆனபோதும் அவள் ரங்கநாயகியிடம் மிகுந்த பற்றுதல் கொண்டு விட்டாள்.

அநசூயாவின் கணவன் பாலசந்திரனும் அவன் சகோதரன் ராமகிருஷ்ணனும் ஒரே கம்பெனியில் உத்தியோகம் வகித்து வந்தார்கள். ராமகிருஷ்ணன் மிகவும் பெருந்தன்மை வாய்ந்தவன் என்பதை அநசூயா வெகு விரைவில் கண்டு கொண்டாள். அவன் பரம சாதுவும் கூட. அவன் வீட்டில் இருக்கும் இடமே தெரியாது. தான் உண்டு, தன் காரியம் உண்டு என்று இருப்பான். பாலசந்திரன் அதற்கு நேர்மாறான குணம் உள்ளவன், கலகலப்பாக இருப்பான். அவன் வீட்டுக்கு வந்து விட்டால் ஒரே சிரிப்பும், கொம்மாளமுமாய்த்தான் இருக்கும். அநசூயாவையும் மன்னி ரங்கநாயகியையும் ஏதாவது கேலி செய்து கொண்டிருப்பான்.

அன்று அநசூயா பாலசந்திரனின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் தகப்பனார் முதல்தேதி சம்பளம் வந்ததும் அப்படியே கொண்டு வந்து அவள் தாயிடம் கொடுப்பார். அவள் தாயார் அதை வைத்துக் கொண்டு வீட்டைத் திறம்பட நிர்வகிப்பாள். பால்காரன், ரேஷன், வீட்டு வாடகை என்று பிரித்து வைத்து அதன் பிரகாரம் செலவு செய்வாள். அதையெல்லாம் மாதா மாதம் பார்த்துப் பழகிய அநசூயாவுக்குத் தன் கணவனும் அப்படியே தன் முழுச் சம்பளத்தையும் தன்னிடம் கொடுத்து நிர்வகிக்கச் சொல்ல வேண்டும் என்று ஆசையாக இருந்தது.

ராமகிருஷ்ணனும் பாலச் சந்திரனும் ஆபீஸிலிருந்து திரும்பி வந்தார்கள். இருவருக்கும் காபியையும், டிபனையும் கொண்டு போய்க் கொடுத்தாள் அநசூயா.

ராமகிருஷ்ணன் டிபன் சாப்பிட்டதும் எழுந்து வாசல் திண்ணையில் கிடந்த ஈஸிசேரில் போய்ச் சாய்ந்து கொண்டான். ரங்கநாயகி சமையலறையில் சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தாள். பாலசந்திரன் தன் அறையில் மேஜையடியில் உட்கார்ந்திருந்தான். அநசூயா மெதுவாக அவனுடைய அறையில் நுழைந்தாள்.

பாலசந்திரன் ஒரு காகிதத்தில் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தான். அவன் தன் பக்கத்தில் அநசூயா நின்று கொண்டிருப்பதைக் கவனிக்கவே யில்லை.

"என்ன, ரொம்பப் பலமாகக் கணக்குப் போடுகிறாற் போலிருக்கிறதே!" என்று கேட்டாள் அநசூயா.

பாலசந்திரன் அவளைப் பார்த்தான். "ஆமாம், அநசூயா! மளிகைக் கடை, வீட்டு வாடகை எல்லாம் எவ்வளவு ஆகிறதென்று பார்த்து மன்னியிடம் கொடுக்க வேண்டும்" என்றான். பிறகு ஜேபியிலிருந்து கற்றை நோட்டுக்களை எடுத்து அதில் ஒரு பத்து ரூபாய் நோட்டை அவளிடம் கொடுத்தான். "இது உன் செலவுக்கு. உன்னிஷ்டப்படி செலவழித்துக் கொள். என்ன?" என்று கண்ணைச் சிமிட்டிக் கொண்டே கூறினான்.

அநசூயா அதை வாங்கிக் கொண்டாள். மனம் கொஞ்சம் சந்தோஷ மடைந்தது. ஆனால் மீதிப் பணத்தை அவனே வைத்துக் கொண்டது, மதனியிடம் கொடுக்க வேண்டும் என்று சொன்னது எல்லாம் அவளுக்கு என்னவோ போலிருந்தது. இருந்தாலும் அவள் அதை அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. "இப்போதுதானே இந்த வீட்டுக்கு வந்திருக்கிறோம். இன்னொரு மாதம் போனால் எல்லாம் பழகிவிடும், குடும்ப நிலையும் புரிந்துவிடும். அப்புறம் தானே தன் கணவனுடைய சம்பளத்தை வாங்கிக் கொள்ளலாம்" என்று எண்ணித் தன் மனத்தைச் சமாதானப்படுத்திக் கொண்டாள்.

அவள் எதிர்பார்த்த அடுத்த மாதமும் வந்தது. அதற்கடுத்த மாதமும் வந்து போயிற்று. ஆனால் அவள் எதிர்பார்த்தபடி அவள் கணவனுடைய சம்பளம் மட்டும் அவள் கைக்கு வரவில்லை.

பாலசந்திரன் மாதா மாதம் சம்பளம் வந்ததும் அநசூயாவிடம் பத்து ரூபாய்

கொடுத்து விடுவாள். அவள் அதைத் தன் இஷ்டப்படி செலவு செய்வாள். வாசலில் வரும் மல்லிகைப்பூ, வளையல், பழம் என்று தனக்கு வேண்டியதை வாங்கிப் பணம் முழுவதையும் பதினைந்து தேதிக்குள் செலவு செய்து விடுவாள். பிறகு 'இன்றைக்குச் சினிமாவுக்குப் போகணும். கோடி வீட்டு மாமியுடன் போகிறேன். இரண்டு ரூபாய் கொடுங்கள்'' என்று பாலச்சந்திரனைக் கேட்பாள்.

"பணம் ஏது, அசூயா? நான்தான் சம்பளம் வந்ததும் உனக்கென்று பத்து ரூபாய் கொடுத்து விடுகிறேன். அது போதவில்லை என்றால் நான் என்ன செய்வது? என்னிடம் பணம் இல்லையே!" என்று முதல் தடவை பொறுமையாய்க் கூறினான்.

அப்புறம் அம்மாதிரி அடிக்கடி அவள் ரூபாய் வேண்டும் என்று தொந்தரவு செய்ய ஆரம்பிக்கவே, "இதோ பார் அசூயா! உன் சொந்தச் செலவுக்கென்று கொடுக்கும் பத்து ரூபாயில் நீ உன் எல்லாத் தேவைகளையும் சரிப்படுத்திக் கொள்ள வேண்டும். அதையெல்லாம் நொடியில் செலவழித்து விட்டு, 'பணம், பணம்' என்றால் நான் திருடத்தான் போக வேண்டும்" என்று எரிந்து விழுந்தான்.

அதிலிருந்து அசூயாவுக்கு ரங்கநாயகியின்பேரில் அசூயை ஏற்பட்டது.

மன்னியின் கணவன் ராமகிருஷ்ணன் தன் மனைவியிடம் தன் முழுச் சம்பளத்தையும் கொடுக்கும்போது தன் கணவனும் ஏன் தன்னிடம் அவனுடைய சம்பளத்தைக் கொடுக்கக் கூடாது? அவளுக்குப் பணத்தைச் சரியாகச் செலவழிக்கத் தெரியாதா? பாலச்சந்திரன் ரங்கநாயகியிடம் ஏன் தன் சம்பளத்தைக் கொடுக்க வேண்டும்? வெறும் பத்து ரூபாயைத் தன்னிடம் கொடுத்து விட்டால் போதுமா? முழுச் சம்பளத்தையும் கொடுத்து விட்டால் அடிக்கடி அவனிடம் பணம் வேண்டும் என்று கேட்கும்படி நேரிடுமா?—இந்த எண்ணம் அசூயாவின் உள்ளத்திலே அசூயையை இன்னும் வளர்த்தது.

மன்னி ரங்கநாயகி யாருக்கும் தெரியாமல் ரகசியமாகப் பணம் சேர்ப்பதாக வேறு அசூயாவுக்குச் சந்தேகம் ஏற்படலாயிற்று. எப்போதும் ரங்கநாயகி பெட்டியைப் பூட்டியே வைத்திருப்பாள். சாதாரணமாக அசூயா பக்கத்திலிருக்கும்போது தன் பெட்டியைத் திறக்கவே மாட்டாள். அப்படித் திறந்தாலும் பரபரவென்று வேண்டியதை எடுத்துக்கொண்டு மூடிவிடுவாள்.

அன்றும் அப்படித்தான் அவள் பெட்டி திறக்கும்போது பக்கத்திலிருந்த அசூயா, "அது என்ன மன்னி, புதுசாக இருக்கிறதே!" என்று ரவிக்கைத் துணியை எடுத்தாள். அப்படியே பெட்டியையும் மெள்ளக் கிளறினாள்.

"அதையெல்லாம் எதற்குக் கிளறுகிறாய், அசூயா?" என்று 'டக்'கென்று பெட்டியை மூடி விட்டாள் ரங்கநாயகி.

அதன் காரணமாக அசூயாவினுடைய சந்தேகம் மேலும் ஊர்ஜிதமாயிற்று. ரங்கநாயகி ரகசியமாகப் பணம் சேர்ப்பதாகவே நம்பினாள்.

'இவளுக்கு ஏது பணம்? தன் கணவனும் அவள் கணவனும் கொண்டு வந்து கொடுப்பதால் தானே அவளால் சேர்க்க முடிகிறது? பாலச்சந்திரன் கொண்டு வந்து கொடுக்கும் பணத்தையெல்லாம் செலவழித்து விட்டு, ராமகிருஷ்ணன் சம்பளத்திலிருந்து மீதம் பிடித்து வைத்துக் கொள்கிறாள். இல்லாவிட்டால் வேறு ஏது பணம்?

'வீட்டை நிர்வகிக்க மன்னியால் தான் முடியுமா? நம்மால் முடியாதா?'—இந்தத் தடவை சம்பளம் வந்ததும் தானே வாங்கிக் கொள்வது என்று திட்டமாகத் தீர்மானம் செய்து கொண்டாள் அசூயா.



ஆனால் பாலச்சந்திரன் சம்பளத்தை அவள் எதிர் பார்த்தபடி அவளிடம் கொடுக்கவில்லை.

"இதோ பார், அசூயா! அனாவசியமாகச் சண்டையில் இறங்காதே. மன்னி தான் இத்தனை நாளாகக் குடும்பத்தைக் கவனித்துக் கொண்டு வருகிறாள். அவளைப்போல் நிர்வகிக்க உன்னால் முடியாது. உனக்குத்தான் பத்து ரூபாய் கொடுத்து வருகிறேனே! வேண்டுமானால் இன்னும் ஐந்து ரூபாய் தருகி

தேன். முழுச் சம்பளத்தையும் உன்னிடம் கொடுக்க முடியாது" என்றான்.

"மன்னி என்ன ஒசத்தி? என்னால் பொறுப்பை நிர்வகிக்க முடியாதா? அவள் யார்? அவளிடம் நீங்கள் பணத்தைக் கொடுப்பதற்கு? தெருவில் போகும் பிச்சைக்காரிக்குக் கொடுப்பது போல் பத்தும் பதினைந்தும் என்னிடம் எறிந்து விட்டால் போதுமா? அப்படிப்பட்ட பணம் எனக்கு வேண்டவே வேண்டாம்" என்று கோபமாகக் கூறி அவன் கொடுத்த பத்து ரூபாய் நோட்டை மேஜையின் மேல் வீசி எறிந்தாள்.

பாலசந்திரனுக்கும் கோபம் வந்தது. "இஷ்டமிருந்தால் எடுத்துக் கொள். இல்லாவிட்டால் போ! நல்லதாகப் போயிற்று. ஆனால் நீ நினைப்பது போல் உன் கைக்குப் பணம் வராது என்பதை மட்டும் தெரிந்துகொள்" என்று இரைந்தான்.

"என்ன ரகளை, பாலு?" என்று கேட்டுக் கொண்டே வந்தான் ராமகிருஷ்ணன்.

"ஒன்றுமில்லை, அண்ணா!" என்றான் பாலு, 'டக்'கென்று தன்னை அடக்கிக் கொண்டு. அதற்குள் அசூயா உள்ளே போய் விட்டாள்.

அவளுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. 'கட்டின மனைவி நாம் இருக்க மன்னியிடம் பணத்தைக் கொடுப்பதென்ன?' என்று அவளுக்கு ஆத்திரம். ஆனால் அதை அவள் யாரிடம் சொல்லிக் கொள்ள முடியும்? அழுதாள், ஆத்திரம் தீர அழுதாள். தனியாக உட்கார்ந்து அழுதாள். அவளுக்குத் தன்னுடைய ஜம்பம் சாயும் என்று தோன்றவில்லை. இருந்தாலும் உள்ளுக்குள் குமுறிக் கொண்டிருந்தாள்.



அடுத்த முதல் தேதியின் போது, 'இன்றைக்கு எப்படியாவது பெரிய ரகளை கட்டி இரண்டில் ஒன்று நிர்மாணித்தாக வேண்டும்' என்று அசூயா கங்கணம் கட்டிக் கொண்டிருந்தாள். இந்த வீட்டில் மன்னியின் தயவில் தான் வாழ முடியாது என்று கூறிவிடவும் அவள் தன்னைத் தயார்ப் படுத்திக் கொண்டாள். தன் வழிக்குப் பாலசந்திரன் வரவில்லையென்றால் பிறந்தகம் போய் விடப் போவதாகப் பயமுறுத்த வேண்டும் என்றும் திட்டம் போட்டுக் கொண்டாள்.

சாயந்திரம் பாலசந்திரன் ஆபீஸிலிருந்து வந்ததும், "அசூயா" என்று சந்தோஷத்துடன் கூப்பிட்டான். அதைக் கேட்டு அவனுடைய அறையில் நுழைந்தாள். பாலசந்திரன் மேஜை மேல் இருந்த ஒரு வஸ்துவையே பார்த்துக் கொண்டிருந்தான். அதன் மேல் விளக்கு வெளிச்சம் பட்டதால் உண்டான பிரகாசம் அவள் கண்களைப் பறித்தது. வைரத்தோடுகள் ஜாஜ்வல்யமாக ஜொலித்துக் கொண்டிருந்தன.

"ஏது இது? யாருக்கு?" என்று கேட்டாள் அசூயா. அவள் குரலில் சந்தோஷம் இல்லை. மன்னி பணத்தை மீதம் பிடித்துத் தனக்காக வாங்கி வரச் சொல்லியிருக்க வேண்டும் என்று அவள் உள்ளத்திலே எழுந்த எண்ணம்தான் அதற்குக் காரணம்.

"ஏது என்று கேட்கிறாய்? வாங்கி வந்தேன். யாருக்கு என்று கேட்கிறாய்?" என்று சொல்லி விட்டு "மன்னி!" என்று கூப்பிட்டான்.

மன்னி ரங்கநாயகி தன் குழந்தையுடன் வந்தாள். "வா, மன்னி! வந்து பார். உனக்குப் பிடித்திருக்கிறதா? உனக்குப் பிடித்திருந்தால் சரிதான்" என்றான் பாலசந்திரன்.

இடையிலிருந்த குழந்தையைக் கீழே இறக்கி விட்டு "ரொம்ப ஜோரா யிருக்கிறதே! என்ன விலை?" என்று கேட்டாள் ரங்கநாயகி.

"எண்ணூறு ரூபாய்" என்றான்.

இதை யெல்லாம் பார்த்த அசூயாவுக்கு ஆத்திரமாக இருந்தது. "எண்ணூறு ரூபாயில் வைரத்தோடு! ஹூம்!" என்று பொருமினாள். அடுத்த நிமிஷம்

அந்த அறையில் நிற்கப் பிடிக்காமல் வெளியே போகப் புறப்பட்டாள்.

"எங்கே போகிறாய், அசூயா? வா, இங்கே! இதைப் போட்டுக்கொள். வெள்ளிக்கிழமையும் அதுவுமாக..." என்ற ரங்கநாயகியின் குரலைக் கேட்டுத் திரும்பினாள்.

"நீங்களே போட்டுக் கொள்ளுங்கள்... எனக்கு எதற்கு?" என்றாள் அசூயா.

"என்ன அசூயா, அசடு மாதிரிப் பேசுகிறாயே?...உடைமைக்காரி நீ தான் போட்டுக்கொள்ள வேண்டும்" என்றாள் ரங்கநாயகி.

அந்த வார்த்தைகளைக் கேட்டுத் திடுக்கிட்டாள் அசூயா.

"ஏன் அப்படி விழிக்கிறாய், அசூயா? உனக்குத்தான் இந்த வைரத்தோடு! போட்டுக்கொள்" என்றான் பாலச்சந்திரன்.

ரங்கநாயகி அந்தத் தோடுகளை எடுத்து அசூயாவின் காதுகளில் பூட்டினாள்.


"அசூயா, இந்த வைரத் தோட்டினால் உன் அழகு மேலும் பன் மடங்கு சோபிக்கிறது" என்றாள் மன்னி.

அசூயாவுக்கு அவர்களுடைய இந்தக் காரியம் ஆச்சரியத்தை அளித்தது. 'இரண்டு பேரும் சேர்ந்து தன்னை முட்டாளாக்கப் பார்க்கிறார்களா என்ன?' என்று ஒருகணம் திகைத்தாள்.

அதற்குள்ளாக பாலச்சந்திரன் "அசூயா, மாதா மாதம் சம்பளம் வந்ததும் எல்லாவற்றையும் உன்னிடம் கொடுத்துவிட வேண்டுமென்று சண்டை பிடிப்பாயே! அப்படியே உன்னிடம் கொடுத்திருந்தால் இப்போது வைரத்தோடு போட்டுக்கொள்ள முடியுமா? பணம் பூராவையும் செலவழித்து விட்டு நிற்பாய். மன்னி செட்டாகச் செலவு செய்து மீதம் பிடிக்கவில்லையென்றால் உனக்கு இதெல்லாம் எப்படிக் கிடைக்கும்? அதுவுமில்லாமல் உன்னிடம் கொடுத்து வைத்து நீயே அப்படி மீதம் பிடித்து வைத்தாலும் நான் ஏதாவது செலவுக்கென்று, உன்னிடமிருந்து வாங்கிக் கொண்டு போய் விடுவேன். ஆனால் மன்னியிடம் கொடுத்து வைப்பதால் அம்மாதிரி கேட்டு வாங்கிக்கொள்ள முடியவில்லை. மன்னி கோபித்துக் கொண்டால் என்ன செய்வது என்று உள்ளூற பயம் உண்டாகும். ஆகவேதான் மன்னியிடம் கொடுத்து வைத்தேன். நீ இந்த வீட்டுக்கு வந்ததிலிருந்து மன்னி உனக்கு வைரத் தோடு வாங்கிப் போட்டுவிட வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தாள். அதைச் சாதித்தும் விட்டாள்!" என்றான்.

இதைக் கேட்டதும் அசூயா தன் தப்பு அபிப்பிராயத்தை நினைத்து வருத்தப்பட்டாள். "நம் மீது இவ்வளவு அன்பு வைத்திருக்கும் மன்னியைச் சந்தேகித்தோமே! ரகசியமாகப் பணம் சேர்த்து வைத்திருக்கிறாள் என்று நினைத்தோமே! என்ன அறியாமை!" என்று வருத்தப்பட்டாள். அவளுடைய கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது.

"மன்னி! என்னை மன்னிப்பீர்களா?" என்று அளவிறந்த பிரேமையுடன் அசூயா ரங்கநாயகியின் மார்பில் சாய்ந்தாள்.



கணித மேதைகள்

'பயபாக் தேற்றம்' என்ற பெயர் கொண்ட (ஒன்பது புள்ளி வட்டத்தின் அரிய லட்சணமாகிய) உண்மையைக் கணித வல்லுநர்களும் வியக்கும் வண்ணம் விளக்கிய ஹரிஜன மாணவர் திரு எ. பொன்னையா பி. எஸ்ஸி. அவர்களையும், அந்த பயபாக் தேற்ற விளக்கத்தை ஆராய்ச்சிக்குப் பயன்படும்படி சித்திரங்கள் வரைந்து உதவிய மாணவர் திரு பி. முத்துராமலிங்கம் அவர்களையும் இந்தப் படத்தில் காணலாம்.

மேற்படி மாணவர்களின் ஆராய்ச்சித் திறனைப் பாராட்டி உசிலம்பட்டி உயர்நிலைப் பள்ளி ஆண்டு விழாவில் இந்திய கணித மகாநாட்டுத் தலைவரால் இரண்டு பதக்கங்கள் வழங்கப் பட்டன.

மலச்சிக்கல், வயிற்றுவலி, பித்தம் ஆகியவற்றை குணப்படுத்திக் கொள்ளுங்கள்

மருந்து போர்ட் அங்கீகரித்துள்ள இந்த ஔஷதம் புத்துயிரும் புதிய உணர்ச்சியும் அளிக்கிறது.

மலச்சிக்கல் உங்கள் வாழ்வையே பாழ்படுத்தக் கூடியது. அது பெருந் தொல்லைகளையும் துன்பங்களையும் தருகிறது. மருந்து போர்ட் அங்கீகரித்த பைல் பீன்ஸை ஒழுங்காக உட்கொண்டு ஆபத்தான நோய்களிலிருந்து மீட்சி பெறுங்கள். பைல் பீன்ஸ் உங்கள் உடலை ஒழுங்கான முறையில் இயங்கச் செய்கிறது. ரத்தத்தைச் சுத்தி செய்கிறது. உங்களை சோர்வும் அயர்ச்சியும் அடையச் செய்யும் கொடிய அசுத்தங்களை அகற்றுகிறது. பைல் பீன்ஸ் உங்களை வயிற்றுவலி, பித்தம், தலைவலி, மதமதப்பு, மற்ற இதர நோய்களினின்றும் பாதுகாக்கிறது. பைல் பீன்ஸ் சாறுக்கு வலுவளிக்கிறது. எனவே அஜீர்ணம் உண்டாகுமே, அழகு குன்றிப் போகுமே என்கிற பயம் ஏதுமின்றி நீங்கள் உங்களுக்கு வேண்டியதைச் சாப்பிடலாம். பைல் பீன்ஸ் உங்களுக்குப் புத்துயிர், புதிய உணர்வு, வாலிபம் ஆகியவற்றை அளிக்கும். பைல் பீன்ஸ் உங்களது கண்களுக்கு ஒளியும், தேகத்திற்கு காந்தியும் தந்து உங்களை ஒய்யாரமாகவும் வசீகரமாகவும் தோன்றச்செய்யும்.

மருந்து போர்டார் அங்கீகரித்துள்ள உண்மையான பைல் பீன்ஸையே ஒழுங்காக உட்கொள்ளுங்கள். எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.



FBY: 6

பாக்கெட் ரப்பர் பிரஸ்



எல்லா ஆங்கில எழுத்துக்களும் கொண்ட சிறிய அச்சடிக்கும் இயந்திரம் இது. ஒன்றை வாங்கி ஐந்தே நிமிஷங்களில் உங்களது லெட்டர் பாடுகள், பில்கள், பெயர்கள் இவைகளை அச்சடித்துக்கொள்ளுங்கள். மிகவும் ஆச்சரியகரமான நவீனம். அச்சடிக்கும் பாடு, இங்க், விவரங்களடங்கிய குறிப்புகள் சகலமும் உள்பட ஒன்றின் விலை ரூ. 6/- வி. பி. பி. சார்ஜ் ரூ. 1-4 தனி.

டெலிகிராபி டெமை: தந்தியடிக்கக் கற்றுக்கொண்டு பழக ஓர் உயர்ந்த கருவி. கற்றுக்கொண்டு வேலைக்கு முயற்சி செய்யுங்கள். 15 தினங்களில் கற்றுக்கொள்ளலாம். ஒன்றின் விலை ரூ. 5/- தபால் செலவு ரூ. 1/4 தனி. டெலிகிராபி டீச்சர் ரூ. 1/8; தபால் செலவு அணா 8 தனி.

SANSAR TRADING Co (PDK)

KANWARIGANJ. ALIGARH. U. P. [INDIA]



என்றும் உங்கள் கூட்டாளி

நீங்கள் வெளியே செல்லும் போதும், வீட்டிலே தங்கும்போதும் ஐடியால் உங்களுக்கு க்ஷேமத்தை யளிக்கும் கூட்டாளியாக விளங்கும். நீங்கள் அதை பூர்ண நம்பிக்கையுடன் உபயோகிக்கலாம்.

நோய் நிவாரணி, கிருமி நாசினி, நறுமணத்துடன் கூடியது. விஷக் கலப்பற்றது.

தயாரிப்பாளர்:
தி மைசூர் இண்டஸ்ட்ரியல் அண்ட் டெஸ்டிங் லாபரேட்டரி லிமிடெட்.
மல்லேஸ்வரம், பெங்களூர்

விற்பனை ஏஜண்டுகள்:
பெஸ்ட் அண்ட் கம்பெனி லிமிடெட்,
தபால் பெட்டி நெ. 63, சென்னை

BZ. 35 TM.



உடல் வலிமையுள்ள குதூகலமான குழந்தைகளுக்கு



உங்கள் குழந்தைக்கு கிளாக்ஸோ கொடுப்பதால் அவனுக்கு பலமுள்ள கைகால்களும், ஒழுங்கான பற்களும், திடமான சதையும் வளர உதவுகிறீர்கள். மிகவும் சிறந்த பசும்பாலிலிருந்து தயாரித்த கிளாக்ஸோவில் விடமின் 'டி', அயம் மற்றும் ஆரோக்கியத்திற்கும், உடல் வலிமைக்கும் தேவையான சத்துக்கள் எல்லாம் சேர்க்கப்பட்டிருக்கின்றன. தேக ஆரோக்கியத்துடன் வளருவதற்கான உணவை அளிப்பதுதான், ஒரு தாய் தன் மகவுக்குச் செய்யக் கூடிய பேருதவி.



Glaxo

கிளாக்ஸோ குழந்தைகளுக்கான பால் உணவு

கிளாக்ஸோ லெபரட்டரீஸ் (இந்தியா) லிட்., பம்பாய் • கல்கத்தா • மதராஸ்

 L.A.S. (B)

Edited, Printed and Published by R. Krishnamurthy at "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras

REGD. No. M. 4392

